Uthayan.com

# உதயன்

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.25
கொழும்பு : ரூபா.30

UTHAYAN - A Lively National Tamil Daily

பக்கம் 24 | சுடர்: 28 | கதிர்: 172 | வள்ளுவர் ஆண்டு: 2044 | வைகாசி 3, வெள்ளி 17.05.2013



தெளிவான வானிலை. சிறு மழைக்கான சாத்தியம் உண்டு.

34°C 27°C

**உலகம்**



பக். 06

லெனின் உடல் பார்வைக்கு

**செய்திகள்**



பக். 09

நாகபூசணி ஆலயத்தினுள் புகைப்படம் எடுக்கத் தடை

**விளையாட்டு**



பக். 22

சூதாட்டம்: ஸ்ரீசாந்த் உட்பட மூவர் கைது

# உறவுகளை நினைவுகூர தடையில்லை

## முள்ளிவாய்க்கால் நினைவு நிகழ்வு குறித்து இராணுவப் பேச்சாளர்

கொழும்பு, மே 17

முள்ளிவாய்க்காலில் உயிர் நீத்த தமது உறவுகளை நினைவு கூர்ந்து அஞ்சலி செலுத்துவதற்கு தமிழ் மக்களுக்கு எந்தத் தடையும் கிடையாது என்று இலங்கை இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய தெரிவித்துள்ளார்.

2009ஆம் ஆண்டு மே 18ஆம் திகதி முள்ளிவாய்க்காலில் ஆகுதியான உறவுகளை நினைத்து முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகள் தமிழ் மக்களால் அனுஷ்டிக்கப்படவுள்ளன.



தமிழர் தாயகப் பகுதிகளிலும், புலம்பெயர் நாடுகளிலும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகள் நாளை உணர்ச்சிபூர்வமாக அனுஷ்டிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

ஆயினும் தாயகத்தில் இந்த நிகழ்வுகளை நடத்துவதற்கு அச்சுறுத்தல்கள் ஏதும் விடுக்கப்படலாம் என்று மக்கள் அச்சம் தெரிவித்திருந்தனர்.

இதுகுறித்து இராணுவப் பேச்சாளரிடம் கேட்டபோது, "எந்தத் தடையும் இல்லை. அவர்கள் வழிபாடு செய்ய முடியும். அதற்கு இராணுவத்தினர் எந்த வகையிலும் தடையாக இருக்கமாட்டார்கள். ஆனால் தமிழீழ விடுதலைப் புலிகளை நினைவு கூர்வதற்கு இடமளிக்கப்படமாட்டாது" என்றார் அவர்.(த-5)

## முசலியில் அரசினால் சிங்கள குடியேற்றம்

### முதற்கட்டமாக 1,500 குடும்பங்கள் அடைக்கலநாதன் எம்.பி. குற்றச்சாட்டு

மன்னார், மே17

முசலிப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் சிங்களக் குடியேற்றங்களைமேற்கொள்வதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்ட அரசு தற்போது ஆயிரத்து 500 சிங்களக் குடும்பங்களைஅங்கு அழைத்து வந்து குடியமர்த்துவதற்கான செயற்பாடுகளை மேற்கொண்டு வருவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் குற்றம் சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"எதிர்வரும் வடக்கு மாகாண சபைத் தேர்தலுக்கு முன் அரசு சிங்களக் குடியேற்றங்களை மன்னார் மாவட்டத்தில் மேற்கொள்வதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றது.

சுமார் 5 ஆயிரம் குடும்பங்களைக் குடியமர்த்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆயினும் போரினால் பாதிக்கப்பட்டு இடப் பெயர்வுகளை சந்தித்த முசலிப் பிரதேசத்தில் உள்ள தமிழ், முஸ்லிம் மக்கள் இதுவரை உரிய முறையில் மீளக் குடியமர்த்தப்படவில்லை.

இந்த நிலையில் முசலியில் சிங்கள மக்களைக் குடியமர்த்தும் முகமாக முதற்கட்டமாக ஆயிரத்து 500 குடும்பங்கள் பஸ்களில் அழைத்து வரப்பட்டுள்ளனர். அவர்கள் அங்கு தற்காலிகக் கொட்டில்களை அமைக்கும் பணிகளில் தற்போது ஈடுபட்டு வருகின்றனர்.

தமிழ், முஸ்லிம் மக்களின் பிரதிநிதிகளைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மிக விரைவில் அழைத்து சிங்கள குடியேற்றம் தொடர்பில் ஆராய்ந்து அதற்கு எதிராக நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளது- என்றார்.(த-வ-12)

## தமிழ்க் கட்சிகளுடன் சொல்ஹெய்ம் பேச்சு

### வடக்கு தேர்தல் குறித்து ஆராய்வு

ஒஸ்லோ, மே 17

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு தொடர்பாக நோர்வேயின் முன்னாள் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் தமிழ்க் கட்சிகள் சிலவற்றைச் சந்தித்து இலங்கை நிலவரம் தொடர்பாகக் கலந்துரையாடியுள்ளார்.

இந்தச் சந்திப்பின் போது இலங்கை அரசு எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்தில் நடத்தத் திட்டமிட்டுள்ள வடக்கு மாகாண சபைத் தேர்தலில் சர்வதேச மேற்பார்வையாளர்களையும் கண்காணிப்பாளர்களையும் ஈடுபடுத்த வேண்டிய தேவை உள்ளதாக தமிழ்க் கட்சிகளின்

தொடர்ச்சி: பக்கம் 24

## 4 ஆம் மாடிக்கு சிவசக்தி ஆனந்தனும்

யாழ்ப்பாணம், மே 17

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனும் பயங்கரவாத தடுப்புப் பிரிவினரால் 4ஆம் மாடிக்கு விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சிறீதரன் மற்றும் சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோர் ஏற்கனவே 4 ஆம் மாடிக்கு அழைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டுள்ளனர்.

தற்போது இந்த வரிசையில்தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனும் 4ஆம் மாடிக்கு செல்கிறார்.

தொடர்ச்சி: பக்கம் 24

## வெளிநாட்டுக்கு செல்லமுயன்ற குருநகர் வாசிகள் 41 பேர் கைது

கொழும்பு, மே 17

வெளிநாட்டுக்குச் செல்ல முயன்ற யாழ்ப்பாணம் குருநகரைச் சேர்ந்த 41 பேர் சிலாபம் பொலிஸாரால் நேற்று வியாழக்கிழமை காலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

வெளிநாட்டுக்கு தப்பிச் செல்வதற்காகப் புத்தளம், சிலாபம் நகரிலுள்ள தனியார் விடுதியொன்றில் தங்கியிருந்துள்ளனர். இவர்கள் இரண்டு தினங்களில் கற்பிட்டி கடல் பகுதியினூடாக வெளிநாடு செல்வதற்கு

தொடர்ச்சி: பக்கம் 24

## முள்ளிவாய்க்கால் நினைவு நாளை யாழ்ப்பாணத்திலும்

யாழ்ப்பாணம், மே 17

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தமிழரசுக் கட்சி அலுவலகத்தில் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

2009 ஆம் ஆண்டு இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரில் தமது உயிர்களை ஆகுதியாக்கிக் கொண்டவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகள் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றன.

நாளை சனிக்கிழமை உறவுகளை நினைத்து ஆலயங்களில் விசேட வழிபாடுகளை மேற்கொள்வதுடன், வீடுகளில் தீபமேற்றி அஞ்சலி செலுத்துமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சேனாதிராசா அழைப்பு விடுத்திருந்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் வவுனியாவில் நாளை முற்பகல் 10 மணிக்கும், யாழ்ப்பாணத்தில் மாலை 5 மணிக்கும் நினைவேந்தல் நிகழ்வுகள் அனுஷ்டிக்கப்படவுள்ளன.

யாழ்ப்பாணம், மார்ட்டீன் வீதியில் அமைந்துள்ள தமிழரசுக் கட்சியின் அலுவலகத்திலேயே இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது. (த-5)

## சர்வதேசத்தை புறந்தள்ளின் விளைவுகள் விபரீதமாகும்

### இலங்கையை எச்சரிக்கிறது பிரிட்டன்

லண்டன், மே 17

மனித உரிமைகள் தொடர்பில் சர்வதேசத்தின் அறிவுரைகளை இலங்கை அரசு தொடர்ந்து புறந்தள்ளி நடந்தால் கொழும்பில் பொது நலவாய மாநாட்டின்போது கடுமையான விளைவுகளை எதிர்கொள்ள நேரிடும் என்று பிரிட்டன் எச்சரித்துள்ளது.

பிரிட்டன் நாடாளுமன்றத்தில் நேற்று பிரதமருக்கான கேள்வி நேரத்தின் போது, அவர் சார்பாகப் பதிலளித்த துணைப் பிரதமர் நிக் கிளெக் இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பிரதமருக்கான கேள்வி

தொடர்ச்சி: பக்கம் 24

## ஐ.நா. விசேட பிரதிநிதி இலங்கை வர விருப்பம்

ஜெனிவா, மே 17

அநீதியான மற்றும் நியாயமற்ற கொலைகளுக்கான ஐ.நாவின் விசேட பிரதிநிதி கிறிஸ்ரொவ் ஹெய்னஸ் தாம் இலங்கைக்கு பயணம் செய்ய விரும்புவதாகத் தெரிவித்தார்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 23 ஆவது கூட்டத் தொடர் அடுத்த வாரத்தில் ஆரம்பமாகவுள்ள நிலையில் இலங்கைக்கு பயணம் செய்வதற்கான தனது வேண்டுகோளைப் பரிசீலிக்குமாறு இலங்கையைக் கேட்டுக் கொள்வதாகவும் அவர் கூறியுள்ளார்.

## பொன்சேகாவிடம் வாக்குமூலம்

கொழும்பு, மே 17

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவிடம் குற்றப்புலனாய்வு பிரிவினர் (சி.ஐ.டி) வாக்குமூலம் பெற்றுக்கொண்டுள்ளனர்.

இராணுவத்தலைமையகத்

தொடர்ச்சி: பக்கம் 24

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய பாதுகாப்பு விடயத்தில் விட்டுக்கொடுப்பு கிடையாது

## அடித்துக் கூறுகிறார் கோத்தபாய



கொழும்பு,மே 17

தேசிய பாதுகாப்பு விடயத்தில் எந்த விட்டுக்கொடுப்புக்கும் தாம் தயாரில்லை என்றும், முன்னைய அரசுகள் செய்த தவறைத் தாம் மீண்டும் செய்யப் போவதில்லை என்றும் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ அடித்துக் கூறி யுள்ளார்.

ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு வழங்கியுள்ள செவ்வியில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

வடக்கில் யாழ்ப்பாணத்திலும், வன்னியிலும், பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு இலங்கை இராணுவத்தினரின் பிரசன்னம் அவசியமானது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

படைகளின் பிரசன்னம் ஒரு அற்பமான விடயம், ஆனால் அது தவிர்க்க முடியாதது. இருந்தபோதிலும் பல்வேறு தரப்புகளும், ஒரு பகுதி ஊடகங்களும், பாதுகாப்பு விவகாரங்களுடன் அரசியல் விளையாட்டு நடத்துகின்றன.

முன்னைய அரசுகள் பாதுகாப்பு நடவடிக்கைகளில் விட்ட தவறுகளால் நாடு மிகக் கடுமையான விலைகளைக் கொடுத்துள்ளது. அதே தவறை மீண்டும் செய்வதற்கு நான் தயாராக இல்லை என்கிறார் கோத்தபாய.

போருக்குப் பின்னர் வடக்கில் குறிப்பாக யாழ்.மாவட்டத்தில் இராணுவத் தலையீடுகளால் முழுமையான குடியியல் ஆட்சியை ஏற்படுத்துவதில் தடங்கல்கள் உள்ளதாக, குற்றச் சாட்டுகளைக் கூறுவோர், 2009 இல் போர் முடிவுக்கு வந்த பின்னர் படிப்படியாக இராணுவத்தினரின் எண்ணிக்கை குறைக்கப்பட்டதைக் கவனத்தில் எடுத்துக் கொள்ளவில்லை. யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றி வன்னியிலும் கூடப் படைக் குறைப்பு செய்யப்பட்டுள்ளமையை அவதானிக்கலாம். ஆயுதப்படைகளின் நிலைகொள்ளலானது, ஓர் அரசியல் விவகாரமாகவோ, எந்தவொரு வெளிநாட்டு சக்திகளின் கலந்துரையாடலுக்கான விவகாரமாகவோ இருக்கக் கூடாது.

எத்தகைய நிலையை எதிர்கொள்வதற்கும் ஏற்ற தயார் நிலையில் ஆயுதப்படையினர் இருக்க வேண்டும் என்று குறிப்பிட்ட அவர், மீண்டும் தீவிரவாத எழுச்சி ஏற்படுவதைத் தடுப்பதற்கான பலமான அரணாக ஆயுதப்படைகளின் நிலைகொள்ளல் அமைந்திருக்கும். யாழ்ப்பாணத்தில் படைகளின் நிலைகொள்ளலைச் சில அரசியல்வாதிகள் அரசுக்கு எதிரான பேரணிகளுக்கான ஆயுதமாகப் பயன்படுத்துகின் றனர். அரசுக்கு எதிரான செயற்படும் அத்தகையவர்களில் ஒருவர் தான் அசாத் சாலி என்றும் கூறினார். (த)

> முன்னைய அரசுகள் பாதுகாப்பு நடவடிக்கைகளில் விட்ட தவறுகளால் நாடு மிகக் கடுமையான விலைகளைக் கொடுத்துள்ளது. அதே தவறை மீண்டும் செய்வதற்கு நான் தயாராக இல்லை என்கிறார் கோத்தபாய.

# நோர்வே தூதுவருக்கு எதிராக மனு தாக்கல்

## உடன்பாட்டை மீறியதாக குமார் ரூபசிங்க குற்றச்சாட்டு

கொழும்பு,மே 17

இராஜதந்திர விலக்குரிமை இருந்தாலும், நோர்வே தூதுவருக்கு எதிராக வழக்குத் தொடுக்க முடியும் என்று கொழும்பு மாவட்ட நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கான நோர்வே தூதுவர் ஹில்டே ஹரால்ட்ஸ் டட், முன்னாள் நோர்வே அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம், நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜோனாஸ் கார் ஸ்ரோர் உள்ளிட்ட 11 நோர்வே அதிகாரிகளுக்கு எதிராக, 98 மில்லியன் ரூபா நட்டஈடு கோரி கலாநிதி குமார் ரூபசிங்க சமர்ப்பித்துள்ள வழக்கின் மீதான விசாரணையின் போதே, கொழும்பு மாவட்ட நீதிபதி அமலி ரணவீர இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான திட்டங்களுக்கு 2008 ஆம் ஆண்டு குமார் ரூபசிங்கவின் நிறுவனத்துடன் நோர்வே மற்றும் பிரிட்டன் தூதரகங்களின் சார்பில் உடன்பாடு செய்து கொள்ளப்பட்டது.

2008 தொடக்கம் 2011ஆம் ஆண்டு வரை அமைதியை ஏற்படுத்துவதற்கான செயற்பாடுகளுக்கு இந்த உடன்பாடு செய்யப்பட்டது. எனினும் 2009 இல் இந்த உடன்பாட்டை நோர்வே அரசு முறித்துக் கொண்டது.

இதற்கு எதிராகவும், தனக்கு வழங்கப்பட வேண்டிய 98 மில்லியன் ரூபா கொடுப் பனவை வழங்க உத்தரவிடக் கோரியும் குமார் ரூபசிங்க வழக்குப் பதிவு செய்திருந்தார்.

எனினும், 1961ஆம் ஆண்டு வியன்னா உடன்பாட்டுக்கு அமைய, இராஜதந்திர விலக்குரிமை தமக்கு உள்ளதாகவும், தமக்கு எதிராக இலங்கையில் வழக்குப் பதிவுசெய்ய முடியாது என்றும் நோர்வே தூதுவர் மற்றும் நோர்வே அதிகாரிகள் சார்பில் பதில் மனு சமர்ப்பிக்கப்பட்டது.

இந்த மனுவையே கொழும்பு மாவட்ட நீதிமன்றம் நிராகரித்துள்ளதுடன், நோர்வே தூதுவருக்கு இராஜதந்திர விலக்குரிமை இருந்தாலும் அவருக்கு எதிராக வழக்குப் பதிவு செய்யலாம் என்று அறிவித்துள்ளது.

கொழும்பு நீதிமன்றத்தின் இந்த உத்தரவு கொழும்பிலுள்ள வெளிநாட்டு இராஜ தந்திர வட்டாரங்களில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (த)

# வைத்தியசாலை பணிப்பாளராக மீண்டும் பவானி

யாழ்ப்பாணம்,மே 17

யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளராக மருத்துவ கலாநிதி திருமதி பவானி பசுபதிராஜா நேற்று மீண்டும் பணியேற்றுக் கொண்டார் என்று பதில் பணிப்பாளர் மருத்துவர் எஸ்.ஸ்ரீபவானந்தராஜா தெரிவித்தார்.

வைத்தியசாலையில் கடந்த வருடம் இதேமாதம் இடம்பெற்ற திருட்டு மற்றும் ஊழல் ஆகியவற்றுடன் பணிப்பாளருக்கும் தொடர்பு இருப்பதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் குற்றஞ்சாட்டியதோடு பணிப்பாளரை பதவி விலகுமாறும் கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டது.

இதனடிப்படையில் பணிப்பாளர் சுகாதார அமைச்சினால் தற்காலிகமாகப் பணி நீக்கம் செய்யப்பட்டு விசாரணைக்காகக் கொழும்புக்கு அழைக்கப்பட்டார். அங்கு விசாரணையின் மூலம் பணிப்பாளருக்கும் திருட்டுக்கும் தொடர்பு இல்லை எனத் தெரிவிக்கப்பட்டதை அடுத்து அவர் பணிப்பாளர் பணியை நேற்றுப் பொறுப்பேற்றுக் கொண்டார் எனத் தெரிவிக்கப்பட்டது. (த-4)

# வாக்காளர் பதிவு புதனன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம்,மே 17

2013ஆம் ஆண்டுக்குரிய வாக்காளர் பதிவு நடவடிக்கைகள் நேற்றுமுன்தினம் புதன்கிழமை முதல் யாழ்.மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. யாழ். மாவட்ட செயலகத் தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

2013ஆம் ஆண்டு வாக்காளர் பதிவுக்குரிய நடவடிக்கைகளில் முதல் கட்டமாக கிராம சேவையாளர்களால் வாக்காளர் பதிவுக்கான விண்ணப்பப் படிவம் வீடு வீடாக விநியோகம் செய்யும் நடவடிக்கைகள் சகல கிராம சேவையாளர் பிரிவுகளிலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கடந்த 15ஆம் திகதி ஆரம்பமான இந்தப் பணிகள் இந்த மாத இறுதி வரை இடம்பெறவுள்ளன.

இந்த வருடம் மாநகர சபை எல்லைக்குட்பட்ட பிரதேசங்கள், நகர சபைக்குட்பட்ட பிரதேசங்களில் முதலில் விண்ணப்பப் படிவங்கள் கிராம சேவையாளர்களிடமிருந்து தேர்தல் செயலகத்தால் பெறப்படும்.

இதற்காக இந்த எல்லைக்குட்பட்ட கிராம சேவையாளர்களுக்கு விசேட கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டு வருகின்றன. (த-5)

# வாகன விபத்தில் முதியவர் சாவு

யாழ்ப்பாணம்,மே 17

வாகன விபத்தில் படுகாயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட முதியவர் சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தார். இந்த விபத்து மட்டுவில் வைரவர் கோயிலடிச் சந்தியில் நேற்று வியாழக்கிழமை மதியம் இடம்பெற்றது.

இந்தச் சம்பவத்தில் நுணாவில் சந்தி சாவகச்சேரியைச் சேர்ந்த வைத்திலிங்கம் மகேஸ்வரன் (வயது-67) என்பவரே உயிரிழந்தார். உடனடியாக சாவகச்சேரி வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு அவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். வாகனச் சாரதி சாவகச்சேரி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (த-4)

# ஆஸியில் இலங்கையரின் விஸா ரத்து

கான்பரா,மே 17

ஆஸ்திரேலியாவில் பல்கலைக்கழக மாணவி ஒருவரைப் பாலியல் துன்புறுத்தலுக்கு உட்படுத்தியதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ள இலங்கை இளைஞரின் விஸாவை ரத்து செய்ய அந்நாட்டு அரசு தீர்மானித்துள்ளது.

டி.செல்வராஜா என்ற 21 வயதுடைய இலங்கை இளைஞரின் விஸாவே இவ்வாறு ரத்துச் செய்யப் படவுள்ளது. பல்கலைக்கழக விடுதியில் வைத்து மாணவி ஒருவரைக் குறித்த இளைஞர் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது. அதன் பின்னர் குறித்த இளைஞர் கைது செய்யப்பட்டு அவர் மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வழக்கை விசாரித்த நீதிபதி மாணவருக்குப் பிணை வழங்கினார். ஆஸ்திரேலியாவில் புகலிடம் கோரி குறித்த இளைஞன் அங்கு தங்கியிருந்த தாகவும் அவருக்குத் தற்காலிக விஸா அளிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (த)

# காரைக்கால் மீனவர் இன்று கடையடைப்பு

## இலங்கைச் சிறையிலுள்ள மீனவரை விடுவிக்கக்கோரி

இலங்கை சிறையில் உள்ள காரைக்கால் மீனவர்கள் 26 பேரையும் உடனடியாக விடுவிக்க நடவடிக்கை எடுக்கக் கோரி இன்று வெள்ளிக்கிழமை காரைக்காலில் மீனவர்கள் 'முழு கடை அடைப்பு' போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

காரைக்காலில் உள்ள 11 மீனவ கிராமங்களைச் சேர்ந்த கிராமத்தலைவர்கள் ஒன்று கூடி இந்த முடிவுக்கு வந்துள்ளனர்.

கடையடைப்பில் கலந்து கொண்டு தமது போராட்டத்தை வெற்றி அடையச் செய்ய ஒத்துழைப்பு அளிக்குமாறு அவர்கள் வர்த்தக சங்கத்தினர்களையும், பஸ், ஓட்டோ, கார், வான், லொறி சாரதிகளையும் உரிமையாளர்களையும், சகல வர்த்தகர்களையும் கேட்டுள்ளனர்.

காரைக்கால் மீன்பிடி துறைமுகத்திலிருந்து கடந்த ஏப்ரல் 3 ஆம் திகதி அதிகாலை காரைக்கால் மாவட்டத்தைச் சேர்ந்த சுமார் 50 இற்கும் மேற்பட்ட ஆழ்கடல் விசைப்படகுகளில் சுமார் 300 இற்கும் மேற்பட்ட மீனவர்கள் கடலுக்கு மீன் பிடிக்கச் சென்றனர்.

நள்ளிரவு 1.30 மணியளவில் கோடியக்கரையிலிருந்து தென் கிழக்கே 8 நாட்டிக் கடல் மைல் தொலைவில் அவர்கள் மீன் பிடித்துக் கொண்டிருந்தபோது அங்கு ரோந்து படகில் வந்த இலங்கை கடற்படையினர் காரைக்கால் மேடு மற்றும் பட்டினச்சேரியை சேர்ந்த 5 மீன் பிடி படகுகளையும், அவற்றில் மீன்பிடித்துக் கொண்டிருந்த 26 மீனவர்களையும் சிறை பிடித்து இலங்கைக்குக் கொண்டு சென்றனர். (வ)

> 11 மீனவக் கிராமங்களைச் சேர்ந்த கிராமத் தலைவர்கள் ஒன்று கூடி இந்த முடி வுக்கு வந்துள்ளனர்.

# தமிழ் மக்கள் மீது தங்காலையில் தாக்குதல்

யாழ்ப்பாணம்,மே 17

தங்காலையிலுள்ள தமிழ் மக்களின் வீடுகளுக்குள் புகுந்த பெரும்பான்மையினத்தவர்கள் தமிழ் மக்களையும் அவர்களின் வீடுகளையும் அடித்து நொறுக்கியுள்ளனர். இதனால் 15 வீடுகள் சேதமானதுடன் இருவர் காயமடைந்துள்ளனர்.

ஆயுதங்களுடன் திடீரென புகுந்த கும்பல் தம்மைத் தாக்கியதால் தப்பித்து காடுகளுக்குள் ஓடியதாகவும் பின்னர் சம்பவத்தை பொலிஸாருக்கு அறிவித்து நீண்ட நேரத்தின் பின்னரே பொலிஸார் வந்ததாகவும் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் தெரிவித்தனர்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பிறந்த இடமான அம்பாந்தோட்டையில் அமைந்துள்ள தங்காலை நகரிலேயே இந்தச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

அங்கிருந்த தமிழ் மக்களின் வீடுகளை அவர்கள் தேடித் தேடித் தாக்கியதாகவும், இதன்போது சிங்களவர் ஒருவரின் வீடும் தாக்குதலுக்கு உள்ளகியுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மரியவத்தை கிராமத்திலுள்ள தமிழ் பெண்ணுக்கும் அயல்கிராம சிங்கள இளைஞர் ஒருவருக்கும் தவறான தொடர்பு இருப்பதை அறிந்த பெண்ணின் மகன் கடந்த ஞாயிற்றுக்கிழமை அந்த சிங்கள இளைஞரை தாக்கியுள்ளார். இதன் பின்னணியிலேயே மக்கள்மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (த-5)

# இலங்கை அகதிகளுக்கு சாரதி அனுமதிப் பத்திரம்

சென்னை,மே 17

நலன்புரி நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக மாநிலத்திலுள்ள இலங்கை அகதிகளுக்குச் சாரதி அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்படுமென அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு அறிவித்துள்ளது.

பல்வேறு கற்கைநெறிகளுக்கான புலமைப் பரிசில் 850 ரூபாவிலிருந்து 4,700 ரூபா வரை அதிகரித்தமை உட்பட இலங்கை அகதிகளுக்கான பல நலன்புரித் திட்டங்களை அரசு விரிவாக்கியுள்ளதெனத் தமிழக சட்டசபையில் தாக்கல் செய்துள்ள பொதுமக்கள் திணைக்களக் கொள்கைக் குறிப்பீட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நலன்புரி நிலையங்களிலுள்ள இலங்கை அகதிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் தகுதியுள்ளவர்களுக்கு சாரதி அனுமதிப்பத்திரங்களை வழங்க இந்த அரசு முடிவு செய்துள்ளதாக அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-5678844, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



# கீற்றாகப் புலப்படுகிறது வட மாகாணசபைத் தேர்தல்

தமிழ் மக்களின் மனதில், வைராக்கியத்தையும் அவநம்பிக்கையையும் அரசு வளர்த்துள்ளது. தான், போரை முடிவுக்குக் கொண்டு வந்துவிட்டதால் வேறொரு நாட்டைக் கைப்பற்றி விட்டதான நிலைப்பாட்டிலும் அது உள்ளது- -

ஜனாதிபதியும் அவரது அரசும், மக்களிடம் தமது தேசாபிமானத்தைக் காட்டவும், அவர்களைச் சிரிக்க வைக்கவும், வெள்ளையர்களைக் கண்டால் ''கோர்ட்'' போடவும் என வெவ்வேறு நடிகர்களை தமது பக்கத்தில் வைத்திருக்கின்றனர்- -

வடக்கில் இராணுவ ஆட்சியே நடைபெறுகிறது. அங்கு வாழும் மக்கள் மங்கல, அமங்கல நிகழ்வுகளை நடத்துவதாயின், இராணுவத்தினரின் அனுமதியைப் பெற வேண்டி உள்ளது. இரும்புப் பாதங்களின் கீழ் அரசு வடக்கு மக்களை மடக்க முயற்சிக்கிறது- -

போரில் இறந்ததாகக் கூறப்படும் மற்றும் காணாமற்போன தமிழ் மக்களுக்கு என்ன நடந்தது என்பதனை அரசு நாட்டு மக்களுக்குத் தெரிவிக்க வேண்டும்- -

இவ்வாறு வலியுறுத்தி உள்ளார் ஜனதா விமுக்தி பெரமுனவின் முக்கியஸ்தரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அநுர குமர திஸநாயக்கா. ஊடகவியலாளர் மாநாடு ஒன்றில் கருத்து வெளியிடுகையிலேயே, அரசின் செயற்பாடுகளை அவர் மேற்கண்டவாறு விமர்சித்திருக்கிறார்.

வடமாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு, அரசாங்கம் உத்தேசமாக முடிவு செய்துவிட்டது என்பது ஓரளவுக்கு மினுங்கி வரும் நிலையில், அது தென்னிலங்கை அரசியல் கட்சிகளின் கண்களையும் ஈர்ந்துள்ளது. உத்தியோகபூர்வ அறிவிப்பு வந்த பின்னரே அவை எந்தப் பக்கம் சார்ந்து- சாய்ந்து -நிற்கப் போகின்றன என்ற விவரங்கள் வெளிச்சமாகும்.

வடமாகாண சபைத் தேர்தலை நோக்கி அரசு ஒரு பக்கமும், தென்னிலங்கையின் அரச எதிர்ப்புக் கட்சிகள் மறு பக்கமும், தமிழர் தரப்புக் கட்சிகள் மற்றொரு புறமாகவும் மோதும் என எதிர்பார்க்கலாம்.

போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட கடந்த நான்கு வருடங்களாக, இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் அரசு உண்மையான அக்கறை காட்டவில்லை என்பது அனைத்துலகமும் அறிந்த ஒன்று; உண்மை.

அது மட்டுமன்றி, இலங்கையின் ஒரு பகுதியைத் தான் கைப்பற்றி விட்டதாக வெளிப்படுத்தும் வகையில், நிலையில் நின்றே முரசு கொட்டுகிறது. மற்றொரு நாட்டைத் தான் வென்று எடுத்து விட்டதற்கான செருக்கொடு நிலையில் செயற்பட்டு வருகிறது.

கிடைத்த வெற்றியைத் தக்க வைத்துக் கொள்வதற்கு ஏதுவாக, வடக்கில் இராணுவப் பிரசன்னத்தை இயலும் வகைகளில் எல்லாம் பலப்படுத்தியும் வருகிறது. இந்தப் பின்னணியிலேயே வடக்கு மாகாண சபைத் தேர்தல் பின் தள்ளப்பட்டு வந்தது. இப்போது கூட , பல தரப்புகளின் உந்துதலாலேயே தேர்தலை நடத்துவதற்கு முன்வந்துள்ளது எனலாம். இப்போதும்கூட, நவம்பரில் பொதுநலவாய மாநாடு நடைபெறுவதற்கு முன்னர் வடமாகாண சபைக்கான தேர்தலை நடத்த வேண்டும் என்ற எழுதப்படாத ஒப்பந்தம் ஒன்றுக்கு அமையவே அதற்கான முகிழ்நிலை தென்படுகிறது; இது தப்பன்று.

காணி, பொலிஸ் அதிகாரங்களைக் கழற்றி எடுத்த பின்னரே, வடக்கு மாகாண சபைக்கான தேர்தலை நடத்த வேண்டும் என்ற குரல்கள் எழுவதற்குப் பின்னணியில் இனவாதக் குழுமங்களே திரைக்குப் பின்னால் செயற்படுகின்றன என்ற குற்றச்சாட்டுகளும் உண்டு.

இலங்கை சுதந்திரம் அடைந்த காலத்தில் இருந்தே பெரும்பான்மை இனம், அதனால் அடக்கி ஆளப்படும் சிறுபான்மை இனங்கள் என்ற வாய்ப்பாடு அப்போதைய தென்னிலங்கைத் தலைவர்களால் எழுதப்பட்டது. அது தவறானது என்பதனைப் பகுத்தறியும் தன்மை இன்னமும் உணரப்படவில்லை.

நாட்டில் பல தடவைகள் இனக்கலவரங்களும், வன்செயல்களும் தீப்பிழம்புகளாக கொழுந்துவிட்டு எரிந்தும், முப்பது வருட காலமாக ஆயுதப் போராட்டம் நாட்டை சீர்கெடுத்திய போதிலும், இன சமத்துவத்துடன் கூடிய இன நல்லுறவுக்கு பெரும்பான்மையினர், அவர்களின் அரசியல் தலைவர்கள் இன்னமும் முட்டுக்கட்டையாகவே இருக்கின்றனர்.

இத்தகைய பின்புலத்தில், மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்ட காணி, பொலிஸ் அதிகாரங்களைக் கபளீகரம் செய்யும் அடாத்தான வன்ம நிலைக்கு, வன்நிலைக்கு அரசு முனையுமாயின், போசக்கையான வடக்கு மாகாண சபைத் தேர்தலைத் தமிழ் மக்கள் புறக்கணிப்பர்.

சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, அதிகாரத்தையும் அதனூடு கிடைக்கும் அனுகூலங்களையும் தட்டிப் பறிக்க முயல்வோரையும் மக்கள் புறக்கணிப்பர் என்பதில் ஐயமில்லை.

எதற்கும் இன்னும் சில வாரங்களில், காற்றும் அலைகளும் எத்திசை நோக்கி வீசும் என்பதனைப் பொறுத்திருந்து பார்ப்போமே....!

# தாதியர் கல்லூரியின் உட்கட்டுமான பணி அடுத்த வருடம் பூர்த்தியாகும்

## மேலதிக அரச அதிபர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 17

அடுத்த வருடம் தாதியர் பயிற்சிக் கல்லூரியின் உட்கட்டுமானப் பணிகளைப் பூரணமாக நிறைவேற்ற நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் ரூபினி வரதலிங்கம் தெரிவித்தார்.

சர்வதேச தாதியர் தினத்தை முன்னிட்டு விசேட நிகழ்வுகள் நேற்று தாதியர் பயிற்சிக் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்தும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தொடர்ந்து உரை நிகழ்த்தும்போது தெரிவித்ததாவது:-

குழந்தை பிறப்பிலிருந்து இறப்பு வரை தொடர்புடையவர்கள் தாதியர்கள். இத்தகைய தாதியர்களின் சேவை அளப்பரியது. இறைவனுடைய பணிக்கு ஒப்பான சேவையை வழங்கிவரும் இவர்கள் மதிக்கப்பட வேண்டியவர்கள்.

யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் தாதியர் பற்றாக்குறை, கல்லூரியின் உட்கட்டமைப்பு வசதி, மகப்பேற்று கட்டடவசதி தொடர்பாகவும், தாதியர்களின் தங்குமிட வசதி தொடர்பாகவும் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்திலும், அரச மட்ட அதிகாரிகளின் கலந்துரையாடலிலும் தெரிவித்து வருகிறார்.

அந்தக் கோரிக்கைகளுக்கு அமைவாக அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவி மற்றும் குறிப்பிட்ட திட்டங்கள் ஊடாக நிதியை ஒடுக்கீடு செய்து அதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

புதிய நவீன வசதிகளுடன் தற்போதுள்ள தாதியர் பயிற்சிக் கல்லூரியை மாற்றியமைத்து மாணவர்கள் இலகுவாகக் கற்பதற்கு ஏற்ப உட்கட்டமைப்பு வசதிகளை அடுத்த வருட தாதியர் தினத்துக்கு முன்னர் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்-என்றார்.

இந்த நிகழ்வில் யாழ்.போதனா வைத்தியசாலையின் பதில் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஶ்ரீபவானந்தராஜா, தாதியர் பயிற்சிக் கல்லூரி அதிபர் செல்வி வ.றஜுலாதேவி உட்பட கல்லூரியின் போதனாசிரியர்கள், வைத்தியசாலை ஊழியர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இதில் தாதியர் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு நினைவுச் சின்னங்கள் வழங்கப்பட்டன. (ம-14)

> “ குழந்தை பிறப்பிலிருந்து இறப்பு வரை தொடர்புடையவர்கள் தாதியர்கள். இத்தகைய தாதியர்களின் சேவை அளப்பரியது. இறைவனுடைய பணிக்கு ஒப்பான சேவையை வழங்கிவரும் இவர்கள் மதிக்கப்பட வேண்டியவர்கள்.



*யாழ்ப்பாணம் செம்மணிப் பகுதியில் நல்லூர் பிரதேச சபையால் அமைக்கப்பட்ட வரவேற்பு வளைவு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு திறந்து வைக்கப்படும். நல்லூர் பிரதேச சபைத் தவிசாளர் ப.வசந்தகுமார் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா வரவேற்பு வளைவைத் திறந்து வைப்பார்.*
*உள்ளூராட்சி மன்றத் தலைவர்கள், செயலாளர்களை நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. வீதி அகலிப்பு காரணமாக முன்னர் இருந்த வரவேற்பு வளைவு அகற்றப்பட்டு புதிய வளைவு அமைக்கப்பட்டுள்ளது. வீதி அபிவிருத்தித் திணைக்களம் இதற்கென ஒரு மில்லியன் ரூபாவை நல்லூர் பிரதேச சபைக்கு வழங்கியிருந்தது. (ஒ-7)*

# சட்டமாணி பரீட்சை மண்டபம் மாற்றம்

யாழ்ப்பாணம், மே 17

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தின் யாழ். பிராந்திய நிலையத்தில் மட்டம் 3 இல் சட்டமாணி பட்டக் கற்கைநெறி மாணவர் தொடர் மதிப்பீட்டுப் பரீட்சைகளுக்கான மண்டபம் யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மண்டபத்துக்கு மாற்றப்பட்டுள்ளது.

இப் பரீட்சையை இன்று வெள்ளிக்கிழமையும் நாளை சனிக்கிழமையும் காலை 9 மணி முதல் நண்பகல் 12 மணி வரை இலங்கை திறந்த பல்கலைக்கழக மண்டபத்தில் நடத்துவதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

பிராந்திய நிலையத்தில் போதிய இடவசதி இல்லாத காரணத்தால் இந்தப் பரீட்சையை யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மண்டபத்தில் நடத்த திட்டமிட்டுள்ளதாக யாழ். பிராந்திய இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (ஒ-400)

# வலி.கிழக்கு பிரதேச சபையின் கூட்டம் தொடர்ந்து இழுபறியில்

யாழ்ப்பாணம், மே17

வலி.கிழக்கு பிரதேச சபையின் சபை அமர்வு இரண்டாவது தடவையாகவும் நேற்று முன்தினம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டம் சபையின் தலைவர் அ.உதயகுமார் தலைமையில் ஆரம்பமானது.

சபையின் அறிக்கை எழுதும் உத்தியோகத்தரை உரிய இடத்தில் அமருமாறு தலைவர் பணித்தார். ஆனால் சபைச் செயலாளர், தனக்கு அருகிலேயே அறிக்கை எழுதுபவர் அமர வேண்டும் என்று பணித்தார்.

இதன்போது சபையின் ஆளுங்கட்சி உறுப்பினர்களுக்கும் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கும் இடையில் வாக்குவாதம் இடம்பெற்றது. இதன்போது எதிர்க்கட்சி உறுப்பினர்கள் [illegible] வார்த்தைகளைப் பிரயோகித்தனர்.

இதன்போது சபையின் தலைவர் அறிக்கை எழுதும் உத்தியோகத்தரைப் பார்த்து நீங்கள் வழமையான இடத்திலிருந்து அறிக்கை எழுதுங்கள். இல்லாவிட்டால் இங்கிருந்து வெளியேறுங்கள், செயலாளர் அறிக்கை எழுதட்டும் என்று தெரிவித்தார்.

அறிக்கை எழுதும் உத்தியோகத்தர் எழுந்து ''நான் ஓர் அரச உத்தியோகத்தர். இதில் செயலாளர் கூறுவதைத் தான் நான் செய்ய வேண்டும்'' என்று கூறினார்.

என்னால் பணிக்கப்படும் கடமைகளை ஏற்றுச் செயற்படாதுவிட்டால் தங்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்று தலைவர் தெரிவித்தார். இது சபையின் ஆளுங்கட்சி உறுப்பினர்களின் தீர்மானத்துடன் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இறுதியில் சபையை நடத்த முடியாத சூழல் ஏற்பட்டபோது, அடுத்த கூட்டம் நடத்தும்வரை கொடுக்க வேண்டிய அனைத்துக் கொடுப்பனவுகளுக்கும் அங்கீகாரம் வழங்கும்படி சபையிடம் தலைவர் கேட்டுக் கொண்டார். இதனை சபை ஏகமனதாக ஏற்றுக் கொண்டது.

10 நாள்களுக்குப் பின்னர் அடுத்த கூட்டத்துக்கு சட்ட ஆலோசனைகளைப் பெற்று கூட்டம் நடத்துவதாகத் தெரிவித்து, தலைவர் கூட்டத்தை ஒத்தி வைத்தார்.

இந்த விடயம் தொடர்பில் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திணைக்கள வட்டாரங்கள் தகவல் தெரிவிக்கையில்,

கூட்டத்தை நடத்தும் அதிகாரம் தலைவருக்குரியது. அறிக்கை எழுதுவது சபைச் செயலாளரின் பொறுப்பு. சபைச் செயலாளர் அறிக்கை எழுதுவதற்கு தனக்கு வேண்டிய உத்தியோகத்தரை சபைக் கூட்டத்துக்கு கொண்டு வந்து தனக்கு அருகில் இருத்த முடியும்.-எனத் தெரிவிக்கப்பட்டது. (ம-5-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதமர் ஆட்சிக்கு புதிய அரசமைப்பு

## சர்வஜன வாக்கெடுப்பு ஐ.தே. க. நடவடிக்கை

நாட்டின் இறையாண்மையை மக்களுக்கு உறு திப் படுத்தும் வகையில் புதிய அரசமைப்பு நகல் வரைபொன்றை மக்கள் மயப் படுத்தி அவர்களின் கருத் தறிந்து சர்வஜன வாக்கெடுப்பினூடாக அதனை நிறைவேற்று வதற்குத் தாம் நடவ டிக்கை எடுக்கவுள்ளதாக பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்தது.

இந்தப் புதிய அரசமைப்பினூடாக ஜனாதிபதியின் அதிகாரங்கள் கட்டுப் படுத்தப்படுவதுடன், பிரதமர் ஆட்சியின் ஊடாக - அதாவது பிரதமரின் ஆலோசனைகளுக்கமையவே அரசியல் துறையில் முக்கிய தீர்மானங்களை ஜனா திபதி மேற்கொள்ளவேண் டும் என்று ஐ.தே.க. எம்.பியும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான விஜேதாஸ ராஜபக்ஷ தெரிவித் தார்.

கொழும்பில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித் தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

''நாடாளுமன்றத்தைப் பிரதி நிதித்துவப்படுத்தும் கட்சி என்ற வகையில் நாட்டின் இறையாண்மையை மக்களுக்கு உறுதிப்படுத்துவதற்காக புதிய உத்தேச அரசமைப்பு நகல்வரைபொன்றை மக்களிடம் முன்வைக்கவுள்ளோம். இதனூடாக நிறைவேற்று அதிகாரத்தின் 'ரிமோட் கொன்ட்ரோல்' மூலமாக இயக்கப்படும் சட்டவாக்க சபை முறைமையை முழுமையாக நீக்கி, அனைத்து அதிகாரங்களையும் சட்டவாக்க சபை வசம் கொண்டுவரவுள்ளோம். இதற்கமைய இந்தப் புதிய அரசமைப்பு நகல்வரைபில் பின்வரும் விடயங்களை உள்ளடக்கியுள்ளோம்.

நாடாளுமன்றத்தின் ஆயுட் காலம் 5 வருடங்களாக்கப் பட்டுள்ளதுடன், ஜனாதிபதி தாம் நினைத்தாற்போல நாடாளுமன்றத்தைக் கலைக்க முடியாது என்பது உள்ளடக்கப்பட்டுள்ளதுடன், எம்.பிகளுக்கு கட்சி மாறும் உரிமையும் நீக்கப்பட்டுள்ளது.

மேலும் நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்படும் 225 எம். பிக்களுள் 125 பேர் வட்டார அடிப்படையிலும், 100 பேர் விகிதாசார முறைப் படியும் தெரிவுசெய்யப்படுவர். எம்.பிகள் குற்றம் புரிந்தால் தற்போதைய அரசமைப்புக்கமைய அவர்களின் பதவி பறிக்கப்படாது. எனினும், 6 வருடங்களுக்கு மேல் அவர்கள் சிறைத்தண்டனை அனுபவித்தால் அவர்களது பதவி பறிக்கப்படும். ஆனால், எமது புதிய அரசமைப்புக் கமைய எம்.பி. ஒருவர் குற்றம் புரிவாராயின், அவரது பதவி பறிக்கப்படும்.

அரசியல் தீர்வெடுக்கும் அதிகாரம் பிரதமர் உள்ளிட்ட அமைச்சரவைக்கே வழங்கப்படும். இந்த அமைச்சரவையில் பிரதமர் உள்ளிட்ட 25 அமைச்சர்மார்களும், 7 இராஜாங்க அமைச்சர்மார்களும், 30 பிரதியமைச்சர் மார்களும் நியமிக்கப்படுவர். ஜனாதிபதி தெரிவு முறைமை மக்கள் வாக்கெடுப்பினூடாகவும், நாடாளுமன்றத்தின் மூன்றில் இரண்டு பெரும்பான்மையினூடாகவும் தெரிவுசெய்யப்படும்.

அரசின் பிரதானி என்ற வகையில், முப்படைத் தளபதிகளையும், பிரதம நீதியரசரையும் அமைச்சர், பிரதி அமைச்சர் ஆகியோரையும் ஜனாதிபதிதான் நியமிப்பார். ஆனால், இந்தப் பதவி நியமனங்கள் அனைத்தும் பிரதமரின் ஆலோசனைக்கமைய இடம்பெற வேண்டும்.

மேலும் 17ஆவது திருத்தச் சட்டத்துக்கமைய நாட்டின் சுயாதீன நிறுவனங்களை நியமிக்கும்போது சட்டவாக்க சபையின் அனுமதி பெறவேண்டும். இதற்கு மாறாக சபாநாயகர் சபையொன்றை நாம் நிறுவவுள்ளோம். இந்தச் சபையின் தலைவராக சபாநாயகர் இருப்பார். பிரதமர் உள்ளிட்ட நாடாளுமன்றத்தைப் பிரதி நிதித்துவப்படுத்தும் அனைத்து எம்.பிமார்களும் இதில் உள்ளடங்குவர். இந்தச் சபை தான் சுயாதீனக் குழுக்களை நிறுவும்.

இந்தப் புதிய அரசமைப்பு நகல்வரைபானது எதிர்வரும் நான்கு, ஐந்து மாதங்களுக்கு மக்கள் கருத்துக் கணிப்புக் காக விடப்பட்டு அவர்களது ஆலோசனைகளைப் பெற்று சர்வஜன வாக்கெடுப்பினூடாக நிறைவேற்றப்படும்'' - என்றார் விஜேதாஸ ராஜபக்ஷ .

## பெற்றோலிய, மின்சார சபைகளை மறுசீரமைக்க அரசு தீர்மானம்

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம், மின்சார சபை ஆகியவற்றில் அதிரடியாக மறுசீரமைப்பைச் செய்வதற்கு அரசு தீர்மானித்துள்ளது என அறியமுடிகின்றது.

இதன் பிரகாரம், குறித்த நிறுவனங்களில் உயர் பதவிகளுக்குப் புதுமுகங்கள் நியமிக்கப்படவுள்ளதுடன், நிர்வாக முறைமைக் கோவையிலும் திருத்தங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன. இதற்கான கட்டளையை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அரசு பிறப்பித்ததையடுத்து, அவர்கள் இவ்விடயத்தில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

உயர் பதவிகளுக்கு நியமிக்கப்பட வேண்டியவர்களின் பெயர்கள் விரைவில் சிபாரிசுக்காக அரச தலைமைக்கு அனுப்பி வைக்கப்படும் என்றும் அவர் அனுமதித்தவுடன் குறித்த துறைகளில் மேற் கொள்ளப்பட்ட மாற்ற ங்கள் அமுலுக்குவரும் என்றும் அறியமுடிகின்றது.

வினைத்திறனற்ற நிர்வாகம், தொடர் நட்டம், எல்லை மீறிய விரயங்கள், முறைகேடுகள் தொடர்பில் கிடைக்கப்பெற்ற தொடர் முறைப்பாடுகள், நிர்வாக முறைமையில் சீரின்மை உட்பட முக்கிய சில காரணிகளைக் கருத்திற்கொண்டே அரசு இந்த முடிவை எடுத்துள்ளது.

குறிப்பாக, இலங்கை மின்சார சபை தொடர்ச்சியாக நட்டத்தை எதிர் நோக்கியதாலேயே அண் மையில் திடீரென மின் கட்டணம் உயர்த்தப்பட்டது. இதனால் அரசுக்கு தற்போது அரசியல் ரீதியில் பெரும் நெருக்கடிகள் ஏற் பட்டுள்ளன. பெருமளவு நட்டத்துக்குத் தவறான தீர் மானங்களே காரணம் எனக் கூறப் படுகின்றது. இலங்கை மின் சார சபையில் மாற்றங் கள் கொண்டுவரப் படுவதற்கான காரணிகளுள் இதுவும் ஒன்றாகும்.

அதேவேளை, இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்குள்ளும் பல சிக்கல்கள் எழுந்துள்ளன. இவற்றைச் சீர்செய்யும் முகமாகவே குறித்த துறையில் மறுசீரமைப்பு செய்யப் படவுள்ளது எனத் தெரிய வருகின்றது.


விற்பனைப் பிரதிநிதி தேவை

பலசரக்கு பொருட்களை இறக்கு மதி செய்து குடாநாட்டுப் பகுதி முழுவதும் விற்பனை செய்வதற்கு 5 வருடத்துக் குக் குறையாத அனுபவம் உள்ள விற் பனைப்பிரதிநிதி தேவை.

வயதெல்லை 30 தொடக்கம் 50 வரை

தொடர்பு:- 077 7784314



தேவை

ELEPHANT SOFT DRINKS

விற்பனை செய்யக் கூடிய விற்பனை பிரதிநிதிகள் (Sales Rep) தேவை. தகுதியானவர்கள் விண்ணப்பிக்கவும்.

பிள்ளையார் இன்

இல-31, மானிப்பாய் வீதி,

யாழ்ப்பாணம்.

(36582)(6.11)



THE SCIENCE CORNER

CLOCK TOWER LANE- JAFFNA

BIOLOGY 2015

BATCH I சனி, ஞாயிறு 7 - 8AM

BATCH II சனி, ஞாயிறு 3 - 4.30PM

BY- சு. பொன்திவாகரன்


## போதனா வைத்தியசாலையில் திருட்டு குற்றவாளிகள் தண்டிக்கப்படவில்லை

### மருத்துவர் சங்கம் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், மே 17

யாழ். போதனா வைத்திய சாலையில் இடம்பெற்ற திருட்டு தொடர்பில் நேரில் வந்து விசாரணை மேற் கொண்ட சுகாதார அமைச்சு அதிகாரிகளால் கூட குற்ற வாளிகளை இனங்காண முடியவில்லை.

மருத்துவர் ஜெயக்குமாரன் வீடு மீது கழிவொயில் வீசித் தாக்குதல் நடத்தப்பட்ட சம் பவம் தொடர்பிலும் சட்டமா அதிபர் திணைக்களமும் எந்த நடவடிக்கையும் எடுக் கவில்லை என்று பொலிஸார் கைவிரித்துள்ளதாக அரச மருத்துவர் சங்க யாழ். கிளை குற்றஞ் சாட்டியுள்ளது.

கடந்த வருடம் மே 29 ஆம் திகதி வைத்தியசாலையிலிருந்து பெறுமதிமிக்க மின் பிறப்பாக்கி மற்றும் 16 இரும்புக் கேடர்கள் திருட்டுப் போனது. மருத்துவர் சங்கம் அதனைக் கண்டறிந்து நடவடிக்கை எடுத்ததால் மின் பிறப்பாக்கியும், 13 இரும்புக் கேடர்களும் மீண்டும் வைத்தியசாலை யில் கொண்டு சென்று வைக்கப் பட்டன. வைத்திய சாலைப் பணிப்பாளரும் சில உத்தியோகத்தர்களுமே இவ்வாறு அரச சொத்துக் களை மோசடி செய்வதாக மருத்துவர் சங் கம் குற்றஞ் சாட்டியது.

இந்த நிலையிலேயே வைத்தியசாலையின் புற்றுநோய் வைத்திய நிபுணர் ந. ஜெயக் குமாரனின் வீடு கழிவு ஒயில் வீச்சுக்கு இலக் கானது. பின்னர் பணிப்பாளர் பவானி தற்காலிகமாக பணிநீக்கம் செய்யப்பட்டு விசாரணைக் காக கொழும்புக்கு அழைக் கப்பட்டார்.

திருட்டுத் தொடர்பில் சுகாதார அமைச்சிலிருந்து அதி காரிகள் குழு யாழ். போதனா வைத்தியசாலை க்கு வந்து விசாரணை செய்தது.

ஆனால் இன்று வரை அவர்களால் திருட்டுக்குக் காரணமானவர்களைப் பிடிக்க முடியவில்லை. அதுபற்றி சுகாதார அமைச்சு மௌனமாகவே இருந்து வருகிறது. திருட்டுடன் தொடர்புடையவர்கள் என்று தெரிவிக்கப்பட்ட நபர்கள் தொடர்ந்தும் வைத்திய சாலையில் பணியிலுள்ளனர். இவர்களின் ஊழலைக் கண்டறியச் சுகாதார அமைச்சு அதிகாரிகளால் முடிய வில்லை.

மருத்துவர் ஜெயக்குமாரன் மீதான தாக்குதல் தொடர் பிலும் மேல் நடவடிக்கை எடுப்பதற்காகச் சட்டமா அதிபரின் அறிவுறுத்தலுக் காகக் காத்திருப்பதாகப் பொலிஸார் கூறுகின்றனர். சட்டமா அதிபர் திணைக் களமும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்க வில்லை- என்று மருத்துவர் சங்கம் மேலும் தெரிவித்தது. (த-4)

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி சுப்பிரமணியம்



யாழ். நெடுந்தீவு கிழக்கைப் பிறப்பிடமாகவும் பாவற்குளம் 9ஆம் படிவத்தில் வசித்து வந்தவரும் கோயில் குளத்தை நிரந்தர வசிப்பிடமாகவும் தற்போது இல.350, திருநாவற்குளத்தில் வசித்து வந்தவரும் இல.03, சுற்றுவட்ட வீதி, மஹாலட்சுமி ஏஜென்சி கடை உரிமையாளரும் ஆகிய சின்னத்தம்பி சுப்பிரமணியம் நேற்று முன் தினம் (15.05.2013) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி - தங்கம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற பாறுபதியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி, கதிராசிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மருமகனும் காலஞ்சென்றவர்களான திரேசம்மா, பேனாட், கதிர்காமு ஆகியோரின் அன்புச் சகோதரரும் அக்னேஸ், கண்மணி, மனோன்மணி, காலஞ்சென்றவர்களான பாக்கியநாதன் கனகம்மா, நாகமுத்து, பிள்ளைநாதன், இலங்கைநாதன் ஆகியோரின் மைத்துனரும் பரமேஸ்வரி (தவம்), தியாகராசா (தியாகு), சிவராசா (சின்ராஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற இலட்சுமணன், மரியமலர், இந்துமதி ஆகியோரின் மாமனும் தாரிணி சிவநாதன், இராசகுமார் தனலட்சுமி, ராஜினி விக்கினேஸ்வரன், தவகுமார், புஸ்பலதா, செல்வகுமார், நிறோஜினி, அஸ்வினி, காந்திராஜ் சோபனா, சுகந்தினி, சீலன், சிதுர்சன், சுகாயினி, கிருசாந், கிஷோதன் ஆகியோரின் பேரனும் டிலைச்ஷன், அலைக்ஷன், ஹிந்துஷன், ஜிந்துஜா, தமிழரசன், கீர்த்திஜா, டிலோஜன், அனோஜன், ஆர்த்தி, பவிஷன் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.05.2013) வெள்ளிக்கிழமை பி.ப. 2.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பத்தினியார்மகிழங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

(வி/9448) (23-16-14)

## அகதிகளின் புகலிட விண்ணப்பம் ஆஸிக்கு வெளியே பரிசீலனை

### புதிய சட்ட திருத்தம் நேற்று நிறைவேறியது

கான்பரா, மே 17

படகு மூலம் ஆஸ்திரேலியாவுக்கு செல்லும் சட்ட விரோத குடியேற்ற வாசிகள் தொடர்பான சர்ச்சைக்குரிய சட்ட திருத்தம் ஆஸ்திரேலிய செனற் சபையில் நேற்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

படகு மூலம் செல்லும் புகலிடக் கோரிக்கையாளர்களுக்கான விண்ணப்பங்களை நவ்று மற்றும் பப்புவா நியூகினியாவின் மனுஸ் தீவில் பரிசோதிப்பது என இந்த சட்ட திருத்தத்தில் சொல்லப்பட்டுள்ளது.

கடந்த 2006 ஆம் ஆண்டு இது போன்ற சட்ட திருத்தத்தை அப்போதைய பிரதமராவிருந்த ஜோன் ஹாவார்ட் கொண்டு வந்தார்.

ஆனால் இந்தச் சட்ட திருத்தம் தமது நாட்டுக்குத் தீமை பயக்கும் செயற்பாடாக அமையுமென எதிர்க்கட்சியாக இருந்த கிறீன் கட்சி தனது எதிர்ப்பை வெளியிட்டது.

இதனால் இந்தச் சட்ட திருத்தம் நடைமுறைப் படுத்தப்படாமல் கைவிடப் பட்டது.

எனினும் மீண்டும் நேற்று ஆஸ்திரேலியா செனற் சபையால் கொண்டு வரப்பட்ட இந்த சர்ச்சைக் குரிய சட்ட திருத்தம் ஆளும் கட்சியின் ஆதரவுடன் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

இந்தத் திருத்தம் இறுதி அனுமதிக்காக ஆஸ்திரேலிய கீழ் சபைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இந்த ஆண்டில் மட்டும் சுமார் 96 படகுளில் 6036 புகலிடக் கோரிக்கையாளர்கள் ஆஸியைச் சென்றடைந்துள்ளமை குறிப்பிடத் தக்கது. (த-16)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'லயன் எயார்' விமானத்தில் மீட்ட அ.அட்டைக்கு உரியவர் உயிருடன்

யாழ்ப்பாணம், மே 17
இரணைதீவுக் கடலில் மீட்கப்பட்ட 'லயன் எயார்' விமானத்தின் சிதைவுகளுடன் எடுக்கப்பட்ட தேசிய அடையாள அட்டைக்குரிய பெண் தற்போது சிறுப்பிட்டியில் உயிருடன் உள்ளமை பலருக்கும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இது எப்படிச் சாத்தியம் என்று எண்ணுகிறீர்களா? நடந்ததை அறிந்துகொள்ளத் தொடர்ந்து படியுங்கள்.

சிறுப்பிட்டிவடக்குநீர்வேலியைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம் குணமணி (தற்போது வயது-59) என்பவரே இந்த அடையாள அட்டைக்குரிய பெண்.

குணமணியின் தந்தையின் பெயர் கோவிந்தசாமி. குணமணி 1995 இல் திருமணம் செய்தார். தனது தேசிய அடையாள அட்டையில் கணவரது பெயரைச் சேர்த்துக் கொள்வதற்காக பெயர் மாற்றம் கோரித் தனது கிராம சேவையாளர் பிரிவான ஜே/271 கிராம சேவையாளராக அப்போது இருந்த ஸ்ரீஸ்கந்தராஜா ஊடாக விண்ணப்பித்துள்ளார். அதன் பின்னர் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக குணமணி இடம்பெயர்ந்து வன்னிக்குச் சென்று மல்லாவி முதலாம் யுனிற்றில் வசித்துள்ளார். அப்போது அவர் விண்ணப்பித்திருந்த அடையாள அட்டை அவரது சிறுப்பிட்டி முகவரிக்கு ஆட்பதிவுத் திணைக்களத்தால் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. அதுபற்றி சிறுப்பிட்டியில் உள்ள உறவினர்கள் குணமணிக்கு கடிதம் மூலம் அறிவித்தனர். ஆயினும் அடையாள அட்டையை அவ்வேளையில் அவர் வசித்த வன்னிப் பகுதிக்கு அனுப்பி வைக்க முடியாத நிலை இருந்துவந்தது. 1998 செப்ரெம்பரில் பலாலியில் இருந்து 'லயன் எயார்' விமானம் 42 பயணிகள் உட்பட 50 பேருடன் இரத்மலானை நோக்கிப் புறப்பட்டது. அந்த விமானத்தில் சிறுப்பிட்டியில் குணமணியின் வீட்டுக்கு அருகில் வசித்து வந்த சின்னத்தம்பி என்பவரும் பயணித்துள்ளார். அவரிடம் குணமணியின் அடையாளஅட்டையைக்கொடுத்தனுப்பியுள்ளனர் உறவினர்கள்.

அடையாளஅட்டையைக்கொண்டு சென்ற சின்னத்தம்பி என்பவர் பயணித்த 'லயன் எயார்' விமானமே இரணைதீவு கடலில் விழுந்து மூழ்கியது. தமிழீழ விடுதலைப் புலிகளால் அந்த விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டதாகக் கூறப்படுகிறது. அதில் பயணித்தவர்கள் அனைவரும் உயிரிழந்துவிட்டனர் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. குணமணியின் அடையாள அட்டையைக் கொண்டு சென்ற சின்னத்தம்பி பயணித்த விமானமே சுட்டு வீழ்த்தப்பட்டது என்பது சில நாள்களின் பின்னரே குணமணியின் உறவினர்களுக்கு தெரிய வந்தது. குணமணியின் கணவரான பாலசுப்பிரமணியம் ஒரு லொறிச் சாரதியாவார். அவர் சிறுப்பிட்டியில் வசித்து வந்தபோது 2006 இல் வியாபார நோக்கில் வன்னிக்கு லொறி கொண்டு சென்றபோது ஏ-9 பாதை மூடப்பட்டமையால் அங்கு அகப்பட்டுக் கொண்டார். 2009 இல் முள்ளிவாய்க்காலில் ஷெல்வீச்சுக் காரணமாகக் காயமடைந்த அவர் இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் வந்ததைக் கண்டதாக உறவினர்கள் தெரிவித்தனர் என்று குணமணி கூறுகிறார்.



அதன் பின்னர் அவர் காணாமல் போய்விட்டார். இது தொடர்பில் அச்சுவேலி பொலிஸிலும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வவுனியாக் கிளையிலும் முறைப்பாடு செய்திருந்தோம் என்றார் குணமணி.

இதன் பின்னர் குணமணி வெளிநாடு செல்வதற்காக மீண்டும் தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பித்து அதனைப் பெற்றுள்ளார். வெளிநாட்டில் இருந்து கொழும்பு திரும்பி அங்கிருந்து ரயில் மூலம் வவுனியா வரும் போது பணம், நகைகள், அடையாளஅட்டை, கடவுச்சீட்டு என்பன அடங்கிய அவரின் கைப்பை இனந்தெரியாதோரால் கொள்ளையிடப்பட்டது.

அதனால் மூன்றாவது தடவையாகவும் அடையாள அட்டைக்கு விண்ணப்பித்து அதனைப் பெற்றுக் கொண்டார். இந்த நிலையிலேயே 15 வருடங்களின் பின்னர் கடந்த 4 ஆம் திகதி 'லயன் எயார்' விமானச் சிதைவுகளுடன் குணமணியின் அடையாள அட்டையும் மீட்கப்பட்டது. அது தொடர்பில் விசாரணை மேற்கொண்ட பயங்கரவாதத் தடைப் பிரிவுப் பொலிஸார் குணமணியின் வீட்டுக்குச் சென்று விசாரணை மேற்கொண்டனர். குணமணி அவர்களிடம் நடந்ததைக் கூறினார். (த-4)

## குடிதண்ணீர் கிணற்றை புனரமைக்க கோரிக்கை

தென்மராட்சி, மே 17
சாவகச்சேரி அல்லாரை தம்பு தோட்டப் பகுதியில் சேதமடைந்த நிலையில் காணப்படும் குடிதண்ணீர் பொதுக் கிணற்றைப் புனரமைத்து தருமாறு சாவகச்சேரி பிரதேச சபையினரிடம் பொதுக் கிணற்றைப் பயன்படுத்தும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அல்லாரை தம்பு தோட்டத்துக்கு வடக்குப் பக்கமாக உள்ள ஊரெல்லை வீதி அருகில் கச்சாய் கிராம சபை இயங்கிய காலத்தில் பொதுக் கிணறு அமைக்கப்பட்டு அந்தப் பகுதி மக்களின் குடி தண்ணீர் தேவை பூர்த்தி செய்யப்பட்டது.

1996 ஆம் ஆண்டு தம்பு தோட்டப் பகுதி அதி உயர்பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தப்பட்டு கடந்த 2010 ஆம் ஆண்டு கிணறு விடுவிக்கப்பட்டது.

கிணற்றில் ஒரு பகுதி நிலமட்டத்துடன் உடைந்து கிணற்றுக்குள் வீழ்ந்த நிலையிலும் மறு பகுதி பெரிய வெடிப்புடனும் காணப்பட்டது. எனினும் குடிதண்ணீர் பெற வேறு கிணறு இல்லாததால் அதனை இறைத்து துப்புரவு செய்து பயன்படுத்தி வருகின்றனர்.

பாதிக் கிணறு கட்டுமானம் இல்லாமலும் பாதிக் கிணறு கட்டு உடைந்த நிலையிலும் காணப்படுவதால் அதனைப் பயன் படுத்துவோர் சிரமங்களின் மத்தியில் பயன்படுத்திவருகின்றனர்.

சேதமடைந்துள்ள கிணற்றுக் கட்டடத்தைப் புனரமைத்துத் தருமாறு மக்கள் சாவகச்சேரி பிரதேசசபையினரைக் கோரியுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ம-9)

## சடலங்களை கொண்டு செல்வதில் நயினாதீவு மக்கள் சிரமத்தில்

### வங்களாவடி துறைமுகம் திருத்தப்படாமையே காரணம்

யாழ்ப்பாணம், மே 17
யாழ்.நகரில் மரணமடையும் தமது உறவினர்களின் சடலங்களை நயினாதீவுக்கு எடுத்து வந்து அவர்களது இறுதிச் சடங்குகளை மேற்கொள்வதில் தாங்கள் சிரமப்பட வேண்டியுள்ளது என நயினாதீவு மக்கள் வருத்தம் தெரிவிக்கின்றனர்.

நயினாதீவில் நாகபூஷணி அம்பாள் ஆலயம், பௌத்த விகாரை, வங்களாவடி என்று மூன்று துறைமுகங்கள் உள்ளன.

அம்பாள் ஆலய துறைமுகத்திலும் நாகவிகாரை துறைமுகத்திலும் வெளியிடங்களில் இருந்து எடுத்து வரப்படும் சடலங்களை இறக்கும் வழக்கம் பாரம்பரியமாகவே இல்லாத நிலையில் வங்களாவடி துறைமுகத்தின் ஊடாகவே சடலங்களை ஊருக்குள் எடுத்து வரமுடியும்.

வங்களாவடி துறைமுகம் நீண்ட காலமாக சேதமுற்று படகுகள் நிறுத்தமுடியாத நிலையில் தற்போது காணப்படுகின்றது.

குறிகாட்டுவானில் இருந்து படகுகள் மூலம் சடலங்களை எடுத்து வருவோர் படகுகளை நடுக்கடலில் நிறுத்தி பின்னர் சிறிய படகுகள் மூலமே துறைமுகத்துக்கு எடுத்துவரவேண்டியுள்ளது.

இரவு நேரங்களில் இதனால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

வங்களாவடி துறைமுகத்தைப் புனரமைத்து படகுகள் நிறுத்தக் கூடியதான வசதிகளை ஏற்படுத்தித் தரும்படி மக்கள் பல தடவை கோரிக்கை விடுத்தபோதும் அது இன்று வரை கவனிக்கப்படாத நிலையிலேயே உள்ளது.

இந்தப் பகுதியில் கூடுதலான மக்கள் வசிக்கின்றனர்.

கடந்த காலங்களில் வங்களாவடித்துறைமுகம் முக்கியத்துவம் மிக்கதாக இருந்துள்ளது.

இந்தத் துறைமுகத்தைப் புனரமைத்து உதவக் கூடியதாக நடவடிக்கை எடுங்கள் என்று வேலணை பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீசனிடம் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)


## ஆலய உள் வீதியில் அங்கப்பிரதட்சணம் செய்வதற்குத் தடை

நயினாதீவு நாகபூஷணி அம்பாள் ஆலய திருவிழாக் காலத்தில் அடியார்கள் ஆலய உள் வீதியில் அங்கப் பிரதட்சணம் செய்வதை தவிர்த்துக் கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏனைய அடியார்களுக்கு இதனால் ஏற்படும் இடையூறுகளை தவிர்க்கும் நோக்குடன் ஆலய அறங்காவல் சபை இந்த நடவடிக்கை எடுத்துள்ளது.

வெளிவீதியில் வெற்றுப் போத்தல்கள் கழிவுகளை கண்டபடி வீசாமல் அவற்றை உரிய இடங்களில்போடுமாறும்பொலித்தீன் பாவனையை தவிர்க்குமாறும் அறங்காவல் சபை அடியார்களைக் கேட்டுள்ளது.

சாரணியத்தொண்டர்கள் இதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் எனவும் கேட்கப்பட்டுள்ளது. (ம-7)



இலங்கை செஞ்சிலுவைச் சங்க நெடுந்தீவு வேலணைப் பிரிவு இளைஞர், யுவதிகளுக்கான பயிற்சிப் பாசறை முகாம் நெடுந்தீவு செஞ்சிலுவைச் சங்க அலுவலகத்தில் கடந்த வாரம் இடம்பெற்றது. இரண்டு நாள் இடம்பெற்ற இந்த நிகழ்வில் இரு பிரிவுகளையும் சேர்ந்த 30 இளைஞர், யுவதிகள் கலந்துகொண்டனர். முதலுதவி அனர்த்தகாலங்களில் பதிலிறுப்புச் செய்தல், தலைமைத்துவ பண்புகளை வளர்த்தல், செஞ்சிலுவைச் சங்கம் தொடர்பான பயிற்சிகள் இதன்போது வளவாளர்களால் வழங்கப்பட்டது. இந்தப் பயிற்சி முகாமில் யாழ். கிளையின் செயலாளர் கு.பாலகிருஷ்ணன், வளவாளர் ந.இலங்கேஸ்வரன் உட்பட இரு பிரிவுகளையும் சேர்ந்த நிர்வாகக் குழு உறுப்பினர்களும் கலந்துகொண்டனர். (ம-7)

# யாழ். நகர விடுதியில் கலாசாரச் சீரழிவு

## சம்பவம் தொடர்பில் பொலிஸ் விசாரணை

யாழ்ப்பாணம்,மே 17
யாழ். நகரில் இயங்கிவரும் விடுதி ஒன்றில் கலாசாரச் சீரழிவு இடம்பெற்றதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் விசாரணையை முன்னெடுத்துள்ளதாக யாழ். பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சமன் சிகேரா நேற்று முன்தினம் தெரிவித்தார்.

''சம்பவம் தொடர்பில் விசாரணை செய்யச் சென்றிருந்ததாகக் கூறப்படும் யாழ். பிரதேச செயலரிடம் வாய்முறைப்பாடு பதிவு செய்துள்ளோம்.

அது தொடர்பில் நீதிமன்றுக்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளோம்'' என்று அவர் மேலும் தெரிவித்தார்.

எனினும் நீதிமன்றில் எந்த அறிக்கையும் நேற்றுவரை தாக்கல் செய்யப்படவில்லை.

குறித்த விடுதியில் கலாசார சீரழிவு இடம்பெறுவதாகவும், அது தொடர்பில் விசாரணை செய்வதற்கு யாழ். பிரதேச செயலர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம் உள்ளிட்ட குழுவினர் சென்றதாகவும், அதன்போது அங்கு நின்றிருந்த பெண் ஒருவரை பிரதேச செயலர் பிடித்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் விடுதியை நடத்திவந்த முகாமையாளர் யாழ். பிரதேச செயலருக்கு எதிராக யாழ். பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

பிரதேச செயலர் சுகுணரதி தெய்வேந்திரம் அத்துமீறி விடுதியினுள் நுழைந்ததாக அவர் முறைப்பாடு செய்துள்ளார்.

இது தொடர்பில் யாழ். பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சமன் சிகேராவிடம் நேற்று முன்தினம் கேட்டபோது,

பிரதேச செயலர் சுகுணரதி தொலைபேசியில் செய்தியாளர்கள் சிலரை விடுதிக்கு வருமாறு அழைத்துவிட்டு அங்கு சென்று விசாரணை செய்துள்ளார் என்று தகவல் வந்துள்ளது.

அவர் அவ்வாறு விடுதியினுள் செல்ல முடியாது.

பொலிஸார் நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பித்து நீதிமன்ற அனுமதியுடனேயே விடுதிக்குள் செல்ல முடியும்.

சம்பவம் தொடர்பில் நீதிமன்றுக்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளோம், மன்று உத்தரவுப்படி மேல் நடவடிக்கை எடுப்போம்.-என்றார்.

இது தொடர்பில் பிரதேச செயலர் சுகுணரதியுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது,

விடுதியின் அனுமதிப்பத்திரத்தை நீடிப்பதா இல்லையா என்பது தொடர்பில் பரிசீலனை செய்வதற்காகவேதான் விடுதிக்குச் சென்றேன்.

நான் செய்தியாளர்கள் எவரையும் அங்குவருமாறு தொலைபேசியில் அழைக்கவில்லை என்று கூறி சமன் சிகேராவின் கூற்றை மறுத்துரைத்தார்.

நான் விடுதியில் நின்றிருந்த போது, பெண் ஒருவர் ஒளிந்து கொண்டதால்தான் அவரைப் பிடித்து எனது வாகனத்தில் அலுவலகத்துக்கு அழைத்துச் சென்று முறைப்பாடு பதிவு செய்தபின் யுவதியை வீட்டுக்கு அனுப்பி வைத்தேன்- என்றார். (ம-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## படகு விபத்தில் காணாமற் போன அனைவருமே உயிரிழப்பு

பாக்டாவ், மே 17
மியான்மரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற படகு விபத்தில் காணாமற்போயிருந்த அனைவரும் உயிரிழந்துள்ளனர் என்று அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது.
இந்த விபத்தில் சுமார் 200 பேர் உயிரிழந்திருக்கக் கூடும் என்று அங்கு மனிதாபிமான பணிகளில் ஈடுபட்டுள்ள ஐக்கிய நாடுகளின் பிரதிநிதிகள் குறிப்பிட்டுள்ளனர்.
காப்பாற்றப்பட்ட ஒருவரால் வழங்கப்பட்ட தகவல்களின் அடிப்படையிலேயே இந்த உயிரிழப்பு எண்ணிக்கை கணிக்கப்பட்டுள்ளது என்றும் அவர்கள் மேலும் குறிப்பிட்டனர்.
சூறாவளி ஏற்படலாம் எனக் கருதி, அதிலிருந்து தங்களை பாதுகாத்துக்கொள்வதற்காக வேறு பிரதேசத்திற்கு படகில் சென்றுகொண்டிருந்த குழுவினரே நீரில் மூழ்கி காணாமற் போயிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ற)




இஸ்ரேல் என்ற தனி நாடு உருவாகி 65 ஆண்டுகள் நிறைவு பெற்றதை நினைவு கூரும் முகமாக இஸ்ரேல் வெஸ்ற்பாங் நகரில் இராணுவ அணிவகுப்பு நடத்தப்பட்டது. அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அங்குள்ள பலஸ்தீனியர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இராணுவ வீரர்களை நோக்கி எரியும் ரயர்களை வீசி தாக்குதல்களை மேற்கொண்டனர். நீண்ட போரின் முடிவில் 1948 ஆம் ஆண்டு மே மாதம் 15 ஆம் திகதியன்று போரிலேயே இஸ்ரேல் தனிநாடாக உருவாகியது. அப்போது ஆயிரக்கணக்கான பலஸ்தீனியர்கள் தமது சொந்த இடங்களில் இருந்து பலவந்தமாக விரட்டப்பட்டனர். (ற)

## பிலிப்பைன்ஸ் தாய்வான் உறவுகளில் முறுகல்




மணிலா, மே 17
கடந்த வாரம் பிலிப்பைன்ஸின் கரையோரப் பாதுகாப்பு அதிகாரிகளின் துப்பாக்கிச் சூட்டில் தாய்வான் மீனவர் ஒருவர் உயிரிழந்ததை அடுத்து இரு நாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளில் முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது.
தற்போது பிலிப்பைன்ஸிற்கான தமது நாட்டுப் பிரதிநிதியை மீள அழைத்துள்ள தாய்வான், பிலிப்பைன்ஸ் பணியாளர்களை தமது நாட்டில் வேலைக்கு அமர்த்துவதனையும் இடை நிறுத்துவதாக அறிவித்துள்ளது.
இதேவேளை, குறித்த சம்பவத்துக்கு வருத்தம் தெரிவித்துள்ள பிலிப்பைன்ஸ் அரசு, உயிரிழந்த மீனவர் குடும்பத்துக்கு இழப்பீடு வழங்குவதற்கும் இணக்கம் தெரிவித்துள்ளது. (ற)

## லெனினின் உடல் பார்வைக்கு



மொஸ்கோ, மே 17
ரஷ்யத் தலைவர் லெனினின் உடல் வைக்கப்பட்டுள்ள நினைவிடம் இதுவரையில்லாத அளவுக்கு பெரியளவில் மீள்சீரமைக்கப்பட்டு மீண்டும் மக்கள் பார்வைக்கு திறக்கப்பட்டுள்ளது.
ரஷ்யப் புரட்சிக்குத் தலைமை தாங்கிய லெனின் 1924 இல் இறந்தார். அவரது உடல் பதப்படுத்தப்பட்டு, 1930ஆம் ஆண்டு தொடக்கம் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டது. அவரது உடல் வைக்கப்பட்டுள்ள செஞ்சதுக்கம் இதுவரை இல்லாத அளவு மீள்சீரமைக்கப்பட்டு வந்தது. அதனால் லெனினின் உடலை பார்வையிட முடியாத நிலை காணப்பட்டது. தற்போது மீள்சீரமைப்பு வேலைகள் முடிந்ததை அடுத்து மீண்டும் மக்கள் பார்வைக்கு லெனினின் உடல் வைக்கப்பட்டுள்ளது.
இதேவேளை, அண்மையில் நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பு ஒன்றில், பெரும்பான்மையான ரஷ்யர்கள் லெனினின் உடல் செஞ்சதுக்கத்தில் இருந்து அகற்றப்பட வேண்டும் என்று தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ற)

# ஆசியாவே உலகை இயக்க வேண்டும்

### இந்தியா அதற்கு கைகோர்க்க வேண்டும் என்கிறார் சீனப் பிரதமர் லீ கியாங்

பீஜிங், மே 17
உலகை இயக்கும் இயந்திரமாக ஆசியா மாற வேண்டும். அவ்வாறான மாற்றம் ஏற்படுவதற்கு சீனாவுடன் இந்தியா கைகோர்க்க வேண்டும் - இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளார் சீனப் பிரதமர் லீ கியாங்.
சீனாவுக்கு நல்லெண்ணப் பயணம் மேற்கொண்டுள்ள இந்திய இளைஞர்களைச் சந்தித்த பின்னர் பீஜிங்கில் உள்ள சீன கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தில் செய்தியாளர்களைச் சந்தித்துக் கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.
''உலகின் எதிர்கால நம்பிக்கையாக ஆசியா திகழும் என்று மக்கள் நம்புகின்றனர். அவர்களது நம்பிக்கை கைகூட வேண்டும் என்றால் சீனாவும் இந்தியாவும் கைகோர்க்க வேண்டும்.
சீனாவுக்கு அடுத்தபடியாக அதிக சனத்தொகை கொண்ட நாடு இந்தியா. 21ஆம் நூற்றாண்டில் ஆசிய பசிபிக் நாடுகள் தான், அரசியல் மற்றும் பொருளாதாரத்தில் முக்கிய பங்காற்றப் போகின்றன. உலக பொருளாதாரத்தை இயக்கும் சக்தியாக ஆசியா மாற வேண்டுமானால், சீனாவும், இந்தியாவும் கை கோர்க்க வேண்டும்,'' என்று அவர் அங்கு மேலும் குறிப்பிட்டார்.
இதேவேளை, சீனப் பிரதமர் லீ கியாங் நாளை மறுதினம் 19 ஆம் திகதி இந்தியாவுக்கு பயணம் மேற்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற)

### சீனாவில் மாற்றம் வரும்

சீனாவில் மாற்றம் ஏற்படுவது தவிர்க்க முடியாதது என்று அந்த நாட்டின் பார்வையற்ற மனித உரிமை ஆர்வலரான சென் குவாங்செங் தெரிவித்துள்ளார்.
எனினும் அந்த மாற்றம் வெளியில் இருந்து திணிக்கப்படாது என்றும் அது சீன மக்களாலேயே ஏற்படுத்தப்படும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.
சீனாவில் வருடந்தோறும் இரண்டு லட்சம் பேர் சீன அரசுக்கு எதிராகக் கிளர்ந்தெழுவதாகவும், அவர்கள் அரசால் மிகக் கடுமையான முறையில் அடக்கப்படுவதாகவும் சென் கூறியுள்ளார்.
41 வயதாகும் சென், சீனாவில் அரசு ஒரு குழந்தைக் கொள்கையைத் திணிக்கும் செயற்பாட்டிற்கு எதிராகக் கடுமையாகப் போராடி சர்வதேசத்தின் கவனத்தை ஈர்த்திருந்தார். அதனால் 4 வருடங்கள் சிறைத் தண்டனை அனுபவித்த அவர் வீட்டுக் காவலில் வைக்கப் படவிருந்த போது தப்பித்து அமெரிக்கத் தூதரகத்தில் அகதி அந்தஸ்துக் கோரி தஞ்சம் புகுந்தார்.

## அன்னையர் தின பேரணியில் துப்பாக்கிச் சூடு நடத்தியவர் கைது



நியூஓலியன்ஸ், மே17
கடந்த ஞாயிற்றுக்கிழமை அன்னையர் தினப் பேரணியில் துப்பாக்கிச்சூட்டை நடத்திய நபரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.
19 வயதுடைய அகின் ஸ்கொட் என்பவரே பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.
துப்பாக்கிச்சூடு இடம்பெற்ற பகுதியில் பொருத்தப்பட்டிருந்த கண்காணிப்புக் கமராவில் பதிவாகியிருந்தவற்றை அடிப்படையாகக் கொண்டே ஸ்கொட் கைது செய்யப்பட்டுள்ளார்.
தற்போது பொலிஸ் காவலில் உள்ள ஸ்கொட், விசாரணைகளின் பின்னர், நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படுவார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ற)

## தீவிரவாதிகளுக்கு எதிராகப் போர்

### நைஜீரிய அரசு அதிரடி முடிவு

நைரோபி, மே 17
நைஜீரியாவின் பின்தங்கிய பகுதிகளில் இஸ்லாமியத் தீவிரவாதிக்ளின் அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளும் வகையில் தனது இராணுவத்தினரை நிலைநிறுத்த முடிவு செய்துள்ளது நைஜீரியா அரசு.
அதிகரித்து வரும் இஸ்லாமிய தீவிரவாதிகளின் அச்சுறுத்தல்களைக் கருத்தில் கொண்டே இந்த முடிவு எடுக்கப்பட்டது என்று நைஜீரிய பாதுகாப்பு பிரிவினர் தெரிவித்தனர்.
அதன் முதற்கட்டமாக, நைஜீரியாவின் வடகிழக்குக் பகுதிகளில் அவசரகால நிலை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்று அரசு அறிவித்துள்ளது. இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள நைஜீரிய இராணுவப் பேச்சாளர்,
''நாட்டின் வடகிழக்குப் பகுதியில் பாதுகாப்பை மேம்படுத்தவும், தீவிரவாதிகளின் முகாம்களை ஒழித்துக்கட்டவும் அங்கு கூடுதலான இராணுவத்தினர் அனுப்பப்படவுள்ளனர்.
அவர்களுக்கான ஏனைய வளங்களும் அங்கு அனுப்பப்படும்.'' என்று தெரிவித்தார்.
எனினும் தீவிரவாதிகள் உள்ளூர் மக்களுடன் கலந்துள்ள சூழலில், மக்களுக்கு பாதிப்பு ஏற்படாமல் நடவடிக்கை எடுப்பது சிரமாக அமையும் என்று கூறப்படுகிறது. (ற)

# 'அரக்க குணம் படைத்தவனல்ல காஸ்ரோ'

### சந்தேகநபரது சட்டத்தரணி கூறுகின்றார்

நியூயோர்க், மே 17
கடத்தப்பட்டு 10 ஆண்டுகளாக தடுத்து வைக்கப்பட்டிருந்த மூன்று பெண்கள் அண்மையில் பொலிஸாரால் மீட்கப்பட்டமை அமெரிக்காவையே அதிர்ச்சியில் ஆழ்த்தியிருந்தது.
அந்தக் கடத்தல் சம்பவத்தில் பிரதான சந்தேக நபராக இனங்காணப்பட்டுள்ள 52 வயதுடைய ஏரியல் காஸ்ரோ மீது கொலை, கடத்தல் மற்றும் [illegible]
இந்தநிலையில் ஏரியல் காஸ்ரோ மீது ஊடங்கள் மிகைப்படுத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை முன்வைக்கின்றன என்று தெரிவித்துள்ளார் காஸ்ரோவின் சட்டத்தரணி கிறிக் வென்ரப்ட்.
குயாகோகா சிறையில் உள்ள காஸ்ரோவைச் சந்தித்து, 3 மணி நேரம் உரையாடிய பின்னரே வென்ரப்ட் இவ்வாறு தெரிவித்தார்.
''ஏரியல் காஸ்ரோ ஊடகங்கள் குறிப்பிடுவது போன்று அரக்ககுணம் படைத்தவ[illegible] சுமார் [illegible]யாலங்கள் உரையாடினேன். கடத்தப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த அமெண்டா பெரியின் குழந்தை ஏரியல் காஸ்ரோவினுடையது என்று வைத்திய பரிசோதனைகள் குறிப்பிடுகின்றன. எவ்வாறெனினும் அந்தக் குழந்தைமீது காஸ்ரோ மிகவும் அன்பு வைத்துள்ளான் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடிகின்றது'' என்று குறிப்பிட்டார் வென்ரப்ட்.
''அப்படியாயின் குறித்த மூன்று பெண்களும் எவ்வாறு காஸ்ரோவின் வீட்டில் இருந்து மீட்கப்பட்டனர்'' என்று அவரிடம் கேட்கப்பட்டபோது, ''அதுகுறித்து இப்போது எதுவும் கூறமுடியாது. விசாரணைகள் நடைபெற்றுவரும் நிலையில் நீதிமன்ற விசாரணைகளிலேயே அதுகுறித்து அறியமுடியும்'' என்று அவர் தெரிவித்தார்.
''காஸ்ரோ விவகாரத்தில் ஊடகங்கள் பக்கச்சார்ப்பாகச் செயற்படுகின்றன. இந்த விடயத்தின் ஒருபக்கத்தையே அவை வெளிஉலகுக்குக் காட்டுகின்றன'' என்றும் அவர் குற்றஞ்சாட்டினார். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்திய – சீன இராணுவ அதிகாரிகள் பேச்சு

இந்திய சீனா இராணு வத்தின் பிரிகேடியர் மட் டத்திலான அதி காரிகள் கலந்து கொண்ட பேச்சு சிக்கிம் மாநிலத்தில் உள்ள நதுலா என்னுமிடத்தில் நடைபெற்றது. அதன்போது சர்வதேச எல்லை யில் அமைதி மற்றும் சமாதா னம் நிலவ வேண்டும் என்று இரு தரப்பு அதிகாரிகளும் வலி யுறுத்தினர்.

மேலும் இரு நாட்டு வர்த்தகக் குழுக்களும் அங்கு சந்தித்துப் பேசின. சுமுகமாகவும் சிநேக பூர்வமாகவும் நடந்த அந்த பேச்சில் பல முடிவுகள் எடுக்கப்பட்டன. அண்மையில் இந்திய எல்லைக் குள் அத்துமீறி ஊடுருவிய சீன இராணுவம் அங்கு முகாமிட்டு மிரட்டியது. பின்னர் நடந்த பேச்சை அடுத்து அங்கிருந்து வெளி யேறியமை குறிப்பிடத்தக்கது.

## டில்லி மாணவி வன்புணர்வு வழக்கின் குற்றவாளி மருத்துவமனையில்

டில்லி, மே.17

புதுடில்லியில் கடந்த வருடம் ஓடும் பஸ்ஸில் மருத்துவ மாணவி பாலியல் வன்புணர் வுக்கு உட்படுத்தப்பட்டு, கொல் லப்பட்ட வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்களில் ஒருவ ரான வினய் சர்மா ஆபத்தான நிலையில் மருத்துவமனை யில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அவர் சிறையில் தாக்கப்பட்ட தாகவும் அவருக்கு உணவில் விஷம் வைக்கப்பட்டதாகவும் அவரது வழக்கறிஞர் குற்றம் சாட்டியுள்ளார். ஆனால், இக் குற்றச்சாட்டை சிறை நிர்வா கம் மறுத்துள்ளது.

இந்தியா முழுவதும் கோப அலைகளைத் தோற்றுவித்த டில்லி பாலியல் வன்புணர்வு வழக்கில் குற்றம்சாட்டப்பட்



டவர்களில் ஒருவரான 20 வயதான வினய் சர்மா சக கைதிகளால் கடுமையாகத் தாக்கப்பட்டதாகவும் தற்போது அவர் லோக் நாயக் ஜெய்பிர காஷ் மருத்துவமனையில் மேல திக சிகிச்சைக்காக அனுமதிக் கப்பட்டுள்ளதாகவும் அவரது வழக்கறிஞர் ஏ. பி. சிங் கூறி யுள்ளார். (வ)



அஸாமிலிருந்து மாநிலங்களவை உறுப்பினர் பதவிக்கு மீண்டும் போட்டியிடும் பிரதமர் மன்மோகன் சிங், தனது வேட்பு மனுவை குவாஹாட்டியில் உள்ள சட்டப்பேரவையில் தேர்தல் அதிகாரி ஜி.பி. தாஸிடம் கையளிக்கிறார்.

## ஜம்முவில் நிலநடுக்கம்

### மக்கள் பதறியடித்து ஓட்டம்



ஜம்மு காஷ்மீர் மாநிலம் பாதர்வா பள்ளத்தாக்கு மற்றும் தோடா–கிஷ்த்வாரை அண்டிய பகுதியில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை அதிகாலை 1.30 மணி அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது. இதனால் மக்கள் வீடுகளை விட்டு பதறிய டித்து வெளியான இடங்களுக் குச் சென்றனர்.

அடுத்தடுத்து 3 முறை ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் முறையே, 4.8, 5.3, 5 அலகுகளாக பதிவா னதாக வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலநடுக்கம் காரணமாக பீதியடைந்த அந்தப் பகுதி மக்கள் வீடுகளை விட்டு பதற் றத்துடன் வெளியேறினர். அப் போது, முதியவர் ஒருவருக்கு மாரடைப்பு ஏற்பட்டது. மருத் துவமனைக்குக் கொண்டு செல் லப்பட்டபோது அவர் இறந்து விட்டதாக மருத்துவர்கள் தெரி வித்தனர்.

கடந்த 15 தினங்களில் இந் தப்பகுதியில் மொத்தம் 33 முறை நிலநடுக்கம் ஏற்பட் டுள்ளது. இதில் மே முதலாம் திகதி அதிகபட்சமாக 11 முறை நில நடுக்கம் ஏற்பட்டுள்ளது.(வ)

## நடிகர் கமல் மீது வழக்கு

சென்னை, மே.17

திரைப்படம் திரையிடுவோர் சங்கத்தின் பதிவு எண்ணை தவறாகப் பயன்படுத்தியதாக நடிகர் கமல்ஹாசன் மீது வழக்கு பதிவு செய்ய உத்தரவிடக் கோரி சென்னை உயர் நீதி



மன்றத்தில் மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு திரைப்படம் திரை யிடுவோர் சங்க பொதுச் செய லாளர் பன்னீர்செல்வம் தாக் கல் செய்துள்ள அந்த மனுவில், தமிழ்நாட்டில் திரைப்பட வளர்ச் சிக்காகவும், திரையரங்க உரிமையாளர்களின் நன்மைக் காகவும் எங்கள் சங்கம் பாடு பட்டு வருகிறது. கமல்ஹாசன் பங்குதாரராக உள்ள ராஜ்கமல் சர்வதேச நிறுவனம் விஸ்வ ரூபம் திரைப்படத்தைத் தயா ரித்தது. இந்தப்படத்தை 11. 01.2013 அன்று திரைய ரங்குகளிலும் டி.டி.எச்சிலும் ஒரே நேரத்தில் வெளியிடுவதாக கமல்ஹாசன் அறிவித்தார்.


இதற்கு திரையரங்கு உரிமை யாளர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

இதனால் படம் வெளியாகும் திகதி ஒத்திவைக்கப்பட்டது. இதற்கிடையில் முஸ்லிம் அமைப் பினர் எதிர்ப்பால் தமிழக அரசு இப்படத்துக்கு தடை விதித்தது. இதனை எதிர்த்து உயர் நீதி மன்றத்தில் வழக்கு தொடரப் பட்டதைத் தொடர்ந்து தடை நீக்கப்பட்டது.

இந்தநிலையில் ராஜ்கமல் நிறு வனம் எங்கள் சங்கத்தின் மீதும் தமிழ்நாடு தியேட்டர் உரி மையாளர்கள் சங்கத்தின் மீதும் இந்திய போட்டி கமிஷனில் முறைப்பாடு செய்துள்ளது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ)

### இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில்

## சீனக்கடற்படை தலையீடு; ஆராய தளபதிகள் மாநாடு



டில்லி, மே 17

இந்தியப் பெருங்கடல் பிராந் தியத்தில் சீனக் கடற் படை களின் தலையீடுகள் அதிக ரித்துள்ளது குறித்து இந்தியக் கடற்படைத் தளபதிகளின் உயர்மட்ட மாநாட்டில் ஆரா யப்படலாம் என்று பி.ரி.ஐ. செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தியப் பெருங்கடல் பிராந் தியத்தில் சீனக் கடற் படை யின் நீர்மூழ்கிகள், மற்றும் ஏனைய போர்க்கப்பல்களின் நடமாட்டங்கள் அதிகரித்துள் ளமை குறித்து, இந்தியக் கடற் படை கவலை கொண்டுள்ளது.

இந்திய கடல் எல்லைக்கு வெளியே, இந்தியப் பெருங் கடல் பகுதியில் அண்மைக் காலத்தில் 22 தடவைகள் சீன நீர்மூழ்கிகளின் நடமாட் டங்கள் அவதானிக்கப் பட்ட தாக, அமெரிக்க முகவரமைப்பு மூலம் கிடைத்த தகவல்கள் அடங்கிய அறிக்கை ஒன்றை பாதுகாப்பு அதிகாரிகள் தலை மையகம், இந்திய பாதுகாப்பு அமைச்சிடம் கையளித்திருந்தது.

இந்தியாவைச் சுற்றி, பங் களாதேஷின் சிட்டகொங், மியன் மாரின் சிட்வே மற்றும் கொகோ தீவு, ஹம்பாந் தோட்டை, பாகிஸ் தானின் குவடார் போன்ற துறை முகங்களில் தனது தலை யீட்டை உருவாக்குவதில் சீனா வெற்றி கண்டுள்ளது.

இதன்மூலம் இந்தியா வுக்கு நெருக்கமாக எல்லாப் பக்கங் களிலும் நிலை கொள்ளும் ஆற் றலை சீனா பெற்றுள்ளது.

இந்தியக் கடற்படைக்கு பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ள இந்த விவகாரம் குறித்து இந்தியக் கடற்படைத் தளபதிகளின் மாநாட் டில் முக்கியமாக ஆரா யப்பட வுள்ளது. இந்த மாநாடு நேற்று முன்தினம் ஆரம்பமா கியுள் ளமை குறிப்பிடத்தக்கது. (வ)

## சிவகாசி பட்டாசு ஆலையில் விபத்து 2 பேர் சாவு

சிவகாசி, மே 17

சிவகாசி அருகே பட்டாசு ஆலை யில் நேற்று முன் தினம் காலை ஏற்பட்ட வெடிவிபத்தில் இருவர் உயிரிழந்தனர். 15 இற்கும் மேற் பட்டோர் படுகாயமடைந்தனர். விருதுநகர் மாவட்டம் சிவகாசி அருகே உள்ளது கிச்சநாயக் கன்பட்டி. இங்கு மீனாட்சி பட் டாசு தொழிற்சாலை உள்ளது. அதனை அண்டிய பகுதிகளைச்



சேர்ந்த 100 இற்கும் மேற் பட்ட தொழிலாளர்கள் அங்கு பணியாற்றி வருகின்றனர்.

நேற்று முன்தினம் காலை வழக்கம்போல் தொழிலாளர் கள் பணிக்குச் சென்றனர். ஓர் அறையில் தொழிலாளர் கள் பென்சில் வெடிக்கு முனை மருந்து தடவிக் கொண்டிருந் தனர்.

இதன்போது திடீரென்று பட் டாசில் தீப்பிடித்ததில் கண் இமைக்கும் நேரத்தில் அந்த அறையில் இருந்த பட்டாசு கள் வெடித்துச் சிதறின. (வ)

## ஒரு லட்சம் ஈழத் தமிழருக்கு தமிழக அரசின் நலத் திட்டங்கள்

### சட்டசபையில் பன்னீர்ச்செல்வம் தகவல்

சென்னை, மே.17

இலங்கை தமிழர்களுக்கு தமிழக அரசு சார்பில் பல்வேறு நலத் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருவதாக நிதி அமைச்சர் பன் னீர்ச்செல்வம் தெரிவித்தார்.

சட்டப்பேரவையில் நேற்று முன்தினம் நடை பெற்ற நிதித் துறை மானியக் கோரிக்கை விவாதத்துக்கு பதில் அளித்துப் பேசுகையில் அமைச்சர் பன் னீர்ச்செல்வம் தெரிவித்ததாவது:-

தமிழகத்தில் 26 மாவட் டங்களில் உள்ள 112 முகாம்களில் 19 ஆயிரத்து 658 குடும்பங் களைச் சேர்ந்த 66 ஆயிரத்து 918 இலங்கைத் தமிழர்கள் தங்க வைக்கப் பட்டுள்ளனர். 13 ஆயிரத்து 289 குடும்பங்களைச் சேர்ந்த, 34 ஆயிரத்து 826 அகதிகள் முகாம்களுக்கு வெளி யில் வசித்து வருகின்றனர். அ.தி.மு.க. ஆட்சிப் பொறுப்பு



ஏற்ற பின்னர் இலங்கைத் தமிழ் அகதி களுக்கு பல்வேறு நலத் திட்டங்கள் செயற்படுத்தப்படு கின்றன. குறிப்பாக, முகாம்களில் 416 மகளிர் சுய உதவிக் குழுக்க ளுக்கு 2012–2013 ஆம் ஆண் டில் ரூ.41 லட்சம் வழங்கப் பட்டுள்ளது.

அகதிகளாக இருக்கும் மாண வர்களுக்கு கல்வி உதவித் தொகை கல்விக்கு ஏற்ப ரூ.850 – ரூ.4,700 வரை வழங்கப் படுகிறது. மேலும், முகாம்களில் அடிப்படை வசதிகளை மேம்ப டுத்த அரசு, 25 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. தொடர்ந்து இரண்டாயிரத்து 500 புதிய வீடுகள் கட்டு வதற்கும் 25 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வருடம் தொடக்கம் முதல மைச்சரின் புதிய விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் முகாம்களுக்கு வெளியே வசிக் கும் இலங்கை வாழ் தமிழர்க ளுக்கும் நீட்டிக்கப்பட்டிருக்கிறது. இலங்கை அரசின் மீது பொரு ளாதாரத் தடை விதிக்க மத் திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சட்டப் பேர வையில் தீர்மானம் நிறை வேற்றப்பட்டுள்ளது–என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரிய பயிற்சிக் கலாசாலை தேசிய விஞ்ஞான பீடமாக மாற்றம்

கொழும்பு, மே 17
மஹரகம, ஆசிரிய பயிற்சிக் கலாசாலையை தேசிய கல்வி விஞ்ஞான பீடமொன்றாகத் தரமுயர்த்துவதற்கு அமைச்சரவையின் அனுமதி கிடைத்துள்ளது.

அதற்கமைய, அதற்கு சிறு தொழில் முயற்சி மற்றும் முகாமைத்துவ தேசியக் கல்வி விஞ்ஞான பீடம் என பெயரிடப்படவுள்ளது என்று கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தப் புதிய கல்வி விஞ்ஞான பீடத்துக்கு 2012 ஆம் ஆண்டில் வணிகத்துறைப் பாடங்களில் உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்துள்ள மாணவர்கள் நானூறு சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

உயர்தரப் பரீட்சையில் மூன்று பாடங்களில் 'ஏ' சித்திகளைப் பெற்றிருந்தும் பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவாகியிராத மாணவர்களிடையே உச்ச 'இசட்' புள்ளிகளைப் பெற்றுள்ளோர், இந்தப் பீடத்துக்கு தேர்ந்தெடுக்கப்படவுள்ளனர்.

இந்தப் பீடத்தில் 'சிறுதொழில் முயற்சி ஆய்வு' த் துறையைக் கற்பிப்பதற்கு ஆசிரியர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

தற்போது ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களிடையே வணிகத் துறைப் பாடங்களைப் பின்பற்றும் நூற்றுக்கு 27 வீதமானோரின் எண்ணிக்கையை 2016 ஆம் ஆண்டளவில் நூற்றுக்கு 35 வீதம் வரையில் அதிகரிப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது-என்றார். (ச-22)




பாகிஸ்தான் போர்க் கப்பல் நல்லெண்ணப் பயணமாகத் திருகோணமலை துறைமுகத்தை வந்தடைந்துள்ளது. இந்தக் கப்பல் இன்று வெள்ளிக்கிழமை வரை துறைமுகத்தில் தரித்து நிற்கும். (ச-40)

# திருமலை வைத்தியசாலை தரம் உயர்த்தப்படும்

## அரசிடம் கையளிக்கவும் முடிவு என்கிறது கிழக்கு சுகாதார அமைச்சு

திருகோணமலை,மே 17
திருகோணமலை மத்திய வைத்தியசாலையை போதனா வைத்தியசாலையாகத் தரமுயர்த்துவதற்கு கிழக்கு மாகாண சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

மாகாண சபையின் கீழ் நிர்வகிக்கப்பட்டு வரும் இந்த வைத்தியசாலையை அரசிடம் கையளிப்பதற்கும் அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இது சம்பந்தமான யோசனைத் திட்டம் விரைவில் அரசுக்குத் தெரியப்படுத்தப்படும்.

**வைத்தியசாலையை அரசிடம் கையளிப்பதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.**

இந்த வைத்தியசாலையைப் பொறுப்பேற்றுக் கொள்ளுமாறு ஏற்கனவே அரசுக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது என்று கிழக்கு மாகாண முதலமைச்சர் அப்துல் மஜீத் தெரிவித்தார்.

இந்தப் பிரதான வைத்தியசாலையைப் பராமரிப்பது தொடர்பாக கிழக்கு மாகாண சபை அதிகளவு நிதியை செலவிடவேண்டியுள்ளது. அதனைச் சமாளிக்க முடியாத நிலையிலே இந்த யோசனை அரசிடம் முன்வைக்கப்பட்டுள்ளது என்று அவர் கூறினார். (ச-22)

# இலங்கையில் அழகான மாவட்டம் மட்டக்களப்பு

## கருணா தெரிவிப்பு

மட்டக்களப்பு,மே 17
இலங்கையில் அழகான மாவட்டமாகவும், அனைத்து வளங்களைக் கொண்ட மாவட்டமாகவும் மட்டக்களப்பு மாவட்டம் உள்ளது. ஆனால் அங்குதான் வறுமையும் அதிகமாகவுள்ளது. அந்தநிலையை மாற்ற வாழ்வாதாரத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இவ்வாறு மீள்குடியேற்றப் பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்தார்.

பட்டிப்பளையில் இடம்பெற்ற அடிக்கல் நடும் நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-



மட்டக்களப்பில் உற்பத்தி செய்யப்படும் நெல்லை கொள்வனவு செய்யும் நோக்கில் நெல் களஞ்சியசாலைகளை அமைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகளவான நெல் உற்பத்தியை வழங்கும் படுவான்கரை பிரதேசத்தை இலக்காகக் கொண்டு இந்த நெல் களஞ்சியங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

எமது எதிர்கால நிலைமைகள் தொடர்பில் சிந்திக்க வேண்டும். நடந்தவைகளைப் பற்றிப் பேசிக்கொண்டு இன்னும் நாங்கள் காலத்தைக் கடத்திக்கொண்டிருந்தால் அது எமது எதிர்கால சந்ததியினருக்குச் செய்யும் துரோகமாகும்.-என்றார். (ச)

# பத்திரிகைகளைப் பதிய கட்டணங்கள் அதிகரிப்பு



கொழும்பு,மே 17
செய்திப் பத்திரிகைகளைப் பதிவு செய்யும் கட்டணங்களை அரசு உயர்த்தியுள்ளது. அதற்கமைய தினச் செய்திப் பத்திரிகையொன்றைப் பதிவு செய்யும் கட்டணம் ரூபா ஐயாயிரம் வரையில் அதிகரிக்கப்பட்டுள்ளதோடு பதிவைப் புதுப்பித்துக் கொள்வதற்கான கட்டணமும் ரூபா ஐயாயிரம் வரையில் உயர்த்தப்பட்டுள்ளது.

இதனிடையே வெறும் ஏதேனுமொரு பத்திரிகை சம்பந்தமாக பதிவு செய்வதோ, அல்லது பதிவைப் புதுப்பித்துக் கொள்வது தொடர்பான கட்டணம் ரூபா இரண்டாயிரம் வரையில் உயர்த்தப்பட்டுள்ளது.

பதிவைப் புதுப்பித்துக் கொள்வது தொடர்பான விண்ணப்பங்கள் ஒவ்வொரு வருடமும் மார்ச் 31 ஆம் திகதிக்கு முன்னர் முன்வைக்கப்பட வேண்டியுள்ளதோடு அந்தத் திகதிக்குப் பின்னர் விண்ணப்பங்கள் முன்வைக்கப்படும் போது தாமதமாகும் ஒவ்வொரு மாதத்துக்கும் 500 ரூபா என்றவாறு தாமதக் கட்டணமொன்று செலுத்தப்பட வேண்டியுள்ளது.

இந்தப் புதிய கட்டணங்கள் உள்ளடக்கப்பட்டுள்ள அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் பொதுசன ஊடகங்கள் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவினால் வெளியிடப்பட்டுள்ளது. (வ-22)

# செயற்றிட்டத்தைத் தொடர புரிந்துணர்வு உடன்படிக்கை



கல்முனை,மே 17
கல்முனை மாநகர சபையில் ஆசிய மன்றம் நடைமுறைப் படுத்திவரும் உள்ளூர் பொருளாதார ஆட்சி செயற்றிட்டத்தை மேலும் இரண்டு வருடங்களுக்கு தொடர்வதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடும் நிகழ்வு முதல்வர் அலுவலகத்தில் நடைபெற்றது.

கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தம் முதல்வர் சிராஸ் மீராசாஹிப் மற்றும் ஆசிய மன்றத்தின் சிரேஷ்ட தொழில்நுட்ப ஆலோசகர் ஏ.சுபாகரன் ஆகியோரினால் பரிமாறிக் கொள்ளப்பட்டது.

இதன் பிரகாரம் கல்முனை மாநகர சபையில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்ற ஆசிய மன்றத்தின் செயற்பாடுகள் 2015 ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரை நீடிப்புச் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# விவசாயிகள் தீர்வு சபை மீண்டும் செயற்பாட்டுக்கு

## பொருளாதார அபிவிருத்தி அமைச்சு தகவல்

கொழும்பு, மே 17
விவசாயிகளின் முறைப்பாடுகள் மற்றும் மேன்முறையீடுகள் சம்பந்தமாக ஆராய்வதற்கு விவசாயிகளுக்கான தீர்வுச் சபைகள் மீளவும் இயங்கவுள்ளன என்று பொருளாதார அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

விவசாயிகள் சம்பந்தமான முறைப்பாடு அல்லது மேன்முறையீடு சம்பந்தமாக விசாரணைகளை மேற்கொண்டு தீர்மானங்களை வழங்குவதற்கான அதிகாரம் விவசாயிகள் தீர்வுச் சபைக்கு கையளிக்கப்படுகிறது.

விவசாயிகளின் முறைப்பாடுகள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படுவது தொடர்பாக கோரிக்கை விவசாயிகள் தீர்வுச் சபையிடம் முன்வைக்கப்படும் போது விவசாய சேவைகள் அபிவிருத்தி [illegible] பரிசீலனை தொடர்பாக இலக்கங்கள் வழங்கப்படும்.

**13 ஆண்டுகளுக்குப் பின்னரே விவசாயிகள் தீர்வுச் சபைகள் மீளச் செயற்பாட்டுக்கு வருகின்றன.**

அவரால் முன்வைக்கப்படும் ஒழுங்கு முறைக்கு அமைவாக விசாரணைகள் மேற்கொள்ளப்படும்.

13 ஆண்டுகளுக்குப் பின்னர் தற்போது விவசாயிகள் தீர்வுச் சபைகள் மீளச் செயற்பாட்டுக்கு வருகின்றன என்று பொருளாதார அபிவிருத்தி அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (ச-22)

# நிலவும் 59 பதவி வெற்றிடங்களுக்கு தலைமைப் பொலிஸ் பரிசோதகர்கள்

## அமைச்சரவை உப செயற்குழு பரிந்துரை

கொழும்பு,மே 17
59 உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பதவி வெற்றிடங்களுக்கு சிரேஷ்ட தரங்கள் மற்றும் திறமை அடிப்படையில் தலைமைப் பொலிஸ் பரிசோதகர்களை அந்தப்பதவி வெற்றிடங்களில் அமர்த்துவதற்கு அமைச்சரவை உபசெயற்குழு அமைச்சரவைக்குப் பரிந்துரைத்துள்ளது.

போட்டிப் பரீட்சையை நடத்தாது அவர்களுக்கு பதவி உயர்வை வழங்குவதற்கு உப செயற்குழு பரிந்துரை செய்துள்ளது.

உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பதவிக்கு தற்போது நிலவும் வெற்றிடங்களை சிரேஷ்ட தரம் மற்றும் திறமை அடிப்படையின் பேரில் தலைமைப் பொலிஸ் இன்ஸ்பெக்ரர்களைக் கொண்டு நிரப்புவதற்கு ஜனாதிபதி அமைச்சரவையின் அனுமதியைக் கோரியிருந்தார்.

அது சம்பந்தமாகவே தனது பரிந்துரைகளை முன்வைத்து அமைச்சரவையின் உப செயற்குழு உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்களுக்கான பதவி வெற்றிடங்களை தலைமைப் பொலிஸ் இன்ஸ்பெக்ரர்களைக் கொண்டு நிரப்புவதற்கு அனுமதி வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாகபூஷணி ஆலயத்தினுள் புகைப்படம் எடுக்கத் தடை

## கைத்தொலைபேசியும் பாவிக்கவும் முடியாது



யாழ்ப்பாணம், மே 17
நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயத்தின் உள்ளே புகைப்படம் எடுத்தல், கைத் தொலைபேசி பாவனை, ஒளிப் பதிவுக் கருவிகள், புகைப்படக் கருவிகளை எடுத்துச் செல்வது தடை செய்யப்பட்டுள்ளது.
ஆலய உள் வீதியில் இவற்றைப் பயன்படுத்த அனுமதிக்கப்பட மாட்டாது என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.
கடந்த செவ்வாய்க்கிழமை அம்பாள் ஆலய திருவிழா தொடர்பான கலந்துரையாடல் இடம்பெற்ற போது இவ்வாறு தீர்மானம் தீர் மானிக்கப்பட்டது.
பிரதேச செயலர் திருமதி மஞ் சுளாதேவி சதீஷன் தலைமை யில் ஆலய வளாகத்தில் நடை பெற்ற இந்தக் கூட்டத்தில் அறங் காவல் சபைத் தலைவர் ப.க. பரமலிங்கம், சபை உறுப்பி னர்கள், நயினாதீவு படகு உரிமையாளர் சங்கப் பிரதி நிதிகள், பொதுசுகாதார பரிசோத கர், கிராம அலுவலர்கள், தொண் டர் அமைப்புக்களின் பிரதிநிதி கள், கடற்படை, பொலிஸ் அதி காரிகள் கலந்துகொண்டனர்.
திருவிழாக்கால பாதுகாப்புக் கடமைகளில் பொலிஸார் கடற் படையினருடன் தொண்டர்க ளும் இணைந்து கடமையாற்ற வேண்டும்.
குறிகாட்டுவான் நயினாதீவு துறைமுகங்களில் கிராம அலு வலர்கள் சேவையில் ஈடுபடுத் தப்படுவார்கள்.
திருவிழா ஆரம்பமாகும் தினம் முதல் முடிவுறும்வரை துறை முகத்தில் இருந்து ஆலயம் வரை இரு வழிப்பாதைகளாக மக்கள் செல்லக் கூடியதாக ஏற்பாடு செய்வதன் மூலம் துறைமுகப் ப்குதியில் நெருக் கடிகளைத் தவிர்க்க நடவ டிக்கை எடுக்கப்படவுள்ளது.
போக்குவரத்தில் இருபத்து ஐந்து படகுகள் தினமும் சேவை யில் இருக்கும். 12 ஆம் திருவிழாவின் பின்னர் கூடுதல் படகுகள் சேவைகள் இணைக் கப்படும். படகுக் கட்டணம் வழமை போன்று ஒரு பயணிக்கு 30 ரூபா வீதம் அறவிடப்படும்.
திருவிழாக் காலங்களில் காலை 6 மணிமுதல் இரவு 8 மணிவரை படகுச் சேவைகள் இடம்பெறும்.
12 ஆம் திருவிழாவின் பின்னர் மக்கள் கூடுதலாக வருகை தருவார்கள் என்பதால் மக்க ளின் வரவைப் பொறுத்து இரவு சேவை மேலும் நீடிக்கும்.
தேர், தீர்த்தத் திருவிழாக்களின் போது அதிகாலை 4 மணிக்கு படகுச் சேவைகள் ஆரம்பமாகும்.
தனியார் பஸ்கள் மாலை 5.30 மணிக்குப் பின்னரும் குறிகாட்டுவான் துறைமுகத் துக்கு ஆலயத்தில் இருந்து வரும் மக்களை யாழ்.நகர் செல்லக் கூடியதான போக்கு வரத்துச் சேவையை ஏற்படுத் திக் கொடுக்கும்.
போட்டி போட்டு ஓடுதல் , தரிப் பிடங்களில் நிற்கும் மக்களை வலுக்கட்டாயமாக ஏற்றுதல் போன்ற நடவடிக்கைகளைத் தவிர்த்துக் கொள்ள வேண் டும் எனவும் இ.போ.ச. உத்தி யோகத்தர்கள் கூட்டத்தில் சமூக மளிக்காததால் இ.போ.ச. பஸ் சேவை குறித்து அவர்களுடன் தொடர்புகொள்ளப்படும் எனவும் பிரதேச செயலர் திருமதி ச. மஞ்சுளாதேவி தெரிவித்தார்.
சுகாதார சேவைகள் வழமை போன்று இறுக்கமாக இருக் கும். உணவு நிலையங்கள் மக்களின் சுகாதார விடயத் தில் உரிய கவனம் எடுக்க வேண்டும். பாதுகாப்பான குடி தண்ணீர் வசதிகள் ஏற்படுத் தப்பட வேண்டும். பிரதேச சபையும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களும் இணைந்து செயற்பட்டு இதற்கு உரிய நடவடிக்கைகளை முன்னெடுக் கவும் தீர்மானிக்கப்பட்டது.
வியாபார நிலையங்கள் பிர தேச சபையின் அனுமதியைப் பெற்றிருத்தல் வேண்டும். வர்த் தகச் செயற்பாடுகளில் சிறு வர்களை அமர்த்துபவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் இதில் தெரிவிக்கப்பட்டது. (ம-7)

## தமிழ்மொழிப் பயிற்சி பெற்ற 25 பிக்குகளுக்கு சான்றிதழ்கள்



வலி.வடக்கு, மே 17
கல்வி அமைச்சால் நடத்தப் பட்ட வெளிக்களத் தமிழ் மொழி பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்த 25 பௌத்த பிக்குக ளுக்கு சான்றிதழ்கள் வழங்கப் பட்டுள்ளன.
கல்வியியற் கல்லூரியில் செவ் வாய்க்கிழமை இந்த நிகழ்வு இடம்பெற்றது.
தென்னிலங்கையில் தமிழ் கற்று கடந்த இரண்டு வாரங் களாகக் களப் பயிற்சி பெறும் நோக்கில் இவர்கள் யாழ்ப் பாணம் வருகை தந்திருந்த னர்.
கோப்பாய் கல்வியியல் கல் லூரி பீடாதிபதி எஸ்.அமிர்த லிங்கம் தலைமையில் இடம் பெற்ற இந்த நிகழ்வில் இலங்கை பிரிவெனா கல்விப் பிரிவின் தமிழ் மொழி ஆலோசகர் உயல் காவே ஞானரத்னதேரர், அமைச் சர் டக்ளஸ் தேவானந்தா, 51 ஆவது படைப் பிரிவின் கட் டளை அதிகாரி, விசேட அதிர டிப் பொலிஸின் யாழ்.மாவட் டப் பொறுப்பதிகாரி, உதவிப் பொலிஸ் அத்தியட்சகர், வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ஆகியோர் கலந்து கொண்டனர். (ம-86)

## பாஷையூர் அந்தோனியார் ஆலய திருவிழா ஜூன் மாதம் ஆரம்பம்

குருநகர், மே 17
பாஷையூர் புனித அந்தோனி யார் ஆலயத்தின் வருடாந்த திருவிழாவுக்கான ஆயத்த வழி பாடுகள் எதிர்வரும் ஜூன் முத லாம் திகதி சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு கொடியேற் றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.
கொடியேற்றத்தைத் தொடர்ந்து பாஷையூர் குழந்தையேசு சொரூ பத்தின் முன்பாக வழிபாடு நடைபெறும்.
எதிர்வரும் ஜூன் 3 ஆம் திகதி மாலை 4.30 மணிக்கு பாஷை யூர் கடலில் நிறுவப்பட்டுள்ள புனித அந்தோனியார் திருச் சொரூபத்தில் வழிபாடு நடை பெறும். தொடர்ந்து மறுதினம் 4 ஆம் திகதி மாலை 5 மணிக்கு பாஷையூர் புனித அந்தோனி யார் தேவாலயத்தில் செபமாலை வழிபாட்டுடன் நவநாள் ஆரா தனைகள் ஆரம்பமாகும்.
எதிர்வரும் 12 ஆம் திகதி மாலை 5 மணிக்கு நற்கருணை ஆரா தனை நடைபெறும். மறுநாள் 13 ஆம் திகதி காலை திருநாள் திருப்பலிகள் இடம்பெறும்.
முதலாம் திருப்பலி காலை 5.15 மணிக்கும் திருநாள் சிறப்புத் திருப்பலி காலை 6.15 மணிக்கும் நடைபெறும்.
தொடர்ந்து அன்று மாலை 4.30 மணிக்கு புனிதரின் திருச்சொரூ பப் பவனியும் ஆசீரும் இடம் பெறும் என பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தின் பங்குத்தந்தை வண.பிதா. றோய் பேடினன்ற் அடிகளார் தெரிவித்துள்ளார். (வ-51)

## பண்டத்தரிப்பு பற்றிமா ஆலய திருச்சொரூப பவனி

யாழ்ப்பாணம்,மே 17
பண்டத்தரிப்பு புனிதபற்றிமா ஆலய திருச்சொரூபபவனி நாளை சனிக்கிழமை நடை பெறவுள்ளது.
கத்தோலிக்கர்களின் யாத்தி ரைத் தலங்களில் ஒன்றான பண்டத்தரிப்பு புனிதபற்றிமா அன்னை ஆலயத்தில் கடந்த திங்கட்கிழமை திருநாள் திருப் பலியும் தொடர்ந்து மாதாவின் திருச்சொரூப பவனியும் நடை பெற ஏற்பாடு செய்யப்பட்டிருந் தது.
யாழ்.மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு தோமஸ் சவுந்தர நாயகம் ஆண்டகை தலைமை யில் திருநாள் திருப்பலி நடைபெற்ற போதும் மழை காரணமாக திருச்சொரூப பவனி அன்றைய தினம் நடை பெறவில்லை. (ம-130)



வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில் பெற்றோர்களால் சிரமதானம் மேற்கொள்ளப்பட்டது.

## தண்ணீர் தாங்கியின் கட்டுமானப்பணி தீவிரம்

யாழ்ப்பாணம்,மே 17
யாழ்.மாநகரசபையால் கொழும்புத்துறை மேற்கில் அமைக் கப்பட்டுவரும் குடிதண்ணீர் விநியோகத் தாங்கியின் கட்டுமானப் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.
வதிரிபீட விநாயகர் ஆலயக் குடிதண்ணீர் கிணற்றுக்கு அருகில் இந்தத் தாங்கி அமைக்கப்பட்டு வருகிறது.
இந்தக் கிணற்றின் மூலமே தண்ணீரை விநியோகிக்க வசதியா கத் தாங்கி அமைக்கப்பட்டு வருகிறது. (ம-17)

## வரி செலுத்தலில் முறுகல் நிலை

வடமராட்சி, மே 17
வல்வெட்டித்துறை நகர சபையில் சோலை வரி செலுத்துவது தொடர்பாக சபைத் தலை வருக்கும் வரியிறுப்பாளரான பெண்மணி ஒருவருக்கும் இடையே இடம்பெற்ற முறுகல் நிலை வல்வெட்டித்துறைப் பொலி ஸாரால் சமரசமாகத் தீர்த்து வைக்கப்பட் டது.
வரியிறுப்பாளரான பெண் சோலை வரி செலுத் துவது தொடர்பாகக் காணி உறுதியை நகரசபை அலுவலகத்துக்கு எடுத்துச் சென்ற போது உறுதி யைப் பரிசீலனை செய்த தலைவர் குறித்த பெண்ணுடன் கடுமையாக நடந்து கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டது.
இது குறித்து வல்வெட்டித்துறைப் பொலிஸில் முறைப்பாடு செய்ததைத் தொடர்ந்து பொலிஸார் இரு தரப்பினரையும் சமரசம் செய்து வைத் தனர். (ம-8)

## 8,472 புற்றுநோயாளர் சிகிச்சை

### கடந்த வருடத்தில் மட்டும்

குருநகர்,மே 17
யாழ். மாவட்டத்தில் 2012 ஆம் ஆண்டு காலப் பகுதியில் 8 ஆயிரத்து 472 புற்றுநோயா ளர்கள் வைத்தியசாலை களில் சிகிச்சை பெற்றுள்ள னர் என்று யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பா ளர் அலுவலகத்தால் வெளி யிடப்பட்ட புள்ளிவிவரங்கள் மூலம் தெரிய வந்துள்ளது.
அந்தப் புள்ளி விவர அடிப்ப டையில் மேலும் தெரிய வருவ தாவது;
யாழ். போதனா வைத்திய சாலையில் 6 ஆயிரத்து 628 புற்றுநோயாளர்களும் , பருத்தித்துறை ஆதார வைத் தியசாலையில் ஆயிரத்து 88 புற்று நோயாளர்களும், சாவ கச்சேரி ஆதார வைத்தியசாலை யில் 513 பேரும், பிரதேச வைத்தியசாலை சங்கானை யில் 168 பேரும், பிரதேச வைத்தியசாலை காரைநகரில் 155 பேரும் சிகிச்சை பெற்றுள் ளனர். (வ-51)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் விளம்பர தொடர்புகளுக்கு:
**021 5671111**
advt@uthayan.com


## வீடு விற்பனைக்கு

நல்லூர், நாவலர் வீதியில் நல்ல சுற்றாடலில் ஒரு பரப்பில் அமைந்த சுற்றுமதில் கொண்ட வீடு விற்பனைக்குண்டு.
தரகர் தேவையில்லை
T.P: 077 684 8840 (35370)(6.11)

## விற்பனைக்கு

கோப்பி வறுக்கும் இயந்திரம், கோப்பி அரைக்கும் இயந்திரங் களும் விற்பனைக்குண்டு.
தொ.பே: 077 327 3125 (36591)(6.11)

# 63 ஆவது பிறந்தநாளும் முதலாம் ஆண்டு நினைவலையும்

ம[illegible]மகிழ
17★[illegible]5★1950



கண்நெகிழ
03★02★2012

## அமரர் கந்தப்பு செல்வராசா

(முன்னாள் காசாளர் - கூட்டுறவுச்சங்கம், கொடிகாமம்)

அப்பா எம்மைவிட்டு நீங்கள் பிரிந்து முதலாவது
ஆண்டிலே உங்கள் 63 ஆவது பிறந்தநாள்
வாழ்த்துக்களை எம் மனங்களில் சொல்லி மாளுகின்றோம்
ஆயிரம் சொந்தங்கள் அவனியில் வந்தபோதும் அப்பா
உங்கள் சொந்தமின்றி அல்லலுறுகின்றோம்
ஆயிரம் ஜென்மங்கள் கடந்தபோதும் அப்பா
உங்களை நாம் என்றும் மறவோம்
தந்தைக்கு இலக்கணம் வகுத்தவரே
எம் சிந்தையில் உம்மை வைத்துத் துதிக்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

இடைக்குறிச்சி, வரணி.

குடும்பத்தினர். செ.பொன்னம்மா (மனைவி).
பிள்ளைகள்:- செ.றஞ்சனா, செ.சர்மிளா, செ.கார்த்திகா, செ.ராதிகா, செ.சுஜிதரன்.

[35372][2.6]

# MA, M.com, MBA, M.sc,PG Dip
# காமராசர் பல்கலைக்கழகம், மதுரை.

**மேற்படி பல்கலைக்கழகத்தினால் மார்கழி மாதம் பரீட்சை எடுப்பவர்களுக்கான புதிய பதிவுகள் கோரப்பட்டுள்ளன.**

| | |
|---|---|
| MA இல் | பொருளியல், வரலாறு, அரசியல் விஞ்ஞானம், சமூகவியல், தமிழ், ஆங்கிலம், பொது நிர்வாகம், சமயமும் தத்துவமும், Labour Management, Master of Computer Application, Journalism and Mass Communication Tourism Management ஆகிய பாடங்களில் ஒன்றினைத் தெரிவுசெய்ய முடியும். |
| M.Com. இல் | வர்த்தகம், Co-op Management, Banking ஆகியவற்றில் ஒன்றினைத் தெரிவுசெய்ய முடியும். |
| PG Diploma | ஒருவருட கற்கை நெறியாக Journalism and Mass Communication, Management, Marketing Management, Hospital Management, Public Relation Management, Computer Application ஆகிய பாடங்களில் ஒன்றினைத் தெரிவுசெய்ய முடியும். |

பதிவுகள் யாவும் காமராசர் பல்கலைக்கழகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட யாழ். இணைப்பாளர்கள் ஆகிய எமது நிறுவனத்தினூடாக நடைபெறுகின்றன.

பதிவு முடிவு திகதி: 30.05.2013

கவனிக்குக: May 2013 பரீட்சைக்கு விண்ணப்பித்த பரீட்சார்த்திகளுக்கான பரீட்சைகள் ஆரம்பம்

1. BA, BSc, Bcom, B.Ba ஆகியவற்றுக்கு 17.05.2013
2. MA, MCom, MSc ஆகியவற்றுக்கு 24.05.2013

மேற்படி பரீட்சைகளுக்கான நேர அட்டவணையும் அனுமதி அட்டைகளையும் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளவும்.

* பரீட்சைகள் யாவும் காமராசர் பல்கலைக்கழகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட யாழ். இணைப் பாளர்கள் ஆகிய புதிய உயர் கல்லூரி வளாக பரீட்சை மண்டபத்தில் நடைபெறும்.
* காமராசர் பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் பட்டங்கள் யாவும் இலங்கை பல்கலைக் கழகமானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டவையாகும்.

யாழ். இணைப்பாளர்,
காமராசர் பல்கலைக்கழகம் (மதுரை)
தொ.பே. 021 222 8148, 077 846 9721.

புதிய உயர் கல்லூரி,
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம். (சி/9423) (46.6)

# நெஞ்சம் பரிதவிக்கும் 12 ஆம் ஆண்டுகளில்.....

பிறப்பு 11.09.1984 — இறப்பு 27.05.2001



## இலங்கநாயகம் துஷ்யந்தி

ஆசைக்கோர் புத்திரியென்று அன்பாய் நாம் பெற்றெடுத்து
அன்னமிட்டு அழகுப் புடைவையுடுத்தி-நீர்
அசைந்து வரும் அழகு கண்டு நாம் அகம் மகிழ்ந்து இன்புற்றிருந்தோம்
அணியணியாக அன்பர்கள் வாழ்த்த மணக் கோலங் காணும் மகிமையை எண்ணி
சொரியும் ஆவல் கொண்டு நாம் நின்றோம் பார்த்துப் பார்த்து கட்டிய எம் கோட்டையை
பரிவின்றித் தகர்த்தான் கொடிய காலனவன்

*பிரிவை எண்ணித் தவிக்கும்*

கைதடி.

அப்பா, அம்மா, அண்ணன்மார், அண்ணிமார், மருமக்கள்.

(37369)(6.11)

# ஒன்பது ஆண்டுகளும் ஆயிற்றோ....... ஒளிமுகம் மறைந்து?



செல்வன்

## மரியரட்ணம் குணரட்ணம் (குணம்)

(ஹாட்லிக் கல்லூரியின் பழைய மாணவனும் பேராதனைப் பல்கலைக்கழக 2 ஆம் வருட பொறியியல் பீட மாணவனுமாகிய இலட்சிய வேந்தன்)

தாயின் மடியில்
04.08.1981
புகையிரதத்தின் பிடியில்
17.05.2004

ஆண்டுகள் ஒன்பதாகியும்
ஆறவில்லையடா மனம்
அழுது தொலைத்திட்டாலும்
அமைதியில்லையடா குணம்
அன்பை விதைத்து
அனைவரையும் கவர்ந்தவனே
உன் கனவுகள் மெய்ப்பட்டு
உறவுகள் கூடுதடா
மச்சானாய், மாமனாய்
சித்தப்பா ஸ்தானத்தில்
உனையழைக்க எத்தனைபேர்
கொடுத்து வைக்கவில்லை
எம் குலவிளக்கே

ஆசை மாமா என்றுன்னை
அழைக்கும் பிஞ்சு ஒன்று
பாசமொழிக்கு பதில் காணாமல்
கையை விரித்துக்
காணவில்லை என்கின்றான்

தாயிடம் நீ என
சமாதானம் சொல்ல உன்
தாய்படும் நிலை கண்டு
நாமெல்லாம் வெம்புகின்றோம்

வெம்பும் துயர் போக்க
நீ விட்டுச்சென்ற நண்பர் கூட்டம்
உன் பெயர் சொல்லி
ஓடோடி வரும்போது - உன்
அன்பு முகம் கண்டு
ஆறுதல் அடைகின்றோம்.

ஆசை மகனே!
அன்புச் சோதரனே - பாசக்கூட்டை விட்டு நீ
பறந்தோடிப் போனாலும்
உணர்வால், உயிரால் உருவத்தால்
எம் மனவானில் எப்போதும்
நீ வாழ்வாய்

நிரந்தர முகவரி:- 6 ஆம் வட்டாரம், மயிலிட்டி.
தற்காலிக முகவரி:- சாரையடி, புலோலி.

*உன் நினைவில் வாழும்*
குடும்பத்தினர்.

(37391)(2.6)

# மரண அறிவித்தல்

## நாகலிங்கம் சண்முகநாதன் (J.P)



நயினாதீவு, 7 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், 4ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் சண்முகநாதன் 11.05.2013 அன்று காலமானார்.

அன்னார் கனகாம்பிகையின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம்-பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மருமகனும், யோகேந்திரன் (சவுதி), சசிகலா (ஜேர்மனி), கோமுகி, வரகுணன், முகுந்தன், ஜெகந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும் கலைச்செல்வி, குலசிங்கம் (ஜேர்மனி), ஜெயராஜன், பத்மராணி, ஜெயவாணி, பவித்திரா ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரசாத், அபிலாஷினி, பிரவீன், பிரதீபன் (ஜேர்மனி), நர்மிதா, நர்மிதன், அனுஷாஜினி, திஷோக்மன் ஆகியோரின் பேரனும், சிவபாக்கியம், மயில்வாகனம், பாலசுந்தரம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான வீரவாகு, நேசமணி, பரமசிவம் மற்றும் லீலாவதி, பாலசிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (19.05.2013) ஞாயிற்றுக் கிழமை அன்னாரின் இல்லத்தில் காலை 8 மணியளவில் நடைபெற்று பூதவுடல் நயினாதீவு சல்லிபரவை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

4 ஆம் வட்டாரம், நயினாதீவு.
021 320 5666
077 571 8594 (36554)(6.11)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடாவின் பெருந்தன்மை இலங்கை அரசுக்கு இல்லை

## 13 ஆவது திருத்தத்திலுள்ள அதிகாரங்கள் தமிழருக்குக் கிடைக்காது என்கிறார் குகவரதன்

கொழும்பு,மே 17
கனடாவில், 'வன்னி வீதி' என்று பெயர் வைக்க அந்த நாட்டு அரசு அனுமதியளித்துள்ள அதேவேளை, கொழும்பில் நாம் 'தமிழ்ச் சங்க வீதி' என்ற பெயர் வைப்பதற்கு இலங்கை அரசு முட்டுக்கட்டை போடுகின்றது.

இந்த அடிப்படை உரிமையைக் கூட வழங்க மறுக்கும் அரசு எப்படி 13 ஆவது திருத்தத்தை உரிய முறையில் நடைமுறைப்படுத்தும் என்று கேள்வியெழுப்பினார் ஜனநாயக மக்கள் முன்னணியின் உப பொதுச் செயலாளரும், கொழும்பு மாநகர சபை உறுப்பினருமான சண். குகவரதன்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஏதோவொரு தேசத்தில் 'வன்னி வீதி' என்று பெயர் வைத்து தமிழர்களைக் கௌரவப்படுத்தியுள்ளது அந்த நாட்டு அரசு. ஆனால் இலங்கையில் கொழும்பு மாநகர சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட 'தமிழ்ச் சங்க வீதிப்' பெயரிடலை இந்த அரசும், அதன் இனவாத சக்திகளும் தடுத்துள்ளன.

கடந்த வருடம் நவம்பர் மாதம் ஆரம்பமான இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதாக தெரிவித்த தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்காரா, 6 மாதங்கள் கடந்தும் மௌனம் சாதிக்கிறார்.

நமது நாட்டின் நிலைமை இந்த அரசின் மனோபாவம்- இப்படித்தான் இருக்கின்றது. கனடா அரசு செய்ததைப் போன்றதான பரந்த மனப்பாங்கு இங்கு இல்லை.

இவ்வாறானதொரு நிலையில் வடக்கில் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட்டாலும், 13 ஆவது திருத்தத்திலுள்ள அதிகாரங்கள் தமிழ் மக் களுக்குக் கிடைக்கப் போவதில்லை- என்றார். (ச-5)

# நிவாரணம் வழங்கும் பணிகள் ஆரம்பம்

## இடர் முகாமைத்துவ அமைச்சர் தெரிவிப்பு



கொழும்பு,மே 17
சீரற்ற காலநிலையால் இடம்பெயர்ந்த மக்களுக்கு நிவாரணம் வழங்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று இடர் முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த அமரவீர கூறினார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வெள்ளம், மண்சரிவு போன்ற இடர்களால் இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு சமைத்த உணவு மற்றும் தற்காலிகக் கூடாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

மக்களின் அவசரத் தேவைகளுக்காக மேலும் பல பொருள்களை பாதிக்கப்பட்ட மக்களுக்காக கொழும்பிலிருந்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கடும் மழையை அடுத்து ஏற்பட்ட மண் சரிவால் வீதிகளில் குவிந்துள்ள மண் மற்றும் கற்களை அகற்றும் நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நீர் வழிந்தோடுவதற்கு ஏதுவாக வடிகான் கட்டமைப்பை புனரமைக்கும் பணிகளும் நீரோடைகளை அகலப்படுத்தும் நடவடிக்கையும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.


சீரற்ற கால நிலையால் இடம்பெயர்ந்த மக்களுக்கு நிவாரணங்களை வழங்க நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது. -என்றார். (ச)

# 31 பேரின் உயிரை குடித்தது டெங்கு!

கொழும்பு,மே 17
ஜனவரியில் இருந்து ஏப்ரல் மாதம் வரையான 4 மாத காலப் பகுதியில் 31 பேர் டெங்கு நோயால் சாவடைந்துள்ளனர்.

1110 பேர் டெங்கு நோயாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சு தகவல் வெளியிட்டுள்ளது.

டெங்கு நோய்த் தொற்றால் மேல் மாகாணமே அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இருப்பினும் கடந்த வருடங்களை விட இந்தமுறை பாதிப்பு குறைவாகவே உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்



றது.

யாழ்ப்பாணம், கொழும்பு, ஹம்பாந்தோட்ட, களுத்துறை, இரத்தினபுரி, குருநாகல், கண்டி, கேகாலை, புத்தளம் மற்றும் கல்முனைப் பகுதிகளே அதிகமாக டெங்கு பரவும் மாவட்டங்களாக இனங் காணப்பட்டுள்ளன என்று சுகாதார அமைச்சு கூறுகின்றது. (ஒ-ரி)

# ஜி.சீ.ஈ உயர்தர வகுப்புக்கள் ஜூலை 15 முதல் ஆரம்பம்

## சுற்றறிக்கை பாடசாலைகளுக்கு



கொழும்பு,மே 17
இந்த வருடத்துக்கான ஜி.சீ.ஈ உயர்தர வகுப்புக்கள் எதிர்வரும் ஜூலை மாதம் 15 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்படவுள்ளன என்று கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

கல்வி அமைச்சில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டின் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உயர்தர வகுப்புகளுக்கு மாணவர்களைச் சேர்த்துக்கொள்வது தொடர்பிலான சுற்றறிக்கை சகல பாடசாலைகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

சேர்த்துக்கொள்ளப்பட்ட மாணவர்களது பெயர்ப் பட்டியலை அதிபர்கள் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்பு அமைச்சின் அல்லது மாகாண செயலருக்கு அனுப்பி வைக்க வேண்டும். சுற்றறிக்கையை மீறிச் செயற்படும் அதிபர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க அமைச்சு ஒருபோதும் தயங்காது.

இதேவேளை ஜி.சீ.ஈ உயர்தர வகுப்புகளுக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கு இந்த வருடம் முதல் தகவல் தொழில்நுட்பம் புதியதொரு பாடமாக அறிமுகப்படுத்தப்படுவதால் அவர்களில் அநேகமானவருக்கு பல்கலைக்கழகம் செல்வதற்கான வாய்ப்பு அதிகரிக்கும்.-என்றார். (ச)



கொழும்பு அல்ஹிதாயா மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கம் ஏற்பாடு செய்திருந்த "ஹிதாயன்ஸ் நைட் 2013" நிகழ்வு கொழும்பு கொள்ளுப்பிட்டி ரண்முத்து ஹோட்டலில் இடம்பெற்றது.
இந்நிகழ்வில் ஏ.எச்.எம்.பௌசி, பழைய மாணவர் சங்கத்தின் பொதுச் செயலர் எம்.எஸ்.ஏ.லாபிர், கல்லூரி அதிபர் எஸ்.எச்.எம்.நௌபல், கொழும்பு மாநகர முதல்வர் ஏ.ஜே.எம்.முஸம்மில் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ச-ரி)

# போலி ஆவணங்கள் தயாரித்த பெண் கைது

கொழும்பு,மே 17
போலி ஆவணங்கள் மற்றும் அவற்றை தயார் செய்ய பயன்படுத்தப்பட்ட போலி இறப்பர் முத்திரைகள் என்பவற்றுடன் கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினரால் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொரளை பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் குறித்த பெண் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

# நுவரெலியாவில் கடும் பனி, குளிர்



நுவரெலியா,மே 17
நுவரெலியா நகர அண்டிய பகுதிகளில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை காலை தொடக்கம் கடும் பனிமூட்டம் நிலவுகிறது என்று தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் அங்கு கடும் குளிர் காலநிலை நிலவுகிறது. பனிமூட்டம் அதிகம் என்பதால் சாரதிகள் அவதானமாக வாகனம் செலுத்த வேண்டும் என்று பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச)

# இலங்கை கடவுச்சீட்டு இருந்தால் வாக்களிக்கத் தகுதியுடையவர்கள்

## தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு



கொழும்பு,மே 17
எந்தநாட்டில் வசிப்பினும் அவர்கள் இலங்கை கடவுச்சீட்டைக் கொண்டிருப்பினும் அவர்கள் வாக்களிப்பதற்குத் தகுதியுடையவர்கள். இருப்பினும் அவர்கள் வாக்களிப்பதற்கு இலங்கைக்கு வர வேண்டும் என்று தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வெளிநாடுகளிலிருந்து மீள இலங்கைக்கு வர இருப்பவர்களது [illegible] அவரது [illegible] கள் வாக்காளர் பெயர்ப்பட்டியலில் பதிவு செய்ய முடியும். அவ்வாறு இலங்கை கடவுச்சீட்டு உள்ளவர்கள் அனைவரும் வாக்களிக்கத் தகுதியுடையவர்களாவர்.

அவர்கள் எமக்கு கடிதம் அனுப்பினால் நாம் அதற்குரிய கவனத்தை செலுத்துவோம். எனினும் வாக்களிப்பதற்கு அவர்கள் இங்கு வரவேண்டியது அவசியம்.

தேர்தல் தினத்தன்று கடமையில் ஈடுபடும் நிரந்தர ஊடகவியலாளர்களுக்கும் தபால் மூல வாக்களிப்பதற்கான அனுமதி வழங்கப்படுவது தொடர்பில், ஊடகவியலாளர்கள் எழுத்து மூலமாக கோரிக்கை விடுத்தால் அது தொடர்பில் பரிசீலிக்கப்படும்.

வடக்கிலிருந்து இடம்பெயர்ந்து வேறு பிரதே சங்களில் வாழ்வோர் தம்மை வாக்காளர் இடாப்பில் பதிவதில்லை.

அத்துடன் வாடகை வீடுகளில் வசிப்போரும், வீட்டு உரிமையாளர்களின் வீண் சந்தேகங்களால் வாக்களிப்பு உரிமை அவர்களுக்கு மறுக்கப்படுகின்றது. இவற்றை சீர்செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.- என்றார். (ச-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் தொடர்புகளுக்கு

**வன்னிப் பணிமனை:**
ஏ - 9 வீதி, கரடிப்போக்கு, கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789, 021 226 2395
**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி, சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' - மாலுசந்தி, அல்வாய் : 021 226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' - பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, ஜோதி புக் சென்ரர் - மன்னார்: 0232222052 'மீசாலை கஜானன்' - கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' - தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' - பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'கோபி எலைக்சிற்றி' - முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' - சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571.

# சரிநிகர் தருவார்களா?

'இங்கு நல்ல மீன்கள் விற்கப்படும்' என்று ஒரு அறிவிப்பு பலகையில் எழுதிவிட்டு மீன் விற்பனையில் இறங்கியிருந்தான் ஒரு வியாபாரி. அப்போது அங்கு வந்த ஒரு வழிப்போக்கன் நீண்ட நேரமாக அந்த அறிவிப்புப் பலகையையே பார்த்துக்கொண்டிருந்தான்.

''என்ன அந்தப் பலகையையே பார்த்துக் கொண்டிருக்கிறாயே. ஏதாவது தவறாக எழுதியிருக்கிறதா?'' என்று வியாபாரி கேட்டான். அதற்கு வழிப்போக்கன் ''யாராவது பழுதான மீன்களை விற்பதுண்டா?'' என்று கேட்டான்.

''இல்லை. எப்போதுமே நல்ல மீனைத்தான் விற்பனை செய்ய முடியும்'' வியாபாரி.

''அப்படியானால் ஏன் நல்ல மீன்கள் விற்பனை செய்யப்படும் என்று எழுதியிருக்கிறாய்? அது தேவையில்லைத்தானே''. வழிப்போக்கன்.

வழிப்போக்கன் சொல்வதும் சரிபோல பட்டது. உடனேயே வியாபாரி தனது அறிவிப்புப் பலகையில் இருந்து நல்ல என்ற சொல்லை நீக்கினான். அப்படியும் வழிப்போக்கன் இன்னொரு சந்தேகத்தை எழுப்பினான்.

''நீ வேறெங்காவது மீன் விற்பது உண்டா?''

''இல்லை இங்கு மட்டும்தான்.''

''அப்படியானால் ஏன் இங்கு மீன்கள் விற்கப்படும் என்று எழுதியிருக்கிறாய்?''

உடனேயே வியாபாரி இங்கு என்ற சொல்லையும் அழித்தான். திரும்பவும் வழிப்போக்கன்,


''நீ மீனைத் தவிர வேறொன்றையும் விற்கவில்லைத் தானே? அப்படியானால் மீன்கள் விற்கப்படும் என்பதில் மீன்கள் என்ற சொல் தேவையில்லைத் தானே?'' என்று கூறினான். மறுபடியும் மீன்கள் என்ற சொல்லை அறிவிப்புப் பலகையில் இருந்து அழித்தான் வியாபாரி.

''இங்கு நீ மீனை விற்கத்தானே வைத்திருக்கிறாய். பிறகேன் விற்கப்படும் என்ற அறிவிப்பு'' என்று வழிப்போக்கன் கேட்க மறுபேச்சின்றி பலகையில் எஞ்சிக்கிடந்த விற்கப்படும் என்ற சொல்லையும் துடைத்தெறிந்தான் வியாபாரி. இப்போது வெறும் பலகை மட்டுமே எஞ்சியிருந்தது.

''எதையும் எழுதாமல் பலகையை மட்டும் ஏன் தொங்கவிட்டிருக்கிறாய்?'' என்று தனது கடைசிச் சந்தேகத்தை வழிப்போக்கன் கேட்பதற்கு முன்பாகவே அதனை கழற்றி வீசியெறிந்தான் வியாபாரி. கடைசியில் மீன் விற்பனை பற்றிய அறிவிப்புப் பலகை இல்லாததால் இன்று வியாபாரம் நடைபெறாது என்று எண்ணி வந்தவர்கள் திரும்பிப் போகத் தொடங்கினர். வியாபாரி பழுதடைந்த மீன்களோடு வீடு திரும்ப வேண்டியிருந்தது.

இதைப்போலதான் சும்மாவே அதிகாரம் அற்று தொங்கிக் கொண்டிருக்கும் மாகாணசபைகளின் ஆயுளை இல்லாதொழிக்க தேசியப் பற்று இயக்கம் முனைப்புக்காட்டி வருகிறது. மாகாண சபைகளிடம் உள்ள ஆறு அதிகாரங்களையும் அகற்றிவிட்டு பல்லில்லாத பாம்பாக அதனை மாற்ற வேண்டும் என்று அந்த இயக்கத்தின் குணதாச அமரசேகர கூறியிருக்கிறார். ஒரு குண்டூசியை வாங்கக் கூட மாகாண சபைகளுக்கு அதிகாரம் இல்லாத நிலையில் இருக்கும் மிச்சசொச்ச அதிகாரத்தையும் அகற்றிவிட்டு உயிரற்ற உடலாக மாகாண சபைகளை வடக்குத் தேர்தலுக்கு முன்னர் மாற்றுவதே பேரினவாதிகளின் திட்டம்.

ஏனெனில் மாகாணசபையைக்கூட தமிழர்கள் ஆளக்கூடாது என்பதே பேரினவாதிகளின் அடிமன நினைப்பு. அப்படிப்பட்டவர்கள் எப்படி தமக்கு நிகராக தமிழர்கள் வாழ பொறுத்திருப்பார்கள்? இனவாதத் தீ ஏதோ ஒரு விதத்தில் எரிந்து கொண்டுதான் இருக்கிறது.



# வேகமாக வளர்ந்துவரும் தகவல் தொழில்நுட்பம்

■ கவிதாயினி

விஞ்ஞானத்தின் அசுர வளர்ச்சி காரணமாக வியத்தகு முறையில் தொலைத் தொடர்பு சாதனத்துறை இன்று வளர்ச்சியடைந்துள்ளது. உலகில் மிக வேகமாக வளர்ந்துவரும் துறைகளில் தொலைத் தொடர்புத் துறையும் ஒன்றாகும்.

ஆரம்ப காலத்தில் சைகை, பின்னர் புறாவிடு தூது, முரசறைதல் போன்ற பல்வேறு முறைகளால் வெளிப்படுத்தப்பட்ட இத் தொடர்பாடல் முறைமை, கடிதம், தந்தி, மின்னஞ்சல் என விரிவுபடுத்தப்பட்டுள்ளது. நவீன தொடர்பாடல் முறையானது 1450 களில் ஜோகன்ஸ் கட்டன்பர்க் என்பவர் அச்சு இயந்திரத்தை கண்டுபிடித்த நிகழ்வுடன் ஆரம்பித்தது. பத்திரிகை வாயிலாக ஆரம்பிக்கப்பட்ட தொடர்பாடலை ''கிரஹம்பெல்'' தொலைபேசி அலைவரிசைக்குள் நகர்த்தினார். தந்தி முறையை மேம்படுத்த கிரஹம்பெல் மேற்கொண்ட முயற்சி தொலைபேசி பயன்பாட்டுக்கு வித்திட்டது . தோமஸ் வாட்சன் தொலைபேசியை வடிவமைக்க ,கிரகம்பெல் மின்சாரம் மூலம் ஒலியைக் கடத்துவது தொடர்பான யோசனையை முன்வைத்தார்.

**இன்று மே 17 சர்வதேச தொலைத் தொடர்பு தினமாகும்**

கம்பியில்லாத் தந்தி அறிமுகப்படுத்தப்பட்டதை தொடர்ந்து வானொலி, தொலைக்காட்சி, தொலைபேசி கையடக்கத் தொலைபேசி, தொலைநகல், மின்நகல், மின்னஞ்சல், இணையம் , செய்மதித் தொடர்புகள்என்பன நவீன தொலைத் தொடர்பு சேவைக்குள் உள்வாங்கப்பட்டன.

தொழில்நுட்ப வளர்ச்சிக்குள் இலத்திரனியல் நுட்பங்களைப் புகுத்தி தொலைபேசியை இலத்திரனியலுக்குள் வசப்படுத்தியவர்கள் ஜப்பானியராவர். இன்று மக்களிடையே செல்லிடத் தொலைபேசிப் பாவனை ஏறுமுகம் காட்டி நிற்கின்றது.

அதுமாத்திரமின்றி தொழில்நுட்பத் தொலைத் தொடர்பு வளர்ச்சியினால் ஏற்பட்ட அதி நவீன சாதனையாக இணையம் கருதப்படுகின்றது. நாம் உட்புகுத்தும் தரவுகளை எமக்குத் தகவலாகச் சேமித்து மீளத் தரக்கூடிய கணனிப்பாவனை இணையச் சேவையில் தொடர்புபட்டுள்ளதால் வலைப்பின்னல்கள் மூலம் பல நாட்டு மக்கள் தமக்கிடையே தகவல் பரிமாற்றங்களை இலகுவாகவும், வினைத்திறனுடனும் பேணிப் பயன்பெற வழிவகுத்துள்ளது.

ஆரம்பகாலத்தில் இந்த இணையச்சேவை ஆங்கில மொழியில் வல்லரசுகளின் இராணுவத் தேவைக்காக மட்டுமே பயன்படுத்தப்பட்டது.

எனினும் பின்னர் உலகமயமாக்கலின் விளைவாக பன்முகப்படுத்தலின் கீழ் தொலைத் தொடர்பு சாதனமாக மாற்றம் கண்டது. இன்று மின்னியல் தபால், மின்னியல் சஞ்சிகை, மின்னியல் வெளியீடு, ரெல்நெட், தொடர் கலந்துரையாடல், உலகின் பரந்த வலையமைப்பு என்பன மூலம் நவீன தொடர்பாடல் துறை எமக்குச் பயனளித்து வருகின்றது.

தொடர்பாடல், தகவல் பரிமாறல் எனும் இருவகையினாலான இணைய தகவல் துறையின் சேவை மக்களின் அன்றாட வாழ்வுக்கு முதுகெலும்பாய்த் திகழ்கின்றது. அதேபோல் நவீன தொலைத் தொடர்பில் செய்மதிகளும் நேரடிப்பங்களிப்புச் செய்கின்றன. மேற்குலக நாடுகளே இதனை வினைத்திறனுடன் அதிகளவில் பயன்படுத்திவருகின்றன.

இந்த நாடுகளில் வாகனங்களில் ''நெவிகேடர்'' பொருத்தப்பட்டுள்ளன. இவை பாதை வழிகாட்டியாகும். நாம் செல்ல வேண்டிய இடத்தின் முகவரியை நிரப்பினால் செய்மதியின் துணையுடன் குரல் சமிக்ஞயாக எமக்கான பாதையை வழிகாட்டிச் செல்லும்.

எமது அன்றாட வாழ்வோடு பின்னிப் பிணைந்துள்ள இத் தொடர்பாடல்கள் மூலம் மக்களின் கலை, வர்த்தகம், பொழுதுபோக்கு மேம்படுத்தப்படுகின்றது. அதுமாத்திரமின்றி அனர்த்தவேளைகளில் எமது உயிர்களைப் பாதுகாக்கவும் இது உதவுகின்றது.

தொலைத்தொடர்பானது தொழினுட்பத்தின் வளர்ச்சியோடு போதிக்கப்பட்டு வருவதால் ஒரு நாட்டின் அபிவிருத்திக்கு தோள் கொடுக்கும் ஒப்பற்ற சாதனமாகவும் விளங்குகின்றது.

1865இல் உருவான சர்வதேச தொலைத் தொடர்பு சங்கத்தின் குரலாக (International Telecommunication Union) உலக தொலைத் தொடர்பு தினம் ஒவ்வொரு வருடமும் மே மாதம் 17 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படுகின்றது.

இதன் வளர்ச்சியினால் மறுபக்கம் நாடுகளை வேவு பார்த்தல், கலாச்சார சீரழிவு, முரண்பாடுகளும் பகைமைகளும் தோன்றுதல் போன்ற பிரதிகூலங்களும் இருப்பினும் இன்றைய நவீன வாழ்வியலில் இத் தொலைத் தொடர்புச் சேவையின் பங்களிப்பு இன்றியமையாததொன்றாக ஆகிவிட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசு தன்னை மாற்றிக் கொள்ள வேண்டும்

■ கந்தவனம் கோணேஸ்வரன்

ஒரு ஜனநாயக நாட்டின் ஆணிவேரே சட்டத்தின் ஆட்சிதான். சட்டவாட்சி சிதைந்துபோகுமாயின் அங்கு ஜனநாயகம் செயலிழந்து விட்டது என்பதுதான் பொருள். சட்டத்தின் பலம் உயர்ந்திருக்கும் வரையில்தான் மக்கள் ஆட்சியாளர்கள் மேல் நம்பிக்கைக்கொண்டிருப்பர். சட்டம் தடுமாறத் தொடங்கினால் மக்கள் வேறு; ஆட்சித் தலைமை வேறு என்றாகிவிடும்.

இலங்கையில் இப்போது சட்டவாட்சி நடக்கின்றதா என்ற ஐயம் நீதி அமைச்சருக்கே ஏற்பட்டிருப்பது நாட்டுக்குப் பெரிய தலைகுனிவு. நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் பகிரங்கமாகவே இந்த வெட்கக்கேடான விடயத்தைத் தெரிவித்திருக்கின்றார். இது அவரது இயலாமையின் உச்சக்கட்டம் என்பது வேறுவிடயம்.

பௌத்த சிங்களவராகப் பிறக்காத எல்லோரும் இந்த நாட்டின் இரண்டாந்தர குடிமக்களே என்பது இப்போது முஸ்லிம் தலைமைகளுக்குக் கூட புரியத் தொடங்கியுள்ளது. தமிழர்கள் அரசுடன் மோதிக்கொள்வதால் முஸ்லிம்கள் அரசின் செல்லப் பிள்ளைகளாகவே வாழ்ந்துவிடலாம் என்ற கனவை முஸ்லிம் அரசியல்வாதிகள் கலைக்கவேண்டிய நேரம் வந்துவிட்டது. முஸ்லிம்களும் தமிழர்களுடன் இணைந்து நாட்டின் அரசியற் கொடுமைகளுக்கு எதிராகப் போராடவேண்டிய தேவை ஏற்பட்டிருக்கிறது.

## அஸாத் சாலியின் கைது ஒரு நோக்கு

சட்டத்தின்முன் எல்லோரும் சமம் என்பதுதான் சட்டவாட்சியின் சிறப்பு. சட்டத்தை மீறுபவர் எந்த உயர் பதவியிலிருந்தாலும் அவரையும் அரச தண்டனைக்குள்ளாக்குவதுதான் சட்டவாட்சியின் தலையாய இலக்கணம். ஆனால், இலங்கையிலோ சட்டத்தை மீறுபவர்கள் அரசுக்கு எதிரான கருத்துடையவராக இருந்தால் மட்டும்தான் தண்டனைக்குள்ளாக்குப்படும் நிலைமை காணப்படுகிறது. அது மட்டுமின்றி, அரசுக்கு எதிரான கருத்துடையவரை வாய்ப்புப் பார்த்து ஏதாவது ஒரு சட்டத்தின் பெயரைச்சொல்லித் தண்டிக்கும் போக்கும் காணப்படுகிறது.

அஸாத் ஸாலியின் கைதும் அந்த வகைகளில் ஒன்றுதான். அவர் ஆயுதம் தூக்கிப் போராடவில்லை. தான் ஆயுதம் தூக்கப் போவதாகவோ, அதற்குரிய ஆயத்தங்களை இப்போதே செய்து வருவதாகவோ தெரிவிக்கவில்லை. அவர் சொன்னதன் சாரம், அடக்கு முறைகளும் ஆத்திரமூட்டல்களும் தொடர்ந்து இடம்பெறுமானால் அவற்றை எதிர்க்க இளைஞர்கள் ஆயுதம் ஏந்தவும் செய்வார்கள் என்பதுதான். இங்கே அடக்குமுறைதான் கருப்பொருளே அல்லாமல் ஆயுதம் ஏந்துதலல்ல.

## அரசு நீதியாகச் செயற்படவில்லை

உண்மையில் அரசு நீதியாகச் செயற்படுவதாக இருந்தால் அடக்குமுறையாளர்களைத் தேடி வேட்டையாடியிருக்கவேண்டும். சிறுபான்மை இனமான முஸ்லிம்களை உணர்வுகளற்ற ஜடங்களாக மாற்ற முயற்சி செய்கின்ற கும்பலைத் தேடிக் கைதுசெய்திருக்கவேண்டும். நாட்டில் அமைதியின்மையை ஏற்படுத்துபவர்கள் நீங்கள்தாம் என்று அந்தக் கும்பல்மேல் வழக்குத் தொடர்ந்திருக்கவேண்டும்.

ஆனால், இங்கே கைதுசெய்யப்பட்டவரோ ஐக்கிய இலங்கைக்குள் முஸ்லிம்களையும் அமைதியாக வாழ விடுங்கள் என்று போராடுகின்ற ஒருவர். சட்டரீதியாக ஒரு கட்சியை வழிநடத்திக்கொண்டிருப்பவர். சிறுபான்மைச் சமுதாயம் ஒன்றுக்குத் தொடர்ந்து தொந்தரவு கொடுத்து அவர்களை வன்முறை வழிகளுக்கு இழுத்துச்செல்லும் போக்கை நிறுத்துங்கள் என்று கேட்டவர்.

வல்லவன் வகுத்ததே வாய்க்கால் என்ற தோரணையில் கைதுக்கான ஆயிரம் காரணங்களை அரசு சொல்லலாம். அஸாத் ஸாலி தவறு செய்தார் என்பதற்கான ஆதாரங்கள் இருக்கின்றன என்றும் சொல்லலாம். ஆனால், இதனை அப்பட்டமான மனித உரிமை மீறல் என்றுதான் மக்கள் கருதுகிறார்கள்.

கொலைகாரர்கள், கொள்ளைக்காரர்கள், இனவாதிகள், மதவெறியர்கள், சிறுபான்மை இனத்தவர்களுக்குக் கும்பல்கும்பலாகச் சென்று துன்பம் விளைவிப்பவர்கள் எனப் பலதரப்பினரும் தலைநிமிர்ந்து வலம் வந்துகொண்டிருக்க, தங்களைத் தொடர்ந்தும் வதைத்தால் தங்களது இளைஞர்களும் ஆயுதம் ஏந்துவார்கள் என்று சொன்னவர் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டமை பிற்போக்கான ஜனநாயகம்.

## தடைச் சட்டங்களால் நசுக்கப்பட்ட தமிழ் மக்கள்

பயங்கரவாதத் தடைச்சட்டம் தமிழர்களுக்கு எதிராகவே கொண்டுவரப்பட்டது. தமிழர்களால் நாட்டுக்கு ஆபத்துவந்துவிடும் என்ற காரணத்தால் கொண்டுவரப்பட்ட சட்டமல்ல அது. தமிழர்களை தொடர்ந்து நசுக்கி வந்ததால் ஏற்பட்ட தமிழர்களின் போராட்டம் காரணமாகத் தமது ஆட்சிமுறைமைச் சந்தோஷங்கள் சிதைந்துவிடாதிருக்க வேண்டும் என்பதற்கரகக் கொண்டுவரப்பட்டசட்டம்.

இந்தச் சட்டமும், அவசரகாலச் சட்டமும் இஸ்ரேலியரிடமிருந்து எங்கள் படையினர் கற்றுக்கொண்ட தந்திரங்களும்தாம் தமிழர் போராட்டத்துக்கு உரம் போட்டன. அவசரகாலச் சட்டத்தின்கீழ் தம் வீட்டில் உறங்கிக்கொண்டிருந்த தமிழ் இளைஞர்கள்கூட வகை தொகையின்றிக் கைது செய்யப்பட்டு எவ்வித குற்றச்சாட்டும் சுமத்தப்படாத நிலையில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின்கீழ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டார்கள். இராணுவச் சிப்பாய்களுடன் முரண்பட்ட இளைஞர்கள்கூட தடுப்புக்காவல் முகாம்களுக்கு அனுப்பப்பட்டனர்.

உண்மையில் இந்த இளைஞர்களுக்கும் போராட்டத்துக்கும் எவ்விதத் தொடர்புகளும் அந்த நாட்களில் இருக்கவில்லை. தமிழர்களாகப் பிறந்ததைத் தவிர, இவர்கள் வேறு குற்றமேதும் செய்திருக்கவில்லை. ஆனாலும் படைத்தரப்பாரால் இறுமாப்புடன் கைதுசெய்யப்பட்டு தடுப்புக்காவல் முகாம்களுக்கு அனுப்பப்பட்டார்கள்.

இவ்வாறான நடவடிக்கைகளால் தமிழ் இளைஞர்கள் இரண்டு முனைகளில் சிந்திக்கத் தொடங்கினார்கள். வசதியான குடும்பத்து இளைஞர்கள் பெருந்தொகைப் பணத்தைச் செலவு செய்து வெளிநாடு சென்றார்கள். வசதி குறைந்த இளைஞர்கள் அரச படைகளிடம் வீணாக அடிப்பட்டுச் சாவதைவிட அவர்களை அடித்துத் துரத்த வல்லவர்களுடன் இணைந்து கொள்வதுமேல் என்று முடிவெடுத்தார்கள்.

இந்த இளைஞர்களின் செயற்பாடுகள் முடக்கப்பட்டு இம்மாதத்துடன் நான்காண்டுகள் நிறைவுறுகின்ற போதிலும் அவர்கள் கால்நூற்றாண்டுக் காலமாகத் தங்கள் எல்லைக்குள் இலங்கைப் படைகளைக் கால் வைக்கவிடாமல் தடுத்து நின்றார்கள் என்பதை எவரும் மறந்துவிட முடியாது. ஜே.ஆர்.ஜெயவர்த்தன தொடக்கம் இன்றைய ஜனாதிபதி வரை அத்தனைப் பேரையும் கலங்க வைத்தார்கள் என்பதையும் நிராகரித்துவிட முடியாது.

அரசு தனது சுயபாதுகாப்புக் கருதிப் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை வைத்திருப்பதற்காகப் புலிகளின் அச்சுறுத்தல் இன்னமும் முற்றாக அற்றுப்போய்விடவில்லை என்று கூறிக்கொண்டு தமிழர் நிலங்களை படைப்பலத்தால் ஆக்கிரமித்துவருகிறது. அரசின் கூற்றில் உண்மை இருக்கிறதோ இல்லையோ அரசின் நெருக்கடியால் பிற நாடுகளுக்குச் சென்றிருந்த தமிழர்கள் இன்று உலகளவில் இலங்கை அரசுக்குப் பெருந்தலையிடியாக மாறியுள்ளார்கள் என்பதுதான் உண்மை. இவையெல்லாம் அடக்குமுறைச் சட்டங்கள் இலங்கை அரசுக்குத் தந்த விளைவுகளாகும்.

இன்று அஸாத் ஸாலி வன்முறையைத் தூண்டுகிறார். ஆனால், அன்று தமிழ்த் தலைவர் அமிர்தலிங்கமோ ஆயுதம் தூக்கிய இளைஞர்களின் செயற்பாட்டை எதிர்த்தே நின்றார் என்று ஓர் அமைச்சர் கருத்துச் சொல்லியிருக்கிறார். அதே அமிர்தலிங்கம் எதிர்க்கட்சித் தலைவராக வந்தபோது அதனை ஜீரணிக்க முடியாத சிங்கள அரசியல்வாதிகள் நாடாளுமன்றத்தில் இனவாதத்தையே கக்கினார்கள் என்பதை மறந்துவிட முடியாது. இரண்டு சவுக்கு மரங்களை வளைத்துக்கட்டி அதில் அமிர்தலிங்கத்தைத் தலைகீழாகத் தொங்கவிட்டு சவுக்கு மரக் கட்டுகளை அவிழ்ப்பதன்மூலம் அமிர்தலிங்கத்தின் உடலை இரண்டாகப் பிரிக்கவேண்டும் என்றும் கொக்கரித்தார்கள்.

## இனவாதத்தைத் தூண்டிய சிங்கள அரசியல்வாதிகள்

அதற்கு முன்னரேயே ஆர்.ஜீ.சேனநாயக்க என்பவர் தமிழனின் முதுகுத் தோலை உரித்துச் செருப்புத் தைத்துப் போட்டால்தான் தன் மனம் ஆறும் என்று பகிரங்கமாகச் சொன்ன வேளையில், எவராவது அவரைச் சிறையில் போட்டார்களா அல்லது கண்டனம் ஏதும் தெரிவித்தார்களா? சிறில் மத்தியூ என்ற அமைச்சர் தமிழர்களை அழித்துவிட்டுத்தான் மறு வேலை பார்ப்பேன் என்று கூறிய போது ஆட்சியிலிருப்பவர்கள் இரசித்துக்கொண்டுதானே இருந்தார்கள்.

தமிழ் இளைஞர்கள் ஆயுதப் போராட்டத்தைத் தொடங்குவதற்கு முன்னர்தான் இவையெல்லாம் நடந்தன. இந்த நடவடிக்கைகளால்தான் தமிழ் இளைஞர்கள் அஹிம்சைவழியிற் போராடிய தமிழ்த் தலைவர்கள் மேல் வெறுப்புக் கொண்டார்கள். தமிழர்களைக் கிள்ளுக்கீரைகளாக நினைத்த இன வெறியர்களை அடித்துத் துவைப்போம் என்று புறப்பட்டார்கள். இத்தகைய ஒரு ஆயுதப் போராட்டம் எழுவதற்குக் காரணமாயிருந்த சிங்கள அரசியல்வாதிகளை பயங்கரவாதத்தைத் தூண்டியவர்கள் என்று எப்போதாவது அரசு சொல்லியிருந்திருக்கிறதா?

தம் உயிர்வாழ்வுக்காக அழிக்க வந்தவர்களை எதிர்த்தவர்களும் தொடர்ந்தும் எதிர்ப்போம் எனச் சொன்னவர்களும் பயங்கரவாதிகளாக்கப்பட்டார்கள். கைதுசெய்யப்பட்டுச் சிறையிலிடப்பட்டார்கள்.

ஆயுதமெடுத்து அரசுக்கெதிராகப் போராடிப் பரந்த அழிவுகளையும் ஏற்படுத்திவிட்டு அரசுக்கு உதவுகிறோம், தன்னவர்களை அழிக்க வியூகங்களை வகுத்துத் தருகிறோம் என்று பச்சோந்தித்தனமாக நடந்தவர்கள், உதவியாகச் செயற்பட்டோர் பயங்கரவாதிகள் என்ற பெயருடன் இன்றளவும் விசாரணையின்றித் தடுப்புக்காவலில் வாழ்கிறார்கள். ஜனாதிபதி உட்பட அமைச்சர்களும், சகல நாடாளுமன்ற உறுப்பினர்களும் மக்களின் உழைப்பிலிருந்துதான் சம்பளப் பணத்தைப் பெற்றுக்கொள்கிறார்கள்; அரச அந்தஸ்துக்குரிய வசதிகளை உருவாக்கிக்கொள்கிறார்கள்.

எனவே, அந்தச் சட்டங்களின் தாற்பரியங்களும், சட்டக் காவலர்களின் சேவைகளும் மக்களை நோக்கியதாகவும் அவர்களை மேம்படுத்துவதாகவும்தான் இருக்கவேண்டுமேயொழிய அதிகாரத்திலுள்ள ஒரு சிலரின் சந்தோஷங்களுக்கு உதவுவனவாக இருக்கக்கூடாது. இலங்கையில் மாறிமாறி வந்த ஆட்சியாளர்கள் எல்லோரும் துரதிர்ஷ்டவசமாக அதிகாரங்களையும் தம்மையும் பாதுகாத்துக்கொள்ளவே சட்டங்களைப் பயன்படுத்தியுள்ளார்கள்.

## நாட்டில் சட்டங்கள் சரியாகப் பயன்படுத்தப்படவில்லை

இந்த நாட்டில் சட்டங்கள் சரியாகச் செயற்படுத்தப்பட்டிருந்தால் இனக் கலவரங்கள் தோன்றியிரா. சிங்கள இளைஞர்களின் ஆயுதக் கிளர்ச்சிக்கான வாய்ப்பு இருந்திருக்காது. தமிழ் இளைஞர்கள் படை நடத்த வேண்டிய தேவையும் ஏற்பட்டிருக்காது. ஜே.வி.பி. கிளர்ச்சியின்போது கொண்டுவரப்பட்டு நீண்டகாலமாக அவ்வப்போது தளர்த்தியும் வலுப்படுத்தியும் பாதுகாக்கப்பட்டு அண்மையில் கைவிடப்பட்ட அவசரகாலச் சட்டமும், அதன் பின்னரான காலப்பகுதியில் தோற்றம் பெற்று இன்றுவரை நிலைத்துநிற்கும் பயங்கரவாதத் தடைச் சட்டமும் நாட்டுக்கு நன்மை செய்வதற்கு மாறாக தீமையையே செய்திருக்கின்றன.

நிதானப்போக்குப் படைத்த சிங்கள மக்களும், தமிழர்களும், முஸ்லிம்களும் இணைந்து பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குவதற்கான அழுத்தங்களை அரசக்கு கொடுக்க வேண்டும். இந்த நாட்டில் பிறந்த ஒவ்வொரு பிரஜையின் உரிமைகளும் நிலைநாட்டப்படவேண்டும். சிங்களவர்களும், தமிழர்களும், முஸ்லிம்களும் அவரவர் நிலப்பகுதிகளில் பிறரது அடாத்தான தடையீடுகள் இல்லாமல் தமது நிர்வாகத்தைத் தாமே மேற்கொள்ளவேண்டும்.

இவைதாம் நாட்டின் இன்றையே தேவைகளே தவிர, பயங்கரவாதத் தடைச்சட்டத்துக்குக் கவசம் பூசும் பணியல்ல என்பதை அரசு உணர்ந்து தன்னை மாற்றிக்கொள்வதுதான் நல்லது. ★


ஆர்.டி.சேனநாயக்கா


சிறில் மத்தியூ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3D காதை உருவாக்கி விஞ்ஞானிகள் சாதனை


தொழில்நுட்ப வளர்ச்சியில் தற்போது உலகை ஆட்டிப் படைக்கும் விடயமாக முப்பரிமாண (3D) பிரிண்டிங் தொழில்நுட்பம் காணப்படுகின்றது.

இதனைப் பயன்படுத்தி அமெரிக்காவின் Princeton பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் வானொலி அலைகளை துல்லியமாக உள்வாங்கக்கூடிய முப்பரிமாணக் காதினை உருவாக்கி சாதித்துள்ளனர்.

இதற்கென விசேட இழையம் ஒன்று பயன்படுத்தப்பட்டுள்ளதுடன் உணரி (Antenna) ஒன்றையும் இணைத்து உருவாக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் எதிர்காலத்தில் கேட்டல் குறைபாடுகளை இலகுவாக நிவர்த்தி செய்துகொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.




## பிளாஸ்டிக் துப்பாக்கி



அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தைச் சேர்ந்த ஒரு குழு வெற்றிகரமாக பிளாஸ்டிக் துப்பாக்கி ஒன்றை வடிவமைத்து உருவாக்கியுள்ளது.
இந்தத் துப்பாக்கியில் உண்மையான தோட்டாக்களை போட்டு வெற்றிகரமாக சுட்டுச் சோதனை செய்துள்ளது.
இந்த குழு, துப்பாக்கியை முப்பரிமாண அச்சு இயந்திரத்தைப் பயன்படுத்தி உருவாக்கி உள்ளது.
இந்த அச்சு இயந்திரங்களைக் கொண்டு கணணி மூலம் வடிவமைக்கப்பட்ட எந்த வடிவத்தையும் திடப்பொருட்களில் உருவாக்கிட முடியும்.
கணணி மூலம் துப்பாக்கியை வடிவமைத்து, இந்த இயந்திரங்கள் உதவியுடன் பிளாஸ்டிக் துப்பாக்கியை தயாரித்துள்ளது. இதனைப் பயன்படுத்தும் விதம், அந்த இயந்திரத்தைக் காட்டும் காணொளி தற்போது இணையத்தில் வெளியாகி உள்ளது.
அமெரிக்க மக்களின் ஆயுதங்கள் பயன்பாட்டு உரிமையைப் பாதுகாக்க இந்தக் குழு இதனை தயாரித்துள்ளதாக கூறியுள்ளது.
பாதுகாப்பு சோதனைகள் நடத்தும் போது பிளாஸ்டிக் ஆயுதங்களை கண்டுபிடிக்க முடியாது என்று கூறி அமெரிக்க அரசு இந்தக் கண்டுபிடிப்புக்கு கண்டனம் தெரிவித்துள்ளது

## பருகும்போதே நீரை வடிகட்டும் கருவி

உயிர்வாழ்வதற்கு அத்தியாவசியமானதாக காணப்படும் நீரில் உள்ள மாசுக்களால் பல்வேறு நோய்கள் உண்டாகும் அபாயங்கள் அதிகம் உள்ளன.
இதற்காக நீரை வடிகட்டி அருந்தும் பழக்கம் தற்கால மக்களிடையே விரைவாகப் பரவி வருவதுடன் இதற்கென பல்வேறு கருவிகளும் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றன.
இதன் தொடர்ச்சியாக NDkR Survival Straw எனும் நவீன கருவி ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
இக்கருவியானது ஏனைய வடிகட்டும் கருவிகளைப் போன்று அல்லாமல் நீரை பருகும் வேளையில் உடனுக்குடன் வடிகட்டி தூய நீரை வழங்கக்கூடியதாக வடிவமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.
இக்கருவியானது 99.9999 வீதம் நோய் விளைவிக்கும் வைரஸ்களிடமிருந்தான பாதுகாப்புக்கு உத்தரவாதம் தருவதுடன் இதன் விலையானது 30 அமெரிக்க டொலர்களாக காணப்படுகின்றது.





இக்கருவியானது ஏனைய வடிகட்டும் கருவிகளைப் போன்று அல்லாமல் நீரை பருகும் வேளையில் உடனுக்குடன் வடிகட்டி தூய நீரை வழங்கக்கூடியதாக வடிவமைக்கப்பட்டுள்ளது

## அப்பிள் 128 ஜி.பி. ஐபேட்



முன்பெல்லாம் அப்பிள் நிறுவனம் 16/32/64 ஜிபி அளவிலான சாதனங்களையே வடிவமைத்தன. இனிமேல் இந்தவரிசையில் 128 ஜிபியும் சேரும் என்ற தகவல் வெளியாகியுள்ளது.
இந்த ஐபேட் சாதனமானது முற்றிலும் புதியதல்ல. இது தற்போதைய 4ஆம் தலைமுறை சாதனத்தின் மேம்படுத்தப்பட்ட வடிவமைப்பேயாகும். 9tç5மேக் என்ற இணையத்தளத்தின் அறிக்கையின் அடிப்படையில் இந்த புதிய ஐபேடானது, கருப்பு மற்றும் வெள்ளை ஆகிய வண்ணங்களில் வரவுள்ளதாக தெரிவித்துள்ளது.

## 24 கரட் தங்கத்தில் உலகின் முதலாவது கைபேசி



இதுவரையில் தங்கத்தாலான வெளி உடலமைப்பைக் கொண்ட அப்பிளின் ஐ போன்கள் மற்றும் அன்ரோயிட் ஸ்மார்ட் போன்கள் ஆகிவற்றை பார்த்திருப்பீர்கள்.

ஆனால் முதன் முறையாக 24 கரட் தங்க முலாம் பூசப்பட்ட வெளி உடலமைப்பினைக் கொண்ட உலகின் முதலாவது BlackBerry கைப்பேசி உருவாக்கப்பட்டுள்ளது.

BlackBerry கி10 எனப்படும் இக்கைப்பேசியானது QWERTY கீபோர்ட் வசதியையும் கொண்டுள்ளதுடன் 3.1 அங்குல அளவு மற்றும் 720 x 720 Pixel Resolution கொண்ட திரையினைக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது.

மேலும் இவற்றில் 1.5GHz வேகம் கொண்ட Processor, 2GB RAM ஆகியன இணைக்கப்பட்டுள்ளதுடன் சேமிப்பு நினைவமானது 16GB ஆக அமைந்துள்ளது.

இச்சேமிப்பு கொள்ளளவினை microSD அட்டைகளின் உதவியுடன் 64GB வரை அதிகரிக்கும் வசதியும் இக்கைப்பேசியில் தரப்பட்டுள்ளது.

இவற்றுடன் 8 மெகாபிக்சல்கள் உடைய பிரதான கமரா மற்றும் 3 மெகாபிக்சல்கள் உடைய வீடியோ அழைப்புக்களை ஏற்படுத்துவதற்கான கமெரா போன்றனவும் காணப்படுகின்றன.

இவற்றின் பெறுமதியானது 1,597 யூரோக்கள் ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா அபிவிருத்திக் குழு கூட்டங்களுக்கு அழைப்பில்லை

## வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபைத் தலைவர் குற்றச்சாட்டு

வவுனியா, மே 17

வவுனியாவில் நடைபெறுகின்ற அபிவிருத்திக் குழுக் கூட்டங்களுக்கு தம்மை தற்போது அழைப்பதில்லை. நடைபெற்ற கூட்டங்களில் தம்மால் வழங்கப்பட்ட கோரிக்கைகள் நிறைவேற்றப்படுவதுமில்லை என வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபை தலைவர் க.சிவலிங்கம் குற்றம் சுமத்தியுள்ளார்.

வவுனியாவில் இடம்பெறுகின்ற அபிவிருத்திப் பணிகளை வவுனியா தமிழ்ப் பிரதேச சபை தடுத்து வருவதாக பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் சுசந்த புஞ்சிநிலமே கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற வவுனியா மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போது தமிழ்ப் பிரதேச சபையைச் சாடியிருந்தார்.

இது தொடர்பாக விளக்கமளிப்பதற்கான ஊடகவியலாளர் சந்திப்பொன்று கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே பிரதேச சபைத் தலைவர் மேற்குறித்த குற்றச் சாட்டை முன்வைத்தார். அங்கு அவர் தொடர்ந்தும் தெரிவித்ததாவது:-

> 2012 ஆம் ஆண்டுக்கான நெல்சிப் வேலைத் திட்டத்தில் 6 வேலைத் திட்டங்களை மேற்கொள்ளுமாறு கோரிக்கை விடுத்திருந்தோம்.

வவுனியா மாவட்டத்தின் அபிவிருத்திப் பணிகளுக்கு தமிழ்ப் பிரதேச சபையினர் ஒத்துழைப்பு வழங்குவதில்லை என பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் கூறியிருப்பது உண்மைக்குப் புறம்பானது. அவருக்குத் தவறான தகவல் வழங்கப்பட்டுள்ளது. ஏனெனில் 2012 ஆம் ஆண்டுக்கான நெல்சிப் வேலைத் திட்டத்தில் 6 வேலைத் திட்டங்களை மேற்கொள்ளுமாறு கோரிக்கை விடுத்திருந்தோம் ஆனால் 3 வேலைத் திட்டங்களுக்கு மட்டுமே அபிவிருத்திக்குழு அனுமதியளித்தது.

ஆனால் வேறு மாவட்டத்திலுள்ள சாளம்பபுர என்ற கிராமத்தில் பூங்கா ஒன்றை அபிவிருத்தி செய்யுமாறும், சேமமடு கிராம அலுவலர் பிரிவில் இல்லாத கிராமம் ஒன்றுக்கு வீதி அமைக்குமாறும் புனரமைக்கப்பட்ட வீதிகளை மீண்டும் புனரமைக்குமாறும் கோரி முறையற்ற விதத்தில் வர்த்தக கைத்தொழில் அமைச்சரின் கடிதத் தலைப்பில் அவரின் இணைப்புச் செயலாளர் கையொப்பமிட்டு எமக்கு கடிதம் அனுப்பி வைத்தார்.

எனவே இவ்வாறான நிலையில் எமது சபையால் ஏகமனதாக எடுக்கப்படும் முடிவுகளை மாற்றுமாறும் தமக்குத் தேவையான வேலைத் திட்டங்களை மேற்கொள்ளுமாறும் கோரப்படுவதானது எமது சேவைக்கு இடையூறு விளைவிப்பதாக அமைகின்றது.

இது மட்டுமன்றி வவுனியா அரச அதிபராக பி.எஸ்.எம். சாள்ஸ் பதவியிலிருந்த போது எமக்கு சில அபிவிருத்திக் கூட்டங்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. அவற்றில் நாம் தவறாது கலந்து கொண்டு எமது பிரதேச சபைக்குட்பட்ட கிராமங்களின் தேவைகளை இனங்காட்டியிருந்தோம். எனினும் தற்போது எமக்கு அழைப்பு விடுப்பதில்லை. இவ்வாறான சூழ் நிலையில் நாம் அபிவிருத்திக்கு இடையூறு விளைவிப்பதாகத் தெரிவித்து சிலர் அரசியல் செய்து வருகின்றமை கண்டிக்கத்தக்க விடயமாகும் - என்றார். (வ-400)

# மணல் ஏற்றுவோரிடம் லஞ்சம் வாங்கும் பொலிஸார்

## புதுக்குடியிருப்பு உழவு இயந்திர சாரதிகள் முறைப்பாடு

புதுக்குடியிருப்பு, மே 17

புதுக்குடியிருப்புப் பகுதியில் இடம்பெற்று வரும் வீட்டுத் திட்ட கட்டுமானப் பணிகளுக்கு மணல் ஏற்றும் உழவு இயந்திரச் சாரதிகளிடம் புதுக்குடியிருப்பு பொலிஸார் லஞ்சம் வாங்குவதாக சாரதிகள் முறைப்பாடு தெரிவிக்கின்றனர்.

கடந்த கால போர் இடர்களால் அழிவடைந்த புதுக்குடியிருப்பு பிரதேசத்திலுள்ள வீடுகள் இந்திய நிதியுதவியுடன் புனரமைக்கும் 'பணிகள் இடம்பெற்று வருகின்றன.

இந்தப் பகுதியில் இடம்பெற்று வரும் கட்டுமானப் பணிகளுக்கு வள்ளிபுனம் பகுதியிலிருந்து அனுமதிப் பத்திரத்துடன் மணல் ஏற்றிச் செல்லும் உழவு இயந்திரச் சாரதிகளிடம் 5 ஆயிரம் ரூபாவினை லஞ்சமாக வழங்குமாறு புதுக்குடியிருப்புப் பொலிஸார் கோருகின்றனர்.

அவ்வாறு பணம் வழங்க மறுப்பவர்களுக்கெதிராக முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்போவதாகவும் மிரட்டி வருகின்றனர். இதற்குப் பயந்து உழவு இயந்திரச் சாரதிகள் பணத்தை பொலிஸாருக்கு வாரி வழங்குகின்றனர்.

புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் இடம்பெற்று வரும் வீட்டுத்திட்ட கட்டுமானப் பணிகள் மணல் தட்டுப்பாடு காரணமாக பின்னடைவை எதிர்நோக்கி வரும் இந்தச் சூழ் நிலையில் பொலிஸாரின் பணம் கறக்கும் இந்தச் செயற்பாட்டால் மேலும் பாதிக்கப்படலாம் என மக்கள் மத்தியில் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை - மணல் ஏற்றுவதற்கு பிரதேச செயலகத்தால் தடை விதிக்கப்பட்ட மூங்கிலாறு, இடைக்கட்டுப் பகுதிகளில் பொலிஸாரின் உதவியுடன் சட்ட விரோத மண் அகழ்வு இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அந்தப் பகுதியில் மணல் ஏற்றும் உழவு இயந்திரச் சாரதிகளிடம் நாளொன்றுக்கு தலா ஆயிரம் ரூபா வீதம் அறவிட்டு சட்டவிரோத மணல் அகழ்வுகளுக்கு பொலிஸார் அனுமதி வழங்கி வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (வ-400)



யாழ். வணிகர் கழகத்தின் ஏற்பாட்டில் கிளிநொச்சியில் உள்ள வறிய மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களை கையளிக்கும் நிகழ்வு கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது. நிகழ்வில் அரச அதிபர் றூபவதி கேதீஸ்வரன் மாணவி ஒருவருக்கு கற்றல் உபகரணங்கள் வழங்குகின்றார். (ந-ரி)

### பூசணிப்பிட்டிப் பாடசாலையின்

# ஆசிரியர் வளப்பற்றாக்குறை விரைவில் பூர்த்தியாகும்

வவுனியா, மே 17

வவுனியா பூசணிப்பிட்டி தாயுமானவர் வித்தியாலயத்தில் நிலவிவரும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யக்கோரி, மாணவர்களின் பெற்றோர் வவுனியா வலயக் கல்விப் பணிப்பாளரைச் சந்தித்துள்ளனர்.

அண்மைக் காலமாக பூசணிப்பிட்டி பாடசாலையில் ஆசிரியர் வெற்றிடங்கள் நிலவி வருகின்றன. ஏற்கனவே கடமையாற்றிய ஆசிரியர் இடமாற்றப்பட்டதை அடுத்து இந்தப் பற்றாக்குறை நிலவுவதாக பாடசாலை நிர்வாகத்தினர் தெரிவிக்கின்றனர். இதனால் பாதிக்கப்பட்ட மாணவர்களின் பெற்றோர்கள் வவுனியா வலயக் கல்வி பணிப்பாளரைச் சந்தித்தனர்.

தமது பாடசாலையில் ஏற்பட்டிருக்கும் ஆசிரிய பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய கல்வி அதிகாரிகள் முன்வராமைக்கான காரணத்தை வலயக் கல்விப் பணிப்பாளரிடம் கோரினார். இது குறித்து வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ.அன்ரன் சோமராஜா தெரிவிக்கையில்; பூசணிப்பிட்டியில் இருந்து எமது வலயத்தை நோக்கி திரண்டு வந்திருக்கின்றமை சந்தோஷம் அளிக்கின்றது. மாணவர்கள் கல்வியில் பெற்றோர்களாகிய நீங்கள் மிகுந்த அக்கறையுடன் இருப்பது பாராட்டத்தக்க விடயம். 10 நாள்களுக்குள் பாடசாலை யில் தற்போது நிலவும் ஆசிரிய பற்றாக்குறையை நீக்குவேன் என்று உறுதியளித்தார். (ந-402)

# மாணவர்களுக்கு கௌரவிப்பு



முல்லைத்தீவு, மே 17

முல்லைத்தீவு கோட்டைகட்டியகுளம் அ.த.க.பாடசாலையில் 2012ஆம் ஆண்டு ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் கணித பாடத்தில் சித்திபெற்ற மாணவர்களுக்கு கௌரவிப்பு விழா இடம்பெற்றது.

அதி கஷ்டப்பிரதேசத்தில் அமைந்துள்ள இந்தப் பாடசாலைக்கு கடந்த மூன்று ஆண்டுகளாக நிரந்தர கணித பாட ஆசிரியர் இல்லாத நிலை காணப்பட்டது. இதனால் பெரும்பாலான மாணவர்கள் உயர்தரம் செல்ல முடியாத நிலை இருந்தது. இந்த நிலையில் கடந்த வருடம் கணித பாட ஆசிரியர் ஒருவர் நியமிக்கப்பட்டார்.

கணித பாட அடிப்படை அறிவுகள் பெரிதும் இல்லாத நிலையில் இரண்டு தவணைகளில் மாத்திரம் கல்வி கற்று கணித பாடத்தில் சித்தி பெற்றமையை பாராட்டியே இந்த நிகழ்வு நடைபெற்றது. பாடசாலை அதிபர் இ.தங்கராஜா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக துணுக்காய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச. செல்வரத்தினம் மற்றும் பலரும் கலந்து கொண்டனர். (ந-18)

### பூநகரி, செம்பன்குன்று பிரதேசங்களுக்கான

# பஸ் சேவை சீரின்மை பொதுமக்கள் விசனம்




கிளிநொச்சி, மே 17

பூநகரி, செம்பன்குன்று பகுதிகளுக்கான பஸ் சேவை சீரின்மையால் மாணவர்கள், உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் எனப்பலரும் பெரும் சிரமங்களையும் அசௌகரியங்களையும் எதிர்நோக்கி வருவதாகக் கவலை தெரிவிக்கின்றனர்.

இது குறித்து பொதுமக்கள் மேலும் தெரிவித்ததாவது:-

பூநகரி, செம்பன்குன்றில் இருந்து பரந்தன் சந்தியூடாக தினமும் தனியார் பஸ்ஸே சேவையில் ஈடுபடுவதாகவும் இது காலை 6.45 மணிக்கு செம்பன்குன்றிலிருந்து புறப்படுகின்றது. சில வேளை குறித்த நேரத்துக்கு இல்லாமல், பின்பற்றாமல் புறப்படுகின்றது.

இதனால் கிளிநொச்சி போன்ற இடங்களுக்கு வேலைக்காகச் [illegible] செல்லமுடியாது சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். அந்த பஸ் இந்தப் பகுதி பாடசாலை மாணவர்களை ஏற்றாது விட்டுச் செல்கின்றது.

பரந்தன் சந்தியூடாக மாலை 5 மணியுடன் பூநகரிப் பகுதிக்கான பஸ் சேவைகள் அனைத்தும் [illegible] பூநகரிக்குச் செல்ல முடியாது பலரும் பரந்தன் சந்தியில் நின்று திக்குமுக்காடுவதாகவும் கூறிக் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

பூநகரியில் இருந்து கிளிநொச்சிக்கு வந்தவர்கள் வேறு இடங்களில் இருந்து பூநகரிக்குச் செல்லவுள்ளோர் மாலை 5 மணிக்குப் பின்னர் பஸ் போக்குவரத்து இல்லாதமையால் பரந்தன் சந்தியில் என்ன செய்வதென்றே தெரியாமல் கஷ்டப்பட்டு வருகின்றனர்.

பூநகரியில் இருந்து கிளிநொச்சி போன்ற பகுதிகளில் வேலைக்குச் செல்லும் பெண்களும் 5 மணிக்குப் பின் பஸ் இல்லாததால் சிரமப்பட்டு பரந்தன் போன்ற இடங்களில் தெரியாதவர்களின் வீடுகளில் தங்கி நின்று மறுநாள்தான் தமது வீடுகளுக்குச் செல்கின்றனர்.

இதனைக் கருத்தில்கொண்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இ.போ.ச. பஸ்ஸை மாலை 5 மணிக்குப் பின்பும் காலை 7 மணிக்கு பரந்தன் சந்தியூடாக பூநகரிக்கு சேவையில் ஈடுபடுத்தி சிரமங்களையும் அசௌகரியங்களையும் நீக்கி உதவுமாறு பூநகரி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (வ-426)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

## இன்றைய நாள்

### உங்களுக்கு எப்படி?

**மேடம்:** வெளிப்படையான பேச்சால் சில காரியங்களை முடித்துக் காட்டுவீர்கள். உத்தியோகத்தில் மகிழ்ச்சி கிடைக்கும். வெளியூர்ப் பயணங்களால் ஆதாயம் உண்டு. அரச காரியங்களில் அனுகூலமான நிலை காணப்படும். உத்தியோகத்தில் மேலதிகாரிக்கு நெருக்கமாவீர்கள்.

**இடபம்:** மனச்சாட்சிக்கு விரோதமின்றிச் செயற்பட வேண்டுமென நினைப்பீர்கள். ஆடம்பரச் செலவுகளைத் தவிர்ப்பீர்கள். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். சக ஊழியர்களுக்கு மத்தியில் மதிக்கப்படுவீர்கள். சகோதர வகையில் உதவிகள் கிடைக்கும்.

**மிதுனம்:** முன்கோபத்தைக் குறையுங்கள். இரண்டாவது முயற்சியில் சில காரியங்கள் முடியும். உத்தியோகத்தில் சில சூட்சுமங்களைக் கற்றுக் கொள்வீர்கள். திட்டமிட்டு செயற்படுவதன் மூலம் வெற்றி பெறுவீர்கள்.

**கடகம்:** வெளி உணவுகளைத் தவிர்ப்பது நல்லது. மற்றவர்கள் விடயத்தில் அநாவசியமாகத் தலையிட வேண்டாம். உத்தியோகத்தில் பொறுப்புகள் அதிகரிக்கும். எதிலும் எச்சரிக்கையுடன் செயற்படுங்கள்

**சிங்கம்:** உங்கள் ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள். வியாபாரத்தில் புதிய முதலீடு செய்யலாம். உத்தியோகத்தில் மூத்த அதிகாரிகள் முக்கிய அறிவுரைகள் தருவார்கள். நீண்ட நாள் பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள்.

**கன்னி:** வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். தைரியமாகச் சில முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். உத்தியோகத்தில் வேலைச்சுமை குறையும். உயரதிகாரி ஆதரிப்பார். நட்பு வட்டம் விரிவடையும். தாழ்வு மனப்பான்மை நீங்கும்.

**நாளை**

வைகாசி-04 சனிக்கிழமை 18.05.2013
திதி: அட்டமி மா. 06.42 வரை
நட்சத்திரம்: மகம் பி.இ. 01.29 வரை
சுபநேரம்: 02.53 - 04.23 வரை
இராகுகாலம்: 08.53- 10.23 வரை

**துலாம்:** உறவினர்களின் அன்புத் தொல்லைகள் விலகும். எதிர்பாராத பணவரவு உண்டு. வழக்குகள் சாதகமாகும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

**விருச்சிகம்:** சிக்கனமாக இருக்க வேண்டுமென்று நினைத்தாலும் அத்தியாவசியச் செலவுகள் அதிகரிக்கும். மற்றவர்களுடன் உங்களை ஒப்பிட்டுக் கொண்டிருக்காதீர்கள். உத்தியோகத்தில் ஓரளவு வேலைச்சுமை குறையும்.

**தனுசு:** குடும்பத்தில் அமைதி நிலவும். வெளிவட்டாரத்தில் கௌரவம் கிடைக்கும். வியாபாரத்தில் அதிரடி மாற்றம் செய்து லாபம் ஈட்டுவீர்கள். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். எதிலும் பொறுமையுடன் செயற்படுங்கள்.

**மகரம்:** அரசால் அனுகூலம் உண்டு. உங்கள் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். வியாபார ரீதியாக பிரபலங்களைச் சந்திப்பீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரி உங்களை முழுமையாக நம்புவார்.

**கும்பம்:** இங்கிதமாகப் பேசி கடினமான காரியங்களையும் சாதிப்பீர்கள். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். வியாபாரத்தில் பற்று வரவு உயரும். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் அதிசயிக்குமாறு நடந்து கொள்வீர்கள்.

**மீனம்:** எதிர்பார்த்த வேலைகள் தடையின்றி முடியும். நண்பர்களால் ஆதாயமடைவீர்கள். வியாபாரத்தில் அனுபவம் உள்ள வேலையாட்கள் அமைவார்கள். உத்தியோகத்தில் சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள்.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 7 | | 1 | 2 | | 9 | | 6 |
| 2 | 4 | | | 9 | 8 | 1 | | |
| 6 | | | | | 4 | | | 5 |
| | | | 3 | | 2 | | 1 | 4 |
| | | 3 | | | | 6 | | |
| 7 | 2 | | 5 | | 6 | | | |
| 8 | | | 2 | | | | | 1 |
| | | 7 | 4 | 1 | | | 3 | 8 |
| 1 | | 2 | | 5 | 3 | | 6 | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 7 | 8 | 1 | 2 | 5 | 9 | 4 | 6 |
| 2 | 4 | 5 | 6 | 9 | 8 | 1 | 7 | 3 |
| 6 | 1 | 9 | 7 | 3 | 4 | 8 | 2 | 5 |
| 9 | 5 | 6 | 3 | 8 | 2 | 7 | 1 | 4 |
| 4 | 8 | 3 | 9 | 7 | 1 | 6 | 5 | 2 |
| 7 | 2 | 1 | 5 | 4 | 6 | 3 | 8 | 9 |
| 8 | 3 | 4 | 2 | 6 | 7 | 5 | 9 | 1 |
| 5 | 6 | 7 | 4 | 1 | 9 | 2 | 3 | 8 |
| 1 | 9 | 2 | 8 | 5 | 3 | 4 | 6 | 7 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்கரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டிப்பாகாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# 90ஆம் நாள் நினைவஞ்சலி

## அமரர் இராசையா யோகேந்திரராசா

தோற்றம்
23 - 05 - 1956

மறைவு
17 - 02 - 2013



தெய்வத்தின் திருவுருவே அப்பா- நீர்
எமைப் பிரிந்து இன்றோடு
தொண்ணூறு நாள்களாயினவே
நாள்கள் பல கடந்தும் ஆறவில்லை
உம் பிரிவாலான துயர்.

அன்பின் உறைவிடமே அப்பா!
இப்பூவுலகில் எமைத் தவிக்கவிட்டு
எங்குதான் போனீரோ?
காலங்கள் கடந்தாலும் நாம் கொண்ட
கோலங்களே மாறினாலும் உம் நினைவு
எம்மனதை விட்டு என்றுமே நீங்காது.

மூவர் நாங்கள் பாரினில் உம் புகழ் நிலைக்க
பட்டங்கள் பல பெற்று உம் பாதத்தில்
சமர்ப்பிப்போம்.

**உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்**
**குடும்பத்தினர்.**
**புகையிரத நிலைய வீதி, கொடிகாமம்.**
(37372)(5.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணி, பொலிஸ் அதிகாரங்களை அரசு பறிக்கப் போகின்றதா?

## ஐ.தே.க. ராம் கேள்வி

கொழும்பு,மே 17

13ஆவது திருத்தச் சட்டத்தினூடாக மாகாணசபைகளுக்கு வழங்கப்பட்ட காணி, பொலிஸ் அதிகாரங்களை 19ஆவது திருத்தச் சட்டத்தினூடாக அரசு பறிக்கப்போகின்றதா? இல்லையா என்பதை உடனடியாக அரசு நாட்டு மக்களுக்கு அறிவிக்க வேண்டும்.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட பிரதான அமைப்பாளரும் மேல்மாகாணசபை உறுப்பினருமான சி.வை. பி.ராம் தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பினார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மாகாணசபைகளுக்கு காணி, பொலிஸ் அதிகாரங்களைப் பெற்றுக்கொடுக்கும் 13ஆவது திருத்தச் சட்டத்தை நாம்தான் அறிமுகப்படுத்தினோம். அதனால் மாகாண சபை உறுப்பினர் என்ற வகையில் மாகாண சபைகள் குறித்த அரசின் நிலைப்பாடு என்ன என்று அரசிடம் நான் கேள்வி எழுப்புகிறேன்.

19ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தி மாகாண சபைகளுக்குரிய காணி, பொலிஸ் அதிகாரங்களை அரசு நீக்கப் போகிறதா? என்பதை அரசு நாட்டு மக்களுக்கு அறிவிக்க வேண்டும். வடக்குத் தேர்தல் குறித்து எமது கட்சி அரசிடம் முன்வைத்துள்ள நிபந்தனைகளை அது ஏற்க வேண்டும்.

தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வை மறைத்து தமக்குத் தேவையான விதத்தில் அரசு தீர்வுத் திட்டத்தை வகுத்துச் செயற்படுகின்றது. என்றார்.

இதேவேளை இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் ஐ.தே.க பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க கருத்து தெரிவிக்கையில்,

பால்மாவின் விலையை நூறு ரூபாவால் அதிகரிக்க அரசு திட்டமிட்டு வருகிறது.

பால்மாவின் விலையை அதிகரித்து குழந்தைகளிடமும் அரசு வரி அறவிடவுள்ளது என்று தெரிவித்தார். (ச)

# உகண்டா கிரி. வீரர்களுக்கு இலங்கையில் பயிற்சியளிப்பு



கொழும்பு,மே 17

உகண்டா கிரிக்கெட் வீரர்களுக்கு இலங்கை முன்னணி கிரிக்கெட் வீரர்கள் மூலம் பயிற்சியளிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

உகண்டாவில் கிரிக்கெட் விளையாட்டுத்துறையை மேம்படுத்த உதவுமாறு உகண்டா கிரிக்கெட் விளையாட்டுக் கழகம் ஜனாதிபதியிடம் விடுத்த வேண்டுகோளையடுத்தே ஜனாதிபதி இந்த உறுதி மொழியை வழங்கினார் என்று ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

அந்தக் குழுவினரின் விளையாட்டுத் திறமைகளை நேரில் பார்வையிட்ட ஜனாதிபதி, அவர்களுடன் சினேகபூர்வமாக உரையாடியதுடன் கிரிக்கெட் வீரர்களுக்குச் சீருடைகளையும் வழங்கி வைத்தார். (ச)

# 19 ஆவது திருத்தத்தை முற்றாக எதிர்ப்போம்

## முஸ்லிம் காங்கிரஸ் கூறுகிறது

கொழும்பு,மே 17

மாகாண சபைகளின் அதிகாரங்களைக் கட்டுப்படுத்தும் காரணத்தினாலேயே 19 ஆவது திருத்தத்தை முஸ்லிம் காங்கிரஸ் எதிர்ப்பதாக ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரசின் பொதுச் செயலர் ஹசன் அலி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

13 ஆவது திருத்தச் சட்டத்தில் கை வைப்பதற்கு எமது கட்சி எந்த வகையிலும் துணை போகாது. தற்போதிருக்கின்ற அரசியல் திருத்தமே முழுமையான அதிகாரப் பரவலாக்கம் அல்ல என்பதே எமது கட்சியின் நிலைப்பாடு. ரவூப் ஹக்கீம் 19 ஆம் திருத்தச் சட்டத்தை முன்மொழிந்தாலும் அதை கட்சி எதிர்க்கும்.- என்றார். (த-ரி)

# தூதரகத்துக்கு புதிய கட்டடம் நிர்மாணிக்கிறது அமெரிக்கா

கொழும்பு,மே 17

கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் புதிய கட்டடமொன்றை நிர்மாணிக்கவுள்ளது. அதற்காக தற்போது காலி வீதியிலுள்ள அமெரிக்க தூதரகத்துக்கு அருகில் உள்ள கட்டடத்தை கொள்வனவு செய்துள்ளது.

இந்தக் கட்டடத்தில் முன்னர் இலங்கைக்கான பிரிட்டன் தூதரகம் செயற்பட்டமை குறிப்பிடத்தக்கது. இந்தக் கட்டடத்தின் உரிமை மாற்ற நிகழ்வு கொழும்பில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் மிச்சேல் ஜே. சிசன் மற்றும் இலங்கைக்கான பிரிட்டன் பிரதித் தூதர் றொபி புளுச் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதேவேளை, மெரைன் ட்ரைவ் வீதி விஸ்தரிப்புக்குத் தேவையான காணியை அமெரிக்கா இலங்கை அரசுக்கு வழங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# தொலைக்காட்சி பெட்டிக்குள் சிகரெட் பொதிகள்

கொழும்பு,மே 17

சட்டவிரோதமாகக் கொண்டுவரப்பட்ட சிகரெட் பொதிகளை கட்டுநாயக்க விமான நிலையத்தில் சுங்க அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

டுபாய் நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட 6 லட்சம் ரூபா பெறுமதியான சிகரெட்பெட்டிகளை தொலைக்காட்சிப் பெட்டிக்குள் மறைத்து எடுத்து வந்த நிலையிலேயே அவை கைப்பற்றப்பட்டுள்ளன. சிகரெட்டுக்கள் யாரால், எங்கிருந்து கொண்டுவரப்பட்டன என்பவை குறித்த விசாரணைகளைச் சுங்கத் திணைக்கள அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர். (ஒ-ரி)

# 13 இற்கு குழி வெட்ட விரைவில் சட்டமூலம்

## ஹெல உறுமய தீர்மானம்

கொழும்பு,மே 17

13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக இரத்து செய்வதற்கான சட்டமூலமொன்றை நாடாளுமன்றத்தில் வெகு விரைவில் சமர்ப்பிப்பதற்கு அரசின் பங்காளிக் கட்சியான ஜாதிக ஹெல உறுமய ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

அத்துடன், இது குறித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரிடமும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட ஏனைய எதிர்க்கட்சிளுடனும் தாம் பேச்சு நடத்த உள்ளோம் என்று அக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் நிஷாந்த வர்ணகுலசூரிய தெரிவித்தார்.

கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தின்போதே மேற்படி தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது என்றும் அவர் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் தம்மால் சமர்ப்பிக்கப்படவுள்ள குறித்த சட்டமூலத்துக்கு ஆளும் மற்றும் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது மனச்சாட்சிக்கு அமைய வாக்களிக்க அனுமதிக்க வேண்டும் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடமும், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஏனைய எதிர்க்கட்சித் தலைவர்களிடமும் நாம் கோரிக்கை விடுக்கவுள்ளோம்.

மேலும், இச் சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தவுடன் ஆளும், பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு, ஜே.வி.பி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், தேசிய சுதந்திர முன்னணி உள்ளிட்ட நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்துக் கட்சிகளுடனும் நாம் பேச்சு நடத்தி, இச் சட்டமூலம் குறித்து விளக்கமளிக்கவுள்ளோம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# கூட்டமைப்பு பதிவு பிரச்சினை ஆயரிடம் துருவினார் டக்ளஸ்

கொழும்பு.மே 17

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அரசியல் கட்சியாகப் பதிவு செய்வது தொடர்பில் தற்போது அரசியல் வட்டாரத்தில் பரவலாகப் பேசப்பட்டுவரும் சூழ்நிலையில், இந்தப் பதிவு குறித்து மன்னார் ஆயரிடம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அக்கறையாகக் கேட்டுள்ளார் என அறியமுடிகின்றது.

மடு மாதா திருத்தலத்துக்கான ரயில் சேவையை ஆரம்பித்து வைக்கும் நிகழ் வில் மன்னார் ஆயரை நேரடியாகச் சந்தித்த போதே அமைச்சர் மேற்கண்டவாறு விசாரித்துள்ளார்.

''தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் முரண்பாடுகள் நீடிக்கின்றதா? கூட்டமைப்பை அரசியல் கட்சியாகப் பதிவுசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா?'' என்று மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகையிடம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா துருவித்துருவி விசாரித்துள்ளார் எனத் தெரியவருகின்றது.

அமைச்சரின் இந்தக் கேள்விகளுக்கு மன்னார் ஆயர் தக்க பதில்களையும் அளித்துள்ளார் என அறியமுடிகின்றது.

கடந்த வாரம் மன்னாரில் நடைபெற்ற கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் பங்காளிக் கட்சிகள் ஒற்றுமையுடன் செயற்படத் தீர்மானித்துள்ளன எனவும், காலப்போக்கில் கூட்டமைப்பை பதிவுசெய்வது தொடர்பில் தலைமைப்பீடம் முடிவெடுக்கும் எனவும் அமைச்சரிடம் மன்னார் ஆயர் பதிலளித்துள்ளார் எனத் தெரியவருகின்றது.

இதேவேளை, மன்னாரில் நடைபெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளுக்கிடையிலான சந்திப்பில் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு தொடர்பில் எடுக்கப்பட்ட முடிவு குறித்தும் மன்னார் ஆயரிடம் அமைச்சர் வினவியுள்ளார் எனவும் அறிய முடிகின்றது.

இதற்கு மன்னார் ஆயர் பதிலளிக்கும்போது, ''இந்தியாவில் மாநிலங்களுக்கு வழங்கப்பட்டுள்ள தம்மைத் தாமே ஆளக்கூடிய சுயாட்சியைப் போன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அதிகாரப்பகிர்வுடனான சுயாட்சியை நோக்கியே தீர்வு விடயத்தில் செயற்படத் தீர்மானித்துள்ளன'' என்று கூறியுள்ளார் எனத் தெரியவருகின்றது.

# களனி கங்கையில் குதித்து தற்கொலை

கொழும்பு.மே 17

களனி கங்கையில் குதித்து ஒருவர் தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

ஜீப் ஒன்றில் வந்து களனி முல்ல கங்காதிலக விகாரைக்கு அருகில் சிறிது நேரம் நின்ற நபர் பின் களனி கங்கையில் குதித்தார் என 119 என்ற பொலிஸ் அவசர அழைப்புப் பிரிவுக்கு தகவல் கிடைத்ததென பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

மென்பொருள் நிறுவனம் ஒன்றில் முகாமையாளராக பணிபுரியும் 40 வயதுடைய சிகான் நாணயக்கார என்பவரே இவ்வாறு களனி கங்கையில் குதித்துள்ளார்.

கங்கையில் குதித்தவரின் சடலம் கடற்படையினரால் தேடப்பட்டு வருவதாகவும் வெல்லம்பிட்டி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஆசிரிய மாணவரை இணைப்பதற்கு நேர்முகத் தேர்வு

கொழும்பு, மே 17

கல்வியியற் கல்லூரிகளுக்கு புதிதாக ஆசிரிய மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கான நேர்முகப் பரீட்சைகள் எதிர்வரும் 28 ஆம் திகதி இடம்பெறவுள்ளது என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.


கல்வியியற் கல்லூரிகளில் அதற்கான நேர்முகத் தேர்வுகள் இடம்பெறும் எனவும், நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டவர்களுக்கான கடிதங்கள் இந்த வாரம் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ம-400)

## படைகள் தயார்........



தமிழீழ விடுதலைப் புலிகளுடனான போர் வெற்றி விழாவை கொண்டாடுவதற்காக காலிமுகத்திடலில் கனரக ஆயுதங்கள் சகிதம் படையினர் ஒத்திகையில் ஈடுபடுகின்றனர். (16)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பெரும்பாலும் மேகக் கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும்.

# இரு மாதங்களுக்குள் கட்டணம் செலுத்தாதோருக்கு சிவப்புப்பட்டியல்

## அனுப்பியது மின்சார சபை

யாழ்ப்பாணம், மே 17

யாழ். மாவட்டத்தில் இரு மாத காலப் பகுதிக்குள் மின்சாரக் கட்டணம் செலுத்தத் தவறிய 33 ஆயிரத்து 84 பேருக்கு சிவப்புப்பட்டியல் அனுப்பப் பட்டுள்ளதாக மின்சார சபை வட்டாரங்கள் தகவல் தெரிவித்துள்ளன.

மின்சார சபையின் விதிக்கோவைகளுக்கு அமைவாக மாதாந்த மின்சாரக் கட்டணம் குறைந்தது இரு மாத காலப் பகுதிக்குள் செலுத்த வேண்டிய நிலையில் இந்த வருடம் இரண்டு மாத காலப் பகுதிக்குள் கட் டணத்தை செலுத்தத் தவறிய 33 ஆயிரத்து 84 பேருக்கு சிவப்புப்பட்டியலை மின்சார சபை அனுப்பி வைத்துள்ளது.

யாழ். மாவட்டத்தில் மின்சார சபையின் அனுமதியுடன் மின் இணைப்புப் பெற்றுள்ளவர்களில் அதிகமானோர் மாதாந்த மின் கட்டணத்தை அந்தந்தத் தவணைகளில் செலுத்தி வருகின்றபோதும் தற்போது குடாநாட்டு மக்களின் மின் பாவனை அதிகரித்துள்ளதால் குறித்த தவணைகளில் மின்சாரக் கட்டணம் செலுத்தத் தவறுகின்றனர்.



இதன் அடிப்படையில் குறைந்தது இரு மாதகாலப்பகுதிக்குள் மின்சாரக் கட்டணம் செலுத்தத் தவறிய 33 ஆயிரத்து 84 பேருக்கு சிவப்புப்பட்டியல் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (வ-14)

## இதைக் கூட உச்சரிக்கக் கூடாதா?

நமக்கு இறைவன் தந்த வாழ்நாள் சிறிது. ஒவ்வொரு நாளாகக் கழிந்து கொண்டே போகிறது. நாம் அன்றாடம் திகதித்தாள் கிழிக்கிறோமே? தாளா அது? இல்லை நம் வாழ்நாள் பொழுது விடிந்து பொழுது போனால், வாழ்நாளில் ஒரு நாள் வீணாகிவிட்டது. ஒரு நாளைக்கும் திகதித்தாளை நாம் கிழிக்க மாட்டோம். (வாழ்நாள் முடிவு) மனைவி, "தினம் காலண்டரைக் கிழித்து பல்பொடி மடிப்பீர்களே; இன்று கிழிக்கவில்லையே!" என்று கூறி அழுவாள். ஆகவே, வாழ்நாளை வீழ்நாள் ஆக்கலாமா? இறைவனின் திருநாமத்தைக் கூறக் கூடாதா? "ஆயிரம் எழுத்தல்ல; பத்து எழுத்தல்ல; ஐந்து எழுத்துத்தானே? இதைக்கூட உச்சரிக்கக் கூடாதா? என்கிறார் இராமலிங்க அடிகளார்.

ஞானக்கதிர்

## விளையாட்டு விழா

தென்மராட்சி,மே 17

தென்மராட்சி பிரதேச பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களுக்கு இடையிலான விளையாட்டு விழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறும்.

பிரதேச இளைஞர் கழக சம்மேளனத் தலைவர் கோ.சசிபாலன் தலைமையில் நடைபெறும் விழாவுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலனும், சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார், தேசிய இளைஞர் சேவைகள் மன்ற மாகாணப் பணிப்பாளர் சரத் சந்திரபாலா, யாழ்.மாவட்ட உதவிப் பணிப்பாளர் த.ஈஸ்வரராஜா, மன்ற மாகாண இணைப்பாளர் திருமதி ஸ்ரீகாந்தரூபன் விமலேஸ்வரி ஆகியோரும் கலந்து கொள்வர். (ஒ-9)

## விபத்தில் இளம் பெண் காயம்

தென்மராட்சி,மே 17

மீசாலை வடக்குப் பகுதியில் மோட்டார் சைக்கிளும் லாண்ட் மாஸ்ரர் வாகனமும் நேருக்கு நேர் மோதிக் கொண்டதில் இளம்பெண் காயமடைந்தார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் காலை இடம்பெற்றது. காயங்களுக்கு இலக்கான மந்துவில் கிழக்கைச் சேர்ந்த குலசேகரம் கஜந்தினி (வயது -23) என்பவர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (வ-9)

## மருத்துவ முகாமால் 200 பேர் பயன்

யாழ்ப்பாணம்,மே 17

அல்லைப்பிட்டி பிரதேசத்தில் இடம்பெற்ற நடமாடும் இலவச மருத்துவமுகாம்மூலம்200க் கும் மேற்பட்ட மக்கள் பயன் பெற்றனர்.

வேலணை சுகாதார வைத்திய அதிகாரி மருத்துவர் எஸ். மோகனகுமார் தலைமையில் இடம்பெற்ற இந்த மருத்துவ முகாமில் சகல நோய்களுக்குமான சிகிச்சைகள் வழங்கப்பட்டதுடன் மருந்துகளும் விநியோகிக்கப் பட்டன.இந்த மருத்துவமுகாம் காலை முதல் பிற்பகல் வரை இடம்பெற்றது. (த-17)

## சிங்கள மொழி தேர்ச்சி வகுப்பு

அச்சுவேலி, மே 17

சிங்கள மொழித் தேர்ச்சி வகுப்பு நாளை சனிக்கிழமை தொடக்கம் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. வகுப்பில் இணைந்து கொள்ள விரும்பும் மாணவர்கள் கல்லூரி அதிபரிடம் பதிவு செய்து கொள்ளலாம் என யாழ். வலய முறைசாராக் கல்விப் பிரிவு அறிவித்துள்ளது. (வ-11)

**கடைகள் வாடகைக்குண்டு**

யாழ்ப்பாணம், ஆஸ்பத்திரி வீதியில் மேல்மாடியுடன் கூடிய கடைகள் வாடகைக்குண்டு.

தொடர்பு: 021 221 3105

(36570) (46.0)

**வாழ்க்கைத் திறன் மேம்பாட்டு நிலையம்**

**இலவச தொழிற் திறன் பயிற்சி வகுப்புக்கள்**

பாடசாலையை விட்டு நீங்கியோருக்கான
1. தையல் பயிற்சி
2. மனைப் பொருளியலும், மனை அலங்காரமும் பயிற்சி
3. அடிப்படைக் கணினி அறிவுப் பயிற்சி நெறி ஆகியன

வாழ்க்கைத் திறன் மேம்பாட்டு நிலையம்,
இல. 26, ஆடியபாதம் வீதி, கொக்குவில் கிழக்கு,
கொக்குவில் (யா/ கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை அருகில்) இலவசமாக நடைபெறவுள்ளன.

ஆர்வமுள்ளவர்கள் தமது பெயர் விவரங்களை 19.05.2013 ஞாயிற்றுக்கிழமை அன்று மு.ப 10.00 மணி தொடக்கம் பிற்பகல் 4.30 மணி வரை மேற்படி பயிற்சி நிலையத்தில் பதிவு செய்து கொள்ளலாம்.

நிர்வாகம்.

(C/9439)(6.11)

## முன்பள்ளி விளையாட்டு விழா

வடமராட்சி, மே 17

புலோலி கந்தமுருகேசனார் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டுப் போட்டியும் பரிசளிப்பு விழாவும் நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு முன்பள்ளி மைதானத்தில் நிலையத் தலைவரும், ஆரம்பப்பிரிவு பிள்ளைப் பருவ உதவிக் கல்விப் பணிப்பாளருமான சி.தில்லைநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக பருத்தித்துறை வடமராட்சி இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை அதிபர் த.ரவீந்திரனும்கலந்துகொள்வர் (வ-8-253)

**முதலாம் ஆண்டு நினைவஞ்சலி**



தாயின் மடியில்
31.10.1920

ஆண்டவன் மடியில்
28.05.2012

**திருமதி நாகேஸ்வரி பாலசிங்கம்**

நீங்கள் எங்களை விட்டு பிரிந்து
ஓராண்டு உருண்டோடினாலும் உங்கள்
நினைவுகள் என்றும் எம்மை விட்டு
நீங்காது நிறைந்துள்ளது.
உங்கள் நினைவுடன் ஆத்மா சாந்திபெற
இறைவனை வேண்டுகிறோம்.

என்றும் நினைவால் வாடும்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பேரமருமக்கள்,
பூட்டப்பிள்ளைகள்.

27, 3/2,
Dr.E.S.Coorey Mw,
Colombo-6.

(சி/9093) (10.6)

**பணியாள்கள் தேவை**

25,000/=, 35,000/=, 40,000/= வரையான சம்பளத்துக்கு எங்கள் தனியார் துறைமுகத்தில் கப்பல் வேலைக்கு 18-55 வயது வரையான ஆண்கள் தேவை.

தொடர்பு: 077 3033 803

(35179) (6.11)

**வேலையாள்கள் தேவை**

25,000/= சம்பளத்திற்கு எங்களுடைய க்ளவுஸ் உற்பத்தி செய்யும் கம்பனிக்கு 18-55 வயது வரையான ஆண்கள், பெண்கள் தேவை. சாப்பாடு, தங்குமிட வசதி உண்டு. குழுக்களாகவும் வரலாம். வரும் அன்றே வேலைக்கு சேர்த்துக் கொள்ளப்படுவர்.

தொடர்பு: 077 303 2004 அனுராதபுரம்.

**தேவை**


25000/= - 28000/= சம்பளத்துக்கு PVC தயாரிப்பு கம்பனியில் வேலைவாய்ப்புக்கு 18-50 வயது வரையான ஆண்கள் தேவை. உணவு, தங்குமிட வசதிகள் உண்டு.

தொடர்புகளுக்கு:
0776289655

(35181) (10.6)

**மரண அறிவித்தல்**

## நல்லதம்பி வேலாயுதம்



பெத்தாவளை, அளவெட்டியை பிறப்பிடமாகவும், அளவெட்டி மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட நல்லதம்பி வேலாயுதம் (14.05.2013) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லதம்பி-ஆசைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-இராசம்மா தம்பதியரின்அன்பு மருமகனும், தனலக்ஷிமியின் அன்பு கணவரும், காலஞ்சென்றவர்களான கைலாசபதி, சின்னராசா மற்றும் செல்லம்மா (கனடா) ஆகியோரின் அன்பு சகோதரனும், வசந்தி, ஜெயந்தி, வசந்தராஜன் (சுவிஸ்), ஜெயராஜ் (லண்டன்), விஜயந்தி, கஜந்தி ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற ஞானச்சந்திரன் மற்றும் ஜெயக்குமார், சந்திர றெஜீனா (சுவிஸ்), நந்தினி (லண்டன்), பிரபாகரன் ஆகியோரின் அன்பு மாமனும், இரத்தினம், சரஸ்வதி, பரமேஸ்வரி (ஆஸ்திரேலியா), அன்னலக்ஷிமி, காலஞ்சென்ற மங்களேஸ்வரி மற்றும் புஸ்பராணி, ரஞ்சினிதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும், சஞ்சீவன், அஜந்தா (லண் டன்), எட்வேட் அஜின் (பிரான்ஸ்), பரணிதா, ஜிதுசன், லக்ஷன், றெமோ (சுவிஸ்), லதுமிதன், மதுமிதன் (லண்டன்) ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.05.2013) வெள்ளிக்கிழமை அவரது இல் லத்தில் நடைபெற்று பிற்பகல் ஒரு மணியளவில் பூதவுடல் அளவெட்டி வடக்கு, கேணிப் பிட்டி இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அளவெட்டிமத்தி, அளவெட்டி.
0212059655

(38571)(14-16-17)

தகவல்:
குடும்பத்தினர்.

**31ஆம் நாள் நினைவஞ்சலி**

## அமரர் வீரசிங்கம் இராசேஸ்வரி



திதி: பூர்வ பக்க அட்டமி

அன்னை மடியில்
15.10.1954

இறைவன் அடியில்
18.04.2013

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (17.05.2013) வெள்ளிக்கிழமை காலை கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும், வீட்டுக் கிருத்திய நிகழ்வுகள் நாளை (18.05.2013) சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற உள்ளதால், அவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

விடத்தற்பளை,
மிருசுவில்.

(சி/9437)

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செம்பியன்பற்று பிலிப்பு நேரியார் பெருந்திருவிழா இன்று ஆரம்பம்

வடமராட்சி, மே 17
வடக்கில் உள்ள கத்தோலிக்க யாத்திரைத் தலங்களில் ஒன்றான வடமராட்சி கிழக்கு, செம்பியன் பற்று புனித பிலிப்பு நேரியார் தேவாலய வருடாந்தப் பெருந்திருவிழா இன்று வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.
நவநாள் திருப்பலி, தினமும் மாலை 5 மணிக்கு தொடர்ந்து எதிர்வரும் 25 ஆம் திகதி சனிக்கிழமை வரை இடம்பெறும். மறுநாளான 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு திருவிழாத் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு திருச்சொருப பவனியுடன் பெருந்திருவிழா நிறைவுறும். அன்றிரவு 7.30 மணிக்கு 'மரிய தாசன்' நாட்டுக்கூத்தும் நடைபெறும்.
திருநாள் திருவிழாவில் பங்கு பற்றும் யாத்திரிகர்களின் வசதிகருதி யாழ்ப்பாணம், பருத்தித்துறை, கிளிநொச்சி ஆகிய இடங்களிலிருந்து 25 ஆம் திகதி சனிக்கிழமையும் மறுநாள் 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் விசேட போக்குவரத்து ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.
பெருந்திருவிழாவுக்கான ஏற்பாடுகளை தாளையடி பங்குத் தந்தை அருட் திரு. எம்.யேசுரட்ணம் அடிகளாரும், உதவிப் பங்குத் தந்தை அருட்திரு. யஸ்ரின் அடிகளாரும் மேற்கொண்டுள்ளனர். (ஒ-8)



யாழ். பல்கலைக்கழக சித்திரமும் வடிவமைப்பும் கற்கைநெறி மூன்றாம் வருட மாணவர்களின் காண்பியக் கலைக் கண்காட்சி ஆரம்பமாகியுள்ளது. நான்கு நாள்கள் நடைபெறும் இந்தக் கண்காட்சியின் முதல் நாளான வியாழக்கிழமை பார்வையாளர்கள் கண்காட்சியை பார்வையிடுவதை காணலாம். (ஒ-ரி)

## சந்நிதியான் ஆச்சிரமத்தில் இன்று வைகாசிப் பெருவிழா

வடமராட்சி,மே 17
தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப்பேரவை நடத்தும் வருடாந்த வைகாசிப் பெருவிழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
சந்நிதி முருகன் ஆலயத்தில் விசேட அபிஷேகம், பூசை வழிபாடுகளுடன் ஆரம்பமாகவுள்ள இந்தவிழா பேரவை நிர்வாக உறுப்பினர் கே.அருணகிரிநாதன் தலைமையில் நடைபெறும்.
நல்லை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகளின் அருளுரையைத் தொடர்ந்து, திருமதிகள் ஜனனி நடேசமூர்த்தி, விதுஷா கோபிகிருஷ்ணா ஆகியோரின் வீணை இசையும், திருமதிகள் ஜனனி செந்தூரன், சுஜாதா நிரஞ்சன் ஆகியோரின் வயலின் இசையும், சதாவேல் மாறனின் மிருதங்கக் கச்சேரியும் இடம்பெறும். அடுத்து உரும்பிராய் மாணவிகளின் நாட்டிய நாடக நிகழ்வும், 63 நாயன்மார் குருபூசையுடன் பெருவிழா நிறைவுறும். (ஒ-8)

## யாழ். விழிப்புலனற்றோர் சங்க ஆண்டு விழா கட்டுரைப் போட்டி

யாழ்ப்பாணம், மே 17
யாழ். விழிப்புலனற்றோர் சங்கத்தின் 37 ஆவது ஆண்டு விழாவையொட்டி மாற்றாற்றல் உடையோர் - திறமைகளை வெளிக்கொணரும் வகையில் கட்டுரைப் போட்டிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.
கட்டுரைப்போட்டி பிரிவு ஒன்றுக்கு 'மாணவர்களும் மாற்றுத் திறனாளிகளும்'' எனும் தலைப்பும், பிரிவு இரண்டுக்கு ''உடல் ஊனம் வாழ்வின் முடிவல்ல'' எனும் தலைப்பும், பிரிவு-மூன்றுக்கு ''சமூகப் பணியில் மாற்றுத் திறனாளிகளின் பங்களிப்பும் அதன் வளர்ச்சியும்'' எனும் தலைப்பும் வழங்கப்பட்டுள்ளன.
எழுத்து மூலமாக அனுப்பப்பட வேண்டிய கட்டுரைகளில் எழுதுவோரின் தொலைபேசி இலக்கத்தையும் குறிப்பிட்டு எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் விழிப்புலனற்றோர் சங்கம், இல.28, முதலாம் ஒழுங்கை, கோயில் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்படுகிறது.
பிரிவு-1 இனுள் தரம் 6,7,8 மாணவர்கள் உள்ளடக்கப்படுவதுடன் 200 சொற்களுக்கு குறையாத கட்டுரையும் பிரிவு-2 இனுள் தரம் 9,10,11 மாணவர்களுக்கான கட்டுரைகள் 300 சொற்களுக்கு குறையாமலும், பிரிவு மூன்றில் தரம் 12,13 மாணவர்களுக்கான கட்டுரை 500 சொற்களுக்கு குறையாமலும் அமையவேண்டும்.
போட்டிக்கான பரிசுகள் சங்கத்தின் விழா நடைபெறவுள்ள எதிர்வரும் 25 ஆம் திகதி வழங்கப்படும். மாணவர்களது கட்டுரைகள் அவர்களது பாடசாலை அதிபர்களால் உறுதிப்படுத்தப்படவேண்டும் என்றுஅறிவிக்கப்பட்டுள்ளது.(ஒ-ரி)

## கணிதபாட ஆசிரியர்களுக்கான செயலமர்வு இன்றும் நாளையும்

வடமராட்சி,மே 17
வடமராட்சி வலயப் பாடசாலைகளில் 6 ஆம் வகுப்புக்கு மேல் கணிதபாடம் போதிக்கும் ஆசிரியர்களுக்கான கருத்தரங்கும், செயலமர்வும் இன்று வெள்ளிக்கிழமையும், நாளை சனிக்கிழமையும் காலை 8.30 மணி முதல் நடைபெறவுள்ளது.
மாகாண கல்வித் திணைக்களத்தினால் நடத்தப்படும் இந்தக் கருத்தரங்கும் செயலமர்வும் புலோலி கணினி வள நிலை யத்தில் இடம்பெறும். (ஒ-8)

## கரவெட்டி கோட்டமட்ட சித்திரப்போட்டிகள்

கரவெட்டி, மே 17
கரவெட்டிக் கோட்டப் பாடசாலைகளிடையே இடம்பெற்ற சித்திரப் போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.
**தரம் 1 கிறுக்கல் சித்திரம்**
த.அபிஷான்-நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலை ச.ஆர்த்திகா- விக்கினேஸ்வரா ஆரம்பப்பாடசாலை, சு.வைஷ்ணவி- துன்னாலை காசிநாதர் வித்தி.
**தரம் 2 அச்சுப்பதித்தல்**
சி.திருஷிகா- கரணவாய் வேதாரணியேஸ்வரா வித்தி, நெ.காத்தியாயினி-நெல்லியடி மெ.மி.த.க பாடசாலை அ.நர்மதா-வதிரி வடக்கு மெ.மி.த.க பாடசாலை
**தரம் 3 கொலாஜ் சித்திரம்**
உ.கீர்த்தனி- நெல்லியடி மெ.மி.த.க பாடசாலை செ.சாருகா-மாணிக்கவாசகர் வித்தி. சி.சிவதருண்- உடுப்பிட்டி அ.மி.கல்லூரி
**தரம் 4 விரும்பிய காட்சி**
த.கரிஸ்துஜன்- கரணவாய் ம.வி. ம.கிருஷன்-மாணிக்க வாசகர் வித்தி, கி.துளசிகா கரணவாய் மணியகாரன் தோட்டம்.
**தரம் 5 விரும்பிய காட்சி**
லோ.ஜனோசன்-தேவரையாளி இ.கல்லூரி, கை.பிருகுவி -மாணிக்கவாசகர் வித்தி. சு.சாதுர்ஜன்-உடுப்பிட்டி அ.மி. கல்லூரி. (ம-ரி)

சாவகச்சேரி ஆஸ்பத்திரி 'கிளினிக்'கில்

## கண் சிகிச்சை பெற்ற 481 பேரில் 31 பேருக்கு 'கற்றாக்'சத்திரசிகிச்சை

தென்மராட்சி, மே 17
சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் நடத்தப்படும் கண் கிளினிக்கில் கடந்த நான்கு மாத கால இடைவெளியில் சிகிச்சை பெற்ற 481 பேரில் வறுமைக்கோட்டில் உள்ள 34 பேருக்கு மூக்குக் கண்ணாடி வழங்கவும், 31 பேருக்கு விழி வெண்படலத்தில் ஏற்பட்டுள்ள பூப்படர்வை (கற்றாக்) அப்புறப்படுத்தும் சத்திரசிகிச்சை மேற்கொள்ளவும் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.
இந்த விடயம் தொடர்பாக வைத்தியசாலை நிர்வாகத்தினருடன் தொடர்பு கொண்டபோது வைத்தியசாலையில் நடத்தப்படும் கண் கிளினிக்குக்கு வருவோரில் பார்வையில் குறைபாடு காணப்படுவோருக்கு மூக்குக் கண்ணாடிபெறவும், விழிவெண்படலத்தில் பூப்படர்வு ஏற்பட்டுள்ளவர்களுக்கு சத்திரசிகிச்சை மேற்கொள்ளவும் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.
'கற்றாக்' ஏற்பட்ட வறுமைக் கோட்டின் கீழ் உள்ளவர்களுக்கு சுகாதார அமைச்சின் விஷன் 2020 திட்டத்தின் கீழ் சத்திரசிகிச்சை மேற்கொள்ள யாழ். சுகாதார சேவைகள் பணிப்பாளருடனும் யாழ். போதனா வைத்தியசாலை கண் வைத்திய நிபுணருடனும் தொடர்பு கொண்டுள்ளதாகவும், கண் பார்வையில் குறைபாடு காணப்படும் வறுமைக்கோட்டின் கீழ் உள்ள 31 பேர் சிகிச்சைக்காகப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதாகவும் இவர்களுக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடி பெறுவதற்கு சமூக நலன் விரும்பிகளுடன் தொடர்பு கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.
இந்த விடயம் தொடர்பாக சமூக சேவைகள் திணைக்களத்துடன் தொடர்பு கொண்ட போது, வறுமைக்கோட்டின் கீழ் உள்ள பார்வையில் குறைபாடு காணப்படுபவர்களுக்கு திணைக் களத்தினால் இலவசமாக மூக்குக் கண்ணாடி வழங்கப்பட்டு வருவதாகவும், மூக்குக் கண்ணாடி தேவைப்படும் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் வைத்திய சான்றிதழுடன் அந்தந்தப் பகுதி பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவு ஊடாக விண்ணப்பித்தால் 45 தினங்களுக்குள் மூக்குக் கண்ணாடி இலவசமாக வழங்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-9)

## சென் ஜோன்ஸ் தொண்டர் நேர்முகம் நாளை

யாழ்ப்பாணம், மே 17
யாழ். போதனா வைத்தியசாலையில் சேவை புரிவதற்காக சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் தொண்டர்கள் தேவைப்படுவதாக சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் யாழ். மாவட்ட ஆணையாளர் அறிவித்திருக்கிறார்.
நேர்முகப் பரீட்சைகள் நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலைக்கு அருகிலுள்ள சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் காரியாலயத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-ரி)

## நெடுந்தீவில் பாலம் புனரமைப்பு

யாழ்ப்பாணம்,மே 17
நெடுந்தீவு மேற்கு பனங்காணிமுனை வீதிப் பாலத்தின் புனரமைப்புப் பணிகள் இடம்பெற்று வருகின்றன.
மீள் எழுச்சித்திட்டத்தின் கீழ் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு பாலம் புனரமைப்புக்காக 6 லட்சம் ரூபாவை ஒதுக்கி வழங்கியுள்ளது.(ஒ-7)

## தடகள போட்டி

வலி.வடக்கு.மே 17
உடுவில் பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையேயான தடகள விளையாட்டுப் போட்டிகள் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பிரதேச செயலர் மு.நந்தகோபாலன் தலைமையில் குப்பிளான் விக்கினேஸ்வரா விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது. (ஒ-8)



சாவகச்சேரி கண்டி வீதி, நுணாவில் சந்திக்கு அருகில் வீதி விபத்துகளிலிருந்து பாதுகாப்பதற்காக நடப்பட்டுள்ள நாற்சந்தி முன்னால் என்ற விளக்கக்குறியீட்டை மறைத்து கண்ணீர் அஞ்சலி பிரசுரம் சில விஷமிகளால் ஒட்டப்பட்டு மறைக்கப்பட்டுள்ளது.
நாடு முழுவதும் வீதிப்போக்குவரத்து தினம் கொண்டாடப்படும் இந்த வேளையில் இந்த அயோக்கியத்தனம் புரியப்பட்டுள்ளது. பொதுச் சொத்தை சேதம் செய்தல், போக்குவரத்து விதிமுறைகளை மீறுதல் விளைவித்தல் என்பன குற்றச் செயல்களாகும். பொறுப்பானவர்கள் சம்பந்தப்பட்டவர்களை அடையாளம் கண்டு தகுந்த தண்டனை வழங்க வேண்டும் என்று நலன் விரும்பிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஒ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துயர் பகிர்கின்றோம்



எமது பாடசாலை ஆசிரியை
திருமதி கலாஜினி மணிராஜா
அவர்களின் அன்புத் தந்தையார்

### தம்பிமுத்து இரத்தினம்

அவர்கள் 13.05.2013 அன்று இறை பதம் எய்தியதையிட்டு எமது பாட சாலைச் சமூகம் ஆழ்ந்த அனுதா பத்தைத் தெரிவித்துக்கொள்கின்றது.

பாடசாலைச் சமூகம்
யா/ முத்துத்தம்பி மகா வித்தியாலயம். (36576) (45.6.7)

### விளையாட்டு விழா

கைதடி குடும்ப முன் பள்ளி சிறார்களின் விளையாட்டு விழா எதிர்வரும் 21 ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு கைதடியில் இடம்பெறும். தென்ம ராட்சி கல்வி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் சு.பாக்கியராசா தலைமையில் நடைபெறும் விழாவுக்கு முதன்மை விருந்தினராக தென்ம ராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சுகிருஷ்ண குமார் கலந்து கொள்வார். (ஓ-9)

## மரண அறிவித்தல்

### திருமதி கெங்காதேவி துரைராஜா



கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், நெட்டி லிப்பாய், கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட கெங்காதேவி துரைராஜா 16.05.2013 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் துரைராஜா வின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான நடராஜா - நாகரத்தினம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - சிவயோகம் தம்பதியரின் மருமகளும், துஷிஜன் (பிரதேச செயலகம் - வவுனியா), சஜித்தா (ஆசிரியை - களுத்துறை ஜ'ஊலான் மத்தியகல்லூரி), கார்த்திகன் (உயர்தர மாணவன் - வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தாயும், அசோகன் (இணைப்பாளர் இலங்கை களப்பறவையியல் குழு - கொழும்பு பல்கலைக் கழகம்), குமுதினி (பிரதேச செயலகம் - வவுனியா) ஆகியோரின் மாமியும், லிவிஷா, வியனிஷா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், தர்மேஸ்வரி (கனடா), கணேசபிள்ளை, சாம்பசிவம், மகாலக்சுமி, தேவி (கனடா), மகேந்திரமலர் (சுவிஸ்), பரமசிவம் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.05.2013) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று நண்பகல் 12 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நெட்டிலிப்பாய், கோண்டாவில். (35375) (45.6) தகவல்: குடும்பத்தினர்.

## மரம் விற்பனைக்கு

எமது பஜனை நிலைய வளவில் தறித்து வீழ்த்தப்பட்ட மா மரம் விற்பனைக்குண்டு. 10 அடி நீளம், 6 ஆடி சுற்று


தொடர்பு: சாயி பஜனை நிலையம்,
331, ஆடியபாதம் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
(36576)(45.6)

## பணிப்பெண் தேவை

யாழ். நகரில் சிறிய குடும்பம் ஒன்றுக்கு சமையல் மற்றும் குழந்தை பராமரிப்புக்கு பெண் தேவை.

தொடர்பு: 075 988 0000
(C/9442)(6.11)

## மரண அறிவித்தல்



### யோசேப் ஆரோக்கியநாதர் (திரவியம்)

மணற்காட்டைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட யோசேப் ஆரோக்கியநாதர் (திரவியம்) 13-05-2013 திங்கட்கிழமை கால மானார்.


அன்னார், காலஞ்சென்ற யோசேப் - செபமாலையம்மா தம்பதியரின் மூத்த புதல்வரும், காலஞ்சென்ற பிறான்சிஸ்கம்மா (தங்கக்கிளி) அவர்களின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற வயித்தி ஆபிரகாம் மாக்கிறேட் தம்பதியரின் மூத்த மருமகனும், இந்திரா(மணற்காடு), சாள்ஸ் கொன்றாட் (இதயகுமார் - டென்மார்க்), இதயகுமாரி(இத்தாலி), நிக்சன்கொன் றாட் (இதயராசா - இத்தாலி), ஜெலன்குமாரி(இத்தாலி), காலஞ்சென்ற யாக்சன் கொன்றாட், புறிக்சன் கொன்றாட்(கமல் - இத்தாலி), கிஷானா (மணற்காடு) ஆகியோரின் பாசமிகு தந்தையும், நாகராசா (மணற்காடு), றாஜினி(டென்மார்க்), வசந்தன் (இத்தாலி), கலிஸ்ரா(இத்தாலி), லெனின் (இத்தாலி), தர்சினி(இத்தாலி), இளஞ்சீலன் (மணற்காடு) ஆகியோரின் பாசமிகு மாமனும், நிரோஷன்(டென்மார்க்), நியுட்டன், நிறோஜினி, நிரூஷன், நிலூஜினி (மணற்காடு), சகாஜினி, திரேஷானி, வரோனிஷா, பிறின்சியா (டென்மார்க்), டனிலா, டொறின்சன், ஜெனுஷன்(இத்தாலி), ஷெறோவன், சாருஜன் (மணற்காடு) ஆகியோரின் பாசமிகு பேரனும், பரிமளம் (மணற்காடு), பூலோகராசா (மணற்காடு), யூலினா (இத்தாலி), காலஞ்சென்றவர்களான மாசில்லா, பாரபறா (சின்னமணி), சந்திரா ஆகியோரின் உடன் பிறந்த சகோதரரும், காலஞ்சென்ற பீரிஸ், சிமியோன்பிள்ளை(பவளம் - மணற்காடு), வின்சன் (இத்தாலி), பன்னீர்செல்வம், காலஞ்சென்றவர்களான வென்செஸ்லாஸ் பெனடிற், டேவிற் மரிய செல்வம், யேசுராசா (மணற்காடு), மகேஸ் (மணற்காடு), மயினா(மணற்காடு), அப்புத்துரை(கட்டார்), லீமா (மணற்காடு), அந்தோனிப் பிள்ளை (ஜெயலா - லண்டன்) ஆகியோரின் பாசமிகு மூத்த மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.05.2013) சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு புனித அந்தோனியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலியுடன் புனித அந்தோனியார் ஆலயசேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

மணற்காடு,
குடத்தனை. (35375) (45.6)

தகவல்:
குடும்பத்தினர்.
தொ.பே. 077 813 1871, 077 814 2538



## மரண அறிவித்தல்

### நாராணபிள்ளை அருணகிரிநாதன்

(முன்னாள் களஞ்சிய பொறுப்பாளர்-துணுக்காய்)

துன்னாலையைப் பிறப்பிடமாகவும், ஆவரங்காலை வசிப்பிட மாகவும் கொண்ட நாராணபிள்ளை அருணகிரிநாதன் 15.05.2013 புதன்கிழமை காலமானார்.

அன்னார் துன்னாலையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான நாராண பிள்ளை- சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகனும், ஆவரங்காலைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான மயில்வாகனம்-இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், ஈஸ்வரியம்மாவின் அன்புக் கணவரும், காலஞ் சென்ற நிரூஜினி மற்றும் உமேஷ்வரன் (ஜேர்மனி), நிசாந்தினி (கனடா), நளாஜினி (லண்டன்), ஜனார்த்தனன் (அமெரிக்கா) ஆகியோரின் அருமைத் தந்தையும், சதாசீலன் (கனடா), செல்வகுமார் (லண்டன்), பமிலா ஆகியோரின் அன்பு மாமனும், சரஸ்வதி, தம்பாப்பிள்ளை (துணுக்காய்), மாணிக்கவாசகர் (ஜேர்மனி), குமரகுருநாதன் (கிராம சேவகர்) ஆகியோரின் அருமைச் சகோதரனும், தமிதா, கம்ஷா, சயானா, சஜீன், சஜன், சகீன் ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளைமறுதினம் (19.05.2013) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கரதடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆவரங்கால் கிழக்கு, ஆவரங்கால். (வங்கியடி)
தொடர்புகளுக்கு: 077 6636525 (36571)(14-16-17)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் விளம்பரத் தொடர்புக்கு—
advt@uthayan.com
0215671111

# சீட்டிழுப்பு முடிவுகள்

சங்க நிதி வளர்ச்சிக்காக நடத்தப்பட்ட அதிஷ்டலாபச் சீட்டிழுப்பு 15.05.2013 இல் இடம் பெற்றது.

**வெற்றி பெற்ற இலக்கங்களின் விவரம்**

| | |
|---|---|
| முதலாம் பரிசு | 5545 |
| 2 ஆம் பரிசு | 5912 |
| 3 ஆம் பரிசு | 2163 |

**ஆறுதல் பரிசுகள்**

0948, 2077, 4067, 1389, 6301,
4078, 5302, 2483, 5788, 6300,
5151, 2030, 6209,5071, 0811,
4507, 3096, 1784, 4502, 3076

பிரதேச செயலகம்
தென்மராட்சி,
சாவகச்சேரி. (C/9281)(8.11)

பிரதேச செயலக
நலன்புரி சங்கம்.

## பழைய மாணவர் சங்கக் கூட்டம்

வடமராட்சி, மே 17

நூற்றாண்டு நிறைவு காணும் கரவெட்டி, வதிரி திரு இருதயக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு அதிபர் இ.இராகவன் தலைமையில் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரியின் நூற்றாண்டு நிகழ்வை சிறப்புற நடத்துவதற்கு ஆக்கபூர்வமான ஆலோசனைகளை வழங்குவதற்கு பழைய மாணவர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கல்லூரிச் சமூகம் கேட்டுள்ளது. (ஓ-8)

# கேள்விப் பத்திரம் கோரல்

TSEP செயற்திட்டத்தின் கீழ் மாகாணக் கல்வித் திணைக்களத்தால் கீழ் குறிப்பிடப்படும் தளபாடங்களுக்கான கூறுவிலைகள் கோரப்படுகின்றன.

| விவரம் | எண்ணிக்கை |
|---|---|
| 01. அலுவலக மேசை (மரம்) | 32 |
| 02. மாநாட்டு மண்டபக் கதிரை | 130 |
| 03. அலுமாரி (தகரம்) | 10 |
| 04. வாசிப்பு மேசை (மரம்/இரும்பு) | 08 |

கூறுவிலைகள் கோரும் விண்ணப்பப் படிவங்களையும் தேவையான அறிவுறுத்தல்களையும் மருதனார்மடத்தில் அமைந்துள்ள வட மாகாணக் கல்வித் திணைக்களத்தின் நிதிக் கிளையிலிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

மூடிய கூறுவிலைகளை மே மாதம் 30ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு முன்னர் மருதனார்மடத்தில் அமைந்துள்ள வட மாகாணக் கல்வித் திணைக்களத்துக்கு கிடைக்க ஆவன செய்யப்படல் வேண்டும்.

வ.செல்வராசா,
மாகாணக் கல்விப் பணிப்பாளர்,
மாகாணக் கல்வித் திணைக்களம்,
வட மாகாணம். (C/9445)(10.6)

சர்வதேச அங்கீகாரம் பெற்ற
தகவல் தொழில்நுட்ப டிப்ளோமா



ESOFT
Shaping Lives, Creating Futures.
இடமிருந்து 10% DISCOUNT
மே மாதம் 31ஆம் திகதி வரை மட்டுமே

Diploma in Information Technology
INTERNATIONAL
Duration : 4 Months Modules : 10
With an International Certificate (Edexcel-UK)

FREE DVD
Diploma in English
Duration : 4 Months
With Role play DVDs

Diploma in Software Engineering
பாடநெறிகள் : 8 காலம்: 6 மாதங்கள்

Diploma in Business Management
பாடநெறிகள் : 11 காலம்: 4 மாதங்கள்

Diploma in Web Engineering
பாடநெறிகள் : 8 காலம்: 6 மாதங்கள்

Diploma in Graphic Designing
பாடநெறிகள் : 5 காலம்: 4 மாதங்கள்

Diploma in Computerized Accounting
பாடநெறிகள் : 6 காலம்: 5 மாதங்கள்

City & Guilds - English
பாடநெறிகள் : 6 காலம்: 4 மாதங்கள்

Diploma in Hardware & Networking
பாடநெறிகள் : 12 காலம்: 4 மாதங்கள்

IELTS
பாடநெறிகள் : 7 காலம்: 3 மாதங்கள்

பாடநெறிக் கட்டணத்தை தவணை முறையாகவும் செலுத்தலாம்

புதிய பிரிவுகள்

| | | | |
|---|---|---|---|
| திங்கள், செவ்வாய், புதன் | 20th May 2013 | 8:30am - 12:30pm | 2:00pm - 5:00pm |
| புதன், வியாழன், வெள்ளி | 22th May 2013 | 8:30am - 12:30pm | 2:00pm - 5:00pm |
| சனி, ஞாயிறு | 19th May 2013 | 8:30am - 12:30pm | 2:00pm - 5:00pm |

ESOFT - இலங்கையின் மிகப்பெரிய தகவல் தொழில்நுட்ப கற்கை வலயமைப்பு

ESOFT
Shaping Lives, Creating Futures.
ESOFT METRO CAMPUS - JAFFNA
No.137, K.K.S Road, Jaffna Tel : 021 750 1120

KILINOCHCHI
No.01, Kanagapuram Road, Tel : 021 221 5444

NELLIADY
No.151, Jaffna Road, Nelliady Tel: 021 221 4940

துரித அழைப்பு : 077 309 9 308

# மரண அறிவித்தல்கள்

## திருமதி மீனாட்சி சின்னத்துரை



நயினாதீவு 5ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மீனாட்சி சின்னத்துரை நேற்று (16.05.2013) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னர்-இராமாசிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான குருநாதர்-வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சின்னத்துரையின் அன்பு மனைவியும் ,காலஞ்சென்றவர்களான வள்ளியம்மை, கணபதிப்பிள்ளை, கனகசபை, தில்லைவனம், மாணிக்கம், செல்லாச்சி, முருகேசு, இராமலிங்கம் மற்றும் கண்மணி ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை, விசுவலிங்கம், நாகநாதர், வள்ளியம்மை, வேலாயுதம் மற்றும் தில்லையம்பலம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.05.2013) வெள்ளிக் கிழமை பி.ப. 02.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சல்லிபரவை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

5ஆம் வட்டாரம், நயினாதீவு.
021 3002337, 0215681181 (38590)(14-16-17)

தகவல்:
குடும்பத்தினர்.

## வல்லிபுரம் கதிரமலைநாதன்



வட்டு மேற்கு, வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் கிளிநொச்சி கனகபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் கதிரமலைநாதன் நேற்று(16.05.2013) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம்-இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற நவரத்தினம்-மனோன்மணி தம்பதியரின் மருமகனும், தேம்பாமலரின் பாசமிகு கணவரும், மோகனராணி, தர்மசீலன், தர்மகுணசீலன், நந்தசீலன், கடம்பசீலன் ஆகியோரின் அன்புத் தந்தையும், விமலநாதன் காலஞ்சென்ற முத்துப்பிள்ளை, கனகாம்பிகை அம்மா மற்றும் பரமேஸ்வரி, மனோரஞ்சிதம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், சக்திபாகன், சுமதி, ஜெயமதி, சிவப்பிரியா, பத்மநிதி ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.05.2013) வெள்ளிக்கிழமை மு.ப. 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கனகபுரம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல. 18, இரண்டாம் பண்ணை,
கனகபுரம். கிளிநொச்சி. (35124)(14-16-17)

தகவல்:
க. கடம்பசீலன் (பொறியியலாளர்)
077 7604667

## திருமதி கனகரத்தினம் முத்துப்பிள்ளை

*(உசன், சாவகச்சேரி- வவுனியா)*



சாவகச்சேரி, உசனைப் பிறப்பிடமாகவும், நுணாவில் மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகரத்தினம் முத்துப்பிள்ளை நேற்று (16.05.2013) வியாழக்கிழமை வவுனியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிமுத்து - செல்லாச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சண்முகம்-பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கனகரத்தினத்தின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான ருக்குமணி, கந்தையாவின் சகோதரியும், சிவநாதன் (கொழும்பு), சிவபாலன் (சாவகச்சேரி), சண்முகராசா (கனடா), சிவராசா (கனடா), சிவசோதி (வவுனியா) ஆகியோரின் அன்புத் தாயும், ஸ்ரீமலர், தேவராணி, தங்கராணி, ராஜேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியும், அற்புதநாதனின் (வவுனியா) பாசமிகு மாமியும், சிவகரன், ஸ்ரீறமணன், ஸ்ரீறங்கன், அகிலன், கஜன், லோத்திக்கா, நர்மிதா, தீபா, பங்கஜன், றதன், லக்ஷ்மன், அஜானி, சயந்தினி, பிரசன்னா, சபீனா ஆகியோரின் பேர்த்தியும், பவனீஸின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


தகவல்:
க.சிவநாதன் (மகன்) 0771511835
க.சிவபாலன் (மகன்) 0775251743
க.சண்முகராசா (மகன்) 0014164647742
க.சிவராசா (மகன்) 0015146858383
அற்புதநாதன் சிவசோதி (மகள்) 0771509283

(C/9450)(9-14-16)

இல.128,
அம்மன் கோயில் வீதி,
லக்ஷபான, தோனிக்கல்,
வவுனியா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூதாட்டம்: ஸ்ரீசாந்த் உட்பட மூவர் கைது



கிரிக்கெட் சூதாட்டத்தில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் இந்தியாவின் பிரபல கிரிக்கெட் வீரர் ஸ்ரீசாந்த் உட்பட 3 வீரர்களும், முகவர்கள் என்று கூறப்படும் 7 பேரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நடைபெற்று வரும் இந்தியன் பிறீமியர் லீக் தொடரில் ராஜஸ்தான் அணி சார்பில் ஸ்ரீசாந்த் விளையாடி வருகின்றார். நேற்றுமுன்தினம் மும்பை அணிக்கு எதிரான ஆட்டத்தில் ராஜஸ்தான் அணி தோல்வி அடைந்துள்ள நிலையில் இந்த கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.

ஸ்ரீசாந்துடன், ராஜஸ்தான் அணியைச் சேர்ந்த அங்கிட் சவான் மற்றும் அஜித் சண்டிலா ஆகியோரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்ட மூவர் மீதும், ஏமாற்றுதல், சதி செய்தல் ஆகிய இரு பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் கூறுகின்றனர்.

''கிரிக்கெட் சூதாட்டத்தில் குறித்த வீரர்களுக்குத் தொடர்பு உள்ளதாக முறைப்பாடுகள் கிடைத்தன. அதையடுத்து நாங்கள் அவர்களை இரகசியமாகக் கண்காணித்தோம். இதற்காக டில்லியிலிருந்து சிறப்பு பொலிஸ் குழு மும்பை வந்திருந்தது. இதுகுறித்த மேலதிக எந்தத் தகவலும் தற்போது கூறமுடியாது'' என்று பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

வீரர்கள் கைது தொடர்பாக கருத்து தெரிவித்துள்ள ராஜஸ் தான் அணி நிர்வாகம், இந்தக் கைது நடவடிக்கை தமக்கு வியப்பளிப்பதாக அமைந்துள்ளது என்று தெரிவித்துள்ளது. இந்த விவகாரம் குறித்து இந்திய கிரிக்கெட் சபையுடன் தொடர்ந்தும் தொடர்பில் இருப்பதாகவும், பொலிஸாரின் விசாரணைகளுக்குப் பூரண ஒத்துழைப்பு வழங்குவது என்று தீர்மானம் செய்துள்ளோம் என்றும் அணி நிர்வாகம் மேலும் தெரிவித்தது. (ற)

சூதாட்டத்தில் வீரர்கள் ஈடுபட்டது மிகுந்த அதிர்ச்சியும், கவலையும் அளிக்கிறது. விசாரணை முடியும் வரை ஸ்ரீசாந்த், அங்கிட் சவான், அஜித் சண்டிலா ஆகிய 3 வீரர்களையும் இடைநிறுத்தியுள்ளோம். இது தொடர்பாக அனைத்துத் தகவல்களையும் கேட்டு அறிந்து வருகிறோம். வீரர்கள் மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால் அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். ஊழலை இந்திய கிரிக்கெட் சபை ஒருபோதும் அனுமதிக்காது. டெல்லி பொலிஸாரின் விசாரணைக்கு முழு ஒத் துழைப்பு கொடுப்போம்.

– இந்திய கிரிக்கெட் சபை

## "மகனின் வாழ்க்கையை அழித்துவிட்டார் டோனி"

### ஸ்ரீசாந்தின் தந்தை குற்றச்சாட்டு


''எனது மகனின் கிரிக்கெட் வாழ்க்கையை இந்திய அணித் தலைவர் டோனியும், ஹர்பஜன் சிங்கும் திட்டமிட்டு அழித்து விட்டனர்'' என்று ஸ்ரீசாந்தின் தந்தை குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஐ.பி.எல். தொடரில் சூதாட்டத்தில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டின் பேரில் இந்திய அணி வீரர் ஸ்ரீசாந் கைதாகியுள்ளார். இதுகுறித்து கூறும்போதே ஸ்ரீசாந்தின் தந்தை இவ்வாறு குற்றஞ்சாட்டியுள்ளார்.

''இந்திய அணிக்காகச் சிறப்பாக விளையாடிய எனது மகனை இந்திய அணித் தலைவர் டோனியும், ஹர்பஜன் சிங்கும் திட்டமிட்டு பழிவாங்கியுள்ளனர். ஸ்ரீசாந்தின் இன்றைய நிலைக்கு டோனியே காரணம். எனது மகனைப் பழிவாங்கும் நடவடிக்கையில் டோனியும், ஹர்பஜன் சிங்கும் தொடர்ந்து ஈடுபட்டுவந்தனர்.

'நீ ஒருபோதும் இந்திய டெஸ்ட் அணியில் இடம் பெறமுடியாது. அதற்கு நான் விடமாட்டேன்'' என்று டோனி எனது மகனை மிரட்டியிருந்தார்'' என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற)

## இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியது சானியா மிர்சா - பெதானி இணை



இத்தாலி ஓபன் ரென்னிஸ் தொடரின் முதல் சுற்றில் இந்தியாவின் சானியா மிர்சா, அமெரிக்காவின் பெதானி மேடக் சாண்ட்ஸ் இணை வெற்றி பெற்றுள்ளது.

இத்தாலி தலைநகர் ரோம் நகரில் நடைபெற்றுவரும் இத்தாலி ஓபன் ரென்னிஸ் தொடரில் பெண்கள் இரட்டையர் பிரிவு முதல் சுற்றில் சானியா, பெதானி மேடக் இணை, ஜப்பானின் சுகோ, லாட்வியாவின் லிகா இணையை எதிர் கொண்டது. இதன் முதல் செற்றை 6:1 என எளிதில் வென்ற சானியா இணை, இரண்டாவது செற்றையும் 6:3 என்ற கணக்கில் கைப்பற்றியது.

இறுதியில் சானியா மிர்சா, பெதானி மேடக் சாண்ட்ஸ் இணை 6:1, 6:3 என்ற நேர் செற் கணக்கில் வெற்றி பெற்று இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியது. (ற)

## பிரெஞ்ச் ஓபனில் பங்கேற்பாரா மூரே?



உலகின் முன்னணி ரென்னிஸ் வீரரான அன்ரி மூரே, பிரெஞ்ச் ஓபன் ரென்னிஸில் பங்கேற்பது சந்தேகத்துக் குள்ளாகியுள்ளது.

மூரேயின் முதுகுப் பகுதியில் ஏற்பட்டுள்ள உபாதை காரணமாகவே அவர் எதிர் வரும் 26 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள பிரெஞ்ச் ஓபன் ரென்னிஸ் தொடரில் பங்கேற்பது நிச்சயத்தன்மை அற்றதாகக் காணப்படுகிறது.

உலகின் இரண்டாம் நிலை வீரரான அன்ரி மூரே, உபாதை காரணமாக சமீபத்தில் நடந்த ரோம் மாஸ்டர்ஸ் ரென்னிஸ் தொடரின் இரண்டாவது சுற்றில் விலக நேர்ந்தது.

தற்போது உபாதைக்கான சிகிச்சைகளைப் பெற்று வரும் அவரால், பரிஸில் நடைபெறவுள்ள பிரெஞ்ச் ஓபன் ரென்னிஸ் தொடரில் விளையாடுவது குறித்து உறுதியாக ஏதும் கூற இயலவில்லை.(ற)

## ஐ.பி.எல்லை இழுத்து மூட வேண்டும்



உடனே ஐ.பி.எல். தொடரை இந்திய கிரிக்கெட் சபை நிறுத்த வேண்டும். சூதாட்டத்தில் ஈடுபடும் வீரர்களை நிரந்தரமாக கிரிக்கெட் விளையாடுவதிலிருந்து தடை செய்ய வேண்டும் என்று ஆவேசப்படுகிறார் முன்னாள் விக்கெட் காப்பாளர் சையத் கிர்மானி

ஐ.பி.எல். ஆட்டங்களில் சூதாட்டத்தில் ஈடுபட்டார்கள் என்ற குற்றச்சாட்டில் ஸ்ரீசாந்த் உள்ளிட்ட 3 வீரர்கள் சிக்கி கைதாகியிருப்பது குறித்து கருத்து வெளியிடும்போதே கிர்மானி இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் இது குறித்துக் குறிப்பிடுகையில்;

''சூதாட்டத்தில் ஈடுபடும் வீரர்களுக்கு வாழ்நாள் தடை விதிக்க வேண்டும். அவர்களுக்கு 12 முதல் 15 வருடகாலச் சிறைத் தண்டனை விதிக்க வேண்டும். ஐ.பி.எல்லையும் உடனே இழுத்து மூட வேண்டும். ஐ.பி.எல்லில் பெரும் பணம் விளையாடுவதால்தான் இந்த நிலை ஏற்படுகிறது.'' என்று தெரிவித்தார் கிர்மானி. (ற)

## ஸ்ரீ சாந்த் நல்லவரா? கெட்டவரா?

வேகப் பந்து வீச்சாளர்கள் அதிகம் இல்லாமல் தடுமாறும் இந்திய அணியில் தனக்கென ஒரு இடத்தைப் பிடிக்கத் தவறியவர் ஸ்ரீசாந்த். பல்வேறு கிசுகிசுக்கள், சர்ச்சைகளில் சிக்கியவர். இன்று மிகப் பெரிய குற்றச்சாட்டுக் குள்ளாகி கைதுவரை போய் விட்டார். இது கிரிக்கெட் ரசிகர்களை பெரும் அதிர்ச்சிக் குள்ளாக்கியுள்ளது.

ஸ்ரீசாந்த் சர்ச்சைகளின் தொகுப்பு இதோ....

2010-11இல் தென்னாபிரிக்காவுக்கு இந்திய அணி சென்றிருந்த போது கிமீம் ஸ்மித்துக்கும், ஸ்ரீசாந்த்துக்கும் இடையே மோதல் வெடித்தது. வார்த்தைச் சண்டையில் ஈடுபட்டார் ஸ்ரீசாந்த். இதுகுறித்து அவர் பின்னர் கூறுகையில், என் பக்கம் தவறு இருந்தாலும் கூட என்னை வேகமாக பந்து வீச தூண்டுவித்தார் ஸ்மித். இதற்காக அவருக்கு நன்றி சொல்கிறேன் என்றார்.

ஆனால் டோனியிடம் அவருக்கு நல்ல பெயர் கிடைக்கவில்லை. ஸ்ரீசாந்த்தை கட்டுப்படுத்துவது கஷ்டம் என்று விமர் சித்தார் டோனி.

2009 ஐ.பி.எல். தொடரின் போது சென்னை சூப்பர் கிங்ஸ் அணி வீரர் மாத்யூ ஹெய்டனுக்கும், ஸ்ரீசாந்த்துக்கும் இடையே உரசல் வெடித்தது. ஸ்ரீசாந்த் பந்து [illegible] கடுப்பான ஸ்ரீசாந்த், வார்த்தையை விட்டார். இதனால் கோபமடைந்த ஹெய்டன், ஸ்ரீசாந்த்தைக் கடுமையாக விமர்சித்தார்

2007 கிரிக்கெட் சுற்றுப் பயணத்தின்போது ஆஸ்திரேலிய வீரர் ஆண்ட்ரூ சைமண்ட்ஸுடன் வார்த்தை மோதலில் ஈடுபட்டார் ஸ்ரீசாந்த்.

2008 ஐ.பி.எல். தொடரின் போது மும்பை இந்தியன்ஸ் அணித் தலைவர் ஹர்பஜன் சிங்கிடம் போய் ஏதோ பேச, கடுப்பான ஹர்பஜன், ஸ்ரீசாந்த் கன்னத்தில் விட்டார் ஒரு அறை.

சர்ச்சைகள் மட்டும்தான் [illegible] என்று [illegible] முடியாது. சாதனையும் இவர் வசம் இருந்தது. கேப்டவுனில் 2011ஆம் ஆண்டு நடந்த டெஸ்ட் போட்டியின்போது ஐந்து இலக்குகளை வீழ்த்தி புதிய சாதனை படைத்தார் ஸ்ரீசாந்த். கேப்டவுனில் இந்திய பந்து வீச்சாளர் ஒருவர் ஐந்து இலக்குகள் வீழ்த்தியது அதுவே முதல் முறையாகும். (ற)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 19 வயதுப் பிரிவுக்கான எறிபந்து

## ஆண்கள் பிரிவில் மானிப்பாய் மெமோறியல் பெண்கள் பிரிவில் யூனியன் கல்லூரி சம்பியன்கள்

யாழ்ப்பாணம், மே 17

யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையே நடத்தப்பட்ட 19 வயதுப் பிரிவினருக்கான எறிபந்துத் தொடரில் ஆண்கள் பிரிவில் மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை அணியும், பெண்கள் பிரிவில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணியும் சம்பியன்களாகத் தெரிவாகின.



நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற எறிபந்துப் போட்டிகளில் ஒரு காட்சி.

மெமோறியல் ச[illegible]ன் நேற்றுமுன்தி[illegible] யாழ்ப்பாணம் இந்துக கல்லூரி மைதானத்தில் இந்த இறுதியாட்டங்கள் நடைபெற்றன. முதலில் இடம்பெற்ற ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை அணியை எதிர்த்து நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அணி களமிறங்கியது.

3 செற்களைக் கொண்ட ஆட்டத்தில் முதலாவது செற்றை 25:19 என்ற புள்ளிகள் அடிப்படையில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அணி தன்வசப்படுத்தியது.



19 வயது ஆண்கள் பிரிவில் சம்பியனாகத் தெரிவாகிய மானிப்பாய் மெமோறியல்

எனினும் இரண்டாவது செற்றையும் கைப்பற்றும் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அணியின் கனவைக் கலைத்து, மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை அணி 25:19 என்ற புள்ளிகள் அடிப்படையில் அந்த செற்றைக் கைப்பற்றியது.

வெற்றியைத் தீர்மானிக்கும் மூன்றாவது செற்றில் இரு அணிகளும் தமது முழுத் திறனையும் காட்டின. விறுவிறுப்பாக இடம்பெற்ற ஆட்டத்தில் 25:21 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றுச் சம்பியனாகியது. மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை அணி.

தொடர்ந்து இடம்பெற்ற பெண்களுக்கான இறுதியாட்டத்தில் யூனியன் கல்லூரி அணியை எதிர்த்து இளவாலை கன்னியர்மடம் பாடசாலை அணி மோதியது.

3 செற்களைக் கொண்ட இறுதியாட்டத்தில் முதலாவது செற்றை 25:7 என்ற புள்ளிகள் அடிப்படையில் இலகுவாகக் கைப்பற்றியது யூனியன் கல்லூரி அணி.

எனினும் இரண்டாவது செற்றை 25:15 என்ற புள்ளிகள் அடிப்படையில் தம்வசப் படுத்தியது இளவாலை கன்னியர்மடம் பாடசாலை அணி.

வெற்றியைத் தீர்மானிக்கும் மூன்றாவது செற்றில் இரு அணிகளும் உத்வேகம் காட்டின. மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்ற ஆட்டத்தில் 25:20 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்றுச் சம்பியனானது யூனியன் கல்லூரி அணி.

(ற-23-422-400)

### ஆண்கள் பிரிவில் யூனியன் மூன்றாமிடம்

19 வயது ஆண்கள் பிரிவில் மூன்றாவது இடத்துக்காக நடைபெறவிருந்த எறிபந்துப் போட்டியில் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியும் மோதவிருந்தன. எனினும் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி அணி மைதானத்துக்கு சமூகம் தராமையால் யூனியன் கல்லூரி அணி மூன்றாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது.

### பெண்கள் பிரிவில் இந்துமகளிர் மூன்றாமிடம்

19 வயது பெண்கள் பிரிவில் மூன்றாவது இடத்துக்காக நடைபெற்ற எறிபந்துப் போட்டியில் பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி அணி மோதியது. 3 செற்களைக் கொண்ட ஆட்டத்தில் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி அணி 25:22, 25:13 என்ற கணக்கில் நேர் இரு செற்களையும் கைப்பற்றி மூன்றாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது.



19 வயது பெண்கள் பிரிவில் சம்பியனாகத் தெரிவாகிய தெல்லிப்பழை யூனியன் கல்லூரி.

## கோலூன்றிப் பாய்தலில் யாழ். வீராங்கனை சாதனை

வலி.வடக்கு, மே 17

இலங்கை மெய்வல்லுநர் சங்கத்தால் நடத்தப்பட்டு வரும் மென்வன்மைப் போட்டிகளில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வீராங்கனை இராசதுரை காவேரி புதிய சாதனை ஒன்றைப் பதிவு செய்துள்ளார்.

கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் நடைபெற்று வரும் இந்தப் போட்டிகளில், கோலூன்றிப் பாய்தலிலேயே இந்தச் சாதனை பதிவு செய்யப்பட்டுள்ளது.

கோலூன்றிப் பாய்தலில் 3.10 மீற்றர் உயரம் பாய்ந்து சாதனையைப் பதிவு செய்துள்ள காவேரி, 2011ஆம் ஆண்டு இலங்கை விமானப் படையைச் சேர்ந்த எஸ்.பி. லியனகே 3 மீற்றர் உயரம் பாய்ந்து ஏற்படுத்தியிருந்த சாதனையை முறியடித்தார். காவேரி அருணோதயாக் கல்லூரியின் பழைய மாணவி என்பதும், தற்போது கடற்படையின் விளையாட்டு அணியில் இடம்பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ற-86)



வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் நடத்தப்படும் வடமாகாண குத்துச் சண்டைப் போட்டி நேற்று பருத்தித்துறை வை.எம்.சீ.ஏ. மண்டபத்தில் நடைபெற்றது. (ற-23)

### கனிஷ்ட மெய்வல்லுநர் போட்டி

## வவுனியா மாவட்டத்துக்கு இதுவரை 4 பதக்கங்கள்

யாழ்ப்பாணம், மே 17

இலங்கை மெய்வல்லுநர் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்றுவரும் 2013 ஆம் ஆண்டுக்கான கனிஷ்ட மெய்வல்லுநர் போட்டியில் வவுனியா மாவட்டம் 4 பதக்கங்களைப் பெற்றுள்ளது.

கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் நேற்று இப்போட்டிகள் இடம்பெற்றன.

18 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான சம்மட்டி எறிதல் போட்டியில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவி ஆர். தர்சிகா 16.88 மீற்றர் தூரம் எறிந்து தங்கப் பதக்கத்தைப் பெற்றுள்ளார்.

16 வயதுப் பிரிவு பெண்களுக்கான 3 ஆயிரம் மீற்றர் வேகநடையில் பூம்புகார் கண்ணகிவித்தியாலய மாணவி கே.கனகேஸ்வரி 20 நிமிடம் 4 செக்கனில் கடந்து தங்கப் பதக்கத்தைப் பெற்றுக்கொண்டார்.

அதேபிரிவில் நெளுக்குளம் மகா வித்தியாலத்தைச் சேர்ந்த வி.மேனகா 23 நிமிடம் 15.6 செக்கனில் கடந்து மூன்றாம் இடத்தைப் பெற்று வெண்கலப் பதக்கத்தைப் பெற்றார்.

20 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான 10 ஆயிரம் மீற்றர் வேகநடையில் கே.கோகிலவாணி 1 மணித்தியாலம் 4.15 நிமிடத்தில் கடந்து மூன்றாம் இடத்தைப் பெற்று வெண்கலப் பதக்கத்தைப் பெற்றுக்கொண்டார்.

இவர்கள் அனைவரும் வவுனியா மாவட்ட மெய்வல்லுநர் சங்கத்தின் சார்பில் போட்டிகளில் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ற-23)

### கனிஷ்ட மெய்வல்லுநர் போட்டி

## பதக்கம் வென்றனர் யாழ். வீராங்கனைகள்

வலி.வடக்கு, மே 17

இலங்கை மெய்வல்லுநர் சங்கத்தால் நடத்தப்படும் கனிஷ்டமெய்வல்லுநர்போட்டிகளில் யாழ். வீராங்கனைகள் பதக்கங்களைப் பெற்றுள்ளனர்.★★

20 வயதுப் பிரிவினருக்கான கோலூன்றிப் பாய்தலில் குலரத்தினம் திலக்ஷனா 1ஆம் இடத்தைப் பெற்று தங்கப்பதக்கத்தைப் பெற்றுக் கொண்டார்.

அதேபிரிவில் இருதயராஜ் மேரி மூன்றாம் இடத்தைப் பெற்று வெண்கலப்பதக்கத்தைப் பெற்றுள்ளார்.

18 வயதுப் பிரிவினருக்கான கோலூன்றிப் பாய்தலில் தெல்லிப்பழை மகாஜன கல்லூரி மாணவி ஜெகதீஸ்வரன் அனிதா 2.90 மீற்றர் உயரம் பாய்ந்து முதலாம் இடத்தைப் பெற்று தங்கப்பதக்கத்தைப் பெற்றுக் கொண்டார்.

அதேபிரிவில் மணிவண்ணன் ஜென்சினா 3ஆம் இடத்தைப் பெற்று வெண்கலப் பதக்கத்தைப் பெற்றுக் கொண்டார்.

23 வயதுப் பிரிவினருக்கான கோலூன்றிப் பாய்தலில் இரத்தினசிங்கம் ஜக்சனா இரண்டாம் இடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கத்தைப் பெற்றுள்ளார். (ற-86)

## கரவெட்டி ஞானம்ஸ் விழ்த்தியது கொலின்ஸை



கரணவாய் சோழங்கன் விளையாட்டுக் கழகம் நடத்தும் கிரிக்கெட் சுற்றுத் தொடரில் கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக்கழக அணி சம்பியனாகத் தெரிவாகியது.

கடந்தவாரம் கரணவாய் மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கொலின்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கொலின்ஸ் விளையாட்டுக் கழக அணி 11.4 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் [illegible] 60 ஓட்டங்களைப் பெற்றது. 61 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய ஞானம்ஸ் விளையாட்டுக்கழக அணி 8.4 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் ஓர் இலக்கை மட்டும் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

ஆட்டநாயகனாக கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக் கழக அணி வீரர் அகிலனும், அதே அணியைச் சேர்ந்த [illegible] தொடர்ஆட்டநாயகனாகவும் தெரிவு செய்யப்பட்டனர். (ற-23)

## மேசைப்பந்தாட்ட போட்டிகள் நாளை

யாழ்ப்பாணம், மே 17

திசைகாட்டி குறுப் ஒவ் கம்பனியின் ஆதரவுடன் யாழ். மாவட்ட மேசைப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் 15, 19 வயதுப்பிரிவு பாடசாலை அணிகளுக்கு இடையிலான மேசைப் பந்தாட்ட போட்டி நாளை சனிக்கிழமை யாழ் மத்திய கல் லூரியில் நடைபெறவுள்ளது.

ஆண், பெண் இரு பிரிவுகளுக்குமான போட்டிகள் காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகி தொடர்ச்சி யாக நடைபெற்று அன்றைய தினமே இறுதியாட்டம் நடை பெறும். (ற-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவி பாலியல் பலாத்காரம்: வவுனியா மாணவர் போராட்டம்



வவுனியா,மே 17

வவுனியா வடக்கு நெடுங்கேணி சேனைப்பிலவைச் சேர்ந்த 7 வயதுடைய மாணவியொருவர் அடையாளம் தெரியாதவர்களினால் பாலியல் பலாத்காரத்துக்கு உள்ளாக்கப்பட்டமை தொடர்பில் உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனக் கோரி, சேனைப்பிலவு மாணவர்கள் நேற்று வகுப்புக்களைப் புறக்கணித்தனர்.

ஊர் மக்களும் கூடி, பாடசாலையைத் திறக்கவிடாமல் தடுத்துப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தப் போராட்டம் நேற்றுக் காலை 3 மணித்தியாலங்கள் நீடித்ததாகவும், போராட்டம் காரணமாகவும், மாணவர்களின் புறக்கணிப்பு காரணமாகவும் பாடசாலை செயற்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

செவ்வாயன்று பாடசாலை முடிந்து வீடு சென்றவேளை, 7 வயது சிறுமியொருவரை அடையாளம் தெரியாதவர்கள் கடத்திச் சென்று காட்டுப்பாங்கான காணியொன்றில் பாழடைந்த கிணற்றருகில் அவர் மீது பாலியல் குற்றம் புரிந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பாழடைந்த கிணற்றைச் சுத்தம் செய்வதற்காகச் சென்றவர்கள் பற்றைகளை வெட்டிக்கொண்டிருந்தபோது, மாலை நாலரை மணியளவில் சிறுமியின் முனகல் சத்தம் கேட்டு, அவரைக் கண்டுபிடித்திருக்கின்றனர்.

சட்டையில் இரத்தம் தோய்ந்த நிலையிலும் வாயிலிருந்து இரத்தம் பெருக்கெடுத்த நிலையிலும், கீறல் காயங்களுடனும் கண்டுபிடிக்கப்பட்ட சிறுமி நெடுங்கேணி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் வவுனியா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

**பொலிஸார் மீது சந்தேகம்**

இந்த விடயம் தொடர்பாக மாங்குளம் சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகருடன் தொடர்பு கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் இது விடயத்தில், பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் சம்பந்தப்பட்டிருக்கலாம் என்று பொதுமக்கள் மத்தியில் சந்தேகம் நிலவுகிறது. இதனால் மக்கள் மத்தியில் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளார்.

இது தொடர்பில் விசேட குழு அமைத்து, நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் குற்றவாளிகளைக் கண்டுபிடித்து நீதியின் முன் நிறுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தன்னிடம் மாங்குளம் சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் ம்பிக்க சிறிவர்த்தன உறுதியளித்திருப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார். (த)

## பொன்சேகாவிடம் வாக்குமூலம்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தில் வைத்து 2006 ஆம் ஆண்டு ஏப்ரல் 25 ஆம் திகதி முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை இலக்குவைத்து மேற்கொள்ளப்பட்ட தற்கொலைத் தாக்குதல் சம்பவம் தொடர்பிலேயே குற்றப் புலனாய்வுப் பிரிவினர் வாக்குமூலம் பெற்றுள்ளனர்.

கோட்டே மத்தியம்பலத்திலுள்ள சரத்பொன்சேகாவின் அலுவலகத்தில் வைத்தே குற்றப்புலனாய்வுப் பிரிவினர் வாக்குமூலத்தைப் பெற்றுள்ளனர். (த)

# 3 பெண்களையும் கிணற்றில் தள்ளிக் கொன்றவர் தந்தையே

## 15 வருடங்களின் பின் நிரூபணம்

யாழ்ப்பாணம், மே 17

சித்தசுவாதீனமற்ற காரணத்தால் தனது மூன்று பெண் பிள்ளைகளையும் கிணற்றில் தள்ளிவீழ்த்தி அவர்களுக்கு மரணத்தை ஏற்படுத்தியவர் தந்தையே என்பது 15 வருடங்களின் பின்னர் நீதிமன்றில் நேற்று நிரூபணமானது.

பரபரப்பான இந்த வழக்கின் விவரம் வருமாறு–

அளவெட்டியை சேர்ந்த விஜயகுமார் என்பவரது வீட்டுக் கிணற்றில் அவரது மூன்று பெண் பிள்ளைகளும் 1998 ஆம் ஆண்டு ஜூலை 4 ஆம் திகதி சடலமாக மீட்கப்பட்டிருந்தனர். வி.லோஜினி(வயது-19), மற்றும் வி.லிங்காதேவி(வயது-17), வி.தயானி (வயது-15) ஆகியோரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர்களாவர். அதேவேளை குறித்த பெண்களின் தந்தை நஞ்சருந்திய நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். உடற்கூற்றுப் பரிசோதனையில் இறந்துபோன லோஜினியின் கர்ப்பப்பையில் 24 வாரங்கள் வளர்ச்சியடைந்த நிலையில் ஆண்சிசு இருந்தமை கண்டறியப்பட்டது. மூன்று பெண்களும் சடலமாக மீட்கப்பட்ட சம்பவத்தில் அவர்களது தந்தையான விஜயகுமார் சந்தேகநபராகக் குறிப்பிடப்பட்டிருந்தார்.

இது குறித்த வழக்கு மல்லாகம் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டு, யாழ்.மேல்நீதிமன்றில் பாரப்படுத்தப்பட்டு விசாரணை நடைபெற்று வந்தது.

இதன்போது மனநல வைத்திய நிபுணர் சிவயோகன் ஏப்ரல் 2 ஆம் திகதி சாட்சியமளிக்கையில், சந்தேகநபர் மனநலம் பாதிக்கப்பட்டவர் என்பதை உறுதிப்படுத்தினார்.அத்துடன் சந்தேகநபர் மிகுந்த மன உளைச்சலோடும், மனச்சோர்வோடும் வாழ்ந்து வருகிறார் என்றும் தனது அவதானிப்பைத் தெரிவித்தார்.

சந்தேகநபரான விஜயகுமார் சாட்சியமளிக்கையில்,

ஒருநாள் எனது மனைவியும், மைத்துனியும் மூத்தமகளை வைத்தியசாலைக்கு அழைத்துச்சென்றனர். வைத்தியசாலையில் இருந்து வந்தவுடன் மூத்த மகள் கர்ப்பமாக இருக்கிறாள் என்ற தகவலைச் சொன்னார்கள். அதைக் கேட்டவுடன் கவலையும் வேதனையும் ஏற்பட்டது. பின்னர் என்ன நடந்ததென்று எனக்குத் தெரியாது. கண்விழித்துப்பார்த்த போது, வைத்தியசாலையில் இருந்தேன். அதன் பின்னர் விளக்கமறியலுக்கு கொண்டு செல்லப்பட்டேன் என்று தெரிவித்திருந்தார்.

மனநல மருத்துவர், சந்தேகநபர் என்போரின் சாட்சியங்கள் மூலம் சந்தேகநபரே தனது 3 பெண்பிள்ளைகளையும் கிணற்றில் தள்ளி மரணத்தை ஏற்படுத்தினார் என்பது நீதிமன்றில் நிரூபணமானது.

இதனால்எதிரி சித்தசுவாதீனமற்ற நிலையில் குறித்த சம்பவம் இடம்பெற்றிருப்பதால், அவரைக் கொலைக்குற்றத்துக்கோ, கொலையல்லாத மரணம் விளைவித்தகுற்றத்துக்கோ குற்றவாளியாக கொள்ளமுடியாது என்று கண்ட நீதிமன்றம், இதுகுறித்து நீதியமைச்சுக்கு அறிக்கை அனுப்ப உத்தரவிட்டுள்ளது. (ங-4)

## வெளிநாட்டுக்கு செல்லமுயன்ற 41 பேர் கைது

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திட்டமிட்டிருந்தனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில் பொலிஸாருக்கு கிடைத்த தகவல்களையடுத்து குறித்த தனியார் விடுதியில் தங்கியிருந்த 41 பேர் கைது செய்யப்பட்டனர். இவர்களில் 27 பேர் ஆண்களும், 5 பெண்களும், 9 சிறுவர்களும் அடங்குவர் என்று தெரிவிக்கப்படுகின்றது. இதுகுறித்து சிலாபம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக பொலிஸ் ஊடக மத்திய நிலையம் தெரிவித்தது. (த-5)

## சர்வதேசத்தை புறந்தள்ளின் விளைவுகள் விபரீதமாகும்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேரத்தின் போது உரையாற்றிய, லிபரல் ஜனநாயகக் கட்சியின் துணைத் தலைவர் சைமன் ஹியூஸ், இலங்கையின் மனித உரிமை மீறல்களைக் கருத்தில் கொண்டு, அங்கு நடக்கும் பொது நலவாய மாநாட்டில் கலந்து கொள்ளும் பிரிட்டனின் முடிவை ஆதரிக்க முடியாது என்றார்.

அத்துடன் இலங்கையின் மோசமான ஆட்சியாளர்களின் நடவடிக்கைகளுக்கு நாம் எப்படிப் பதிலளிக்க வேண்டும் என்று விளக்கமளிக்க வேண்டும் என்றும், எதிர்காலத்தில் பொதுநலவாய அமைப்பு தாம் மனித உரிமைகளில் நம்பிக்கை வைத்திருக்கிறோம் என்று வெறுமனே கூறாமல், மனித உரிமைகளுக்காக என்ன செய்தோம் என்பதைக் கூறுவதற்கு நாம் என்ன செய்யலாம் என்பது குறித்து விளக்கமளிக்க வேண்டும் என்றும் பிரிட்டன் பிரதமரிடம் அவர் கோரினார். (த)

## 4 ஆம் மாடிக்கு சிவசக்தி ஆனந்தனும்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

''எதிர்வரும் 21ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு வருமாறு இன்றைய (நேற்றைய) தினம் வவுனியா பயங்கரவாத தடுப்புப் பிரிவால் அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது,'' என்று சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார்.

என்ன காரணத்துக்காக விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளார் என்பது தொடர்பில் தெரியவில்லை என்றார் அவர். (ஒ-5)

## சொல்ஹெய்ம் பேச்சு

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதிநிதிகள் தம்மிடம் தெரிவித்ததாக சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தமிழ் மக்களுக்கென தனியான அரசு என்ற கருத்து நிலைப்பாட்டை மறுதலித்த சொல்ஹெய்ம் புலம்பெயர் தமிழர் அமைப்புக்கள் ஜனநாயக வழிமுறையில் தமது கோரிக்கைகளை வென்றெடுக்கும் வகையில் செயற்பட வேண்டுமென்றார்.

இந்தச் சந்திப்புக் குறித்து சொல்ஹெய்ம் தனது 'டுவிட்டரில்' தகவல் வெளியிட்டுள்ளார். ஆயினும் சந்திப்பு எங்கு நடைபெறுவது என்பது தொடர்பில் அவர் எதுவும் குறிப்பிடவில்லை. (த)


நம்பிக்கையில் உறுதி பெற்று
புதுவாழ்வு வாழ்வோம்
தூய ஆவியார் பெருவிழா
திருவிழிப்பு ஆராதனை
நாளை(18.05.2013) சனிக்கிழமை
புனித மடுத்தீனார் குருமட மைதானம்
மாலை 6.30 மணிக்கு - திருச்செபமாலையுடன் ஆரம்பம்
இரவு 7 மணிக்கு
தூய ஆவியார் திருவிழிப்பு திருப்பலி
தொடர்ந்து ஆராதனைகள்
அதிகாலை 3 மணிக்கு நற்கருணைநாதர் எழுந்தேற்றத்துடன் தூய ஆவியார் அருட்பொழிவு வேண்டி அபிஷேக ஆராதனை
அதிகாலை 4 மணிக்கு ஆயர் தலைமையில்
தூய ஆவியார் பெருவிழா கூட்டுத் திருப்பலி
ஆயத்த வழிபாடுகள்
இதற்கான ஆயத்த வழிபாடுகள் மே மாதம் 15, 16, 17 ஆம் திகதிகளில் (புதன், வியாழன், வெள்ளி) மாலை 4.30 மணி முதல் 6 மணிவரை யாழ். பழைய பூங்கா வீதியிலுள்ள இறைதியான இல்ல மண்டபத்தில் நடைபெறும்.
தினமும் மாலை 4.30 மணிக்கு திருப்பலி, நற்கருணை ஆராதனை
தூய ஆவியாரின் அபிஷேகம் பெற்று நம்பிக்கையில் உறுதியடைந்து புது வாழ்வு பெற அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
(அ/9134)(18.9)
இறைதியானக் குழுவினர். யாழ். மறைமாவட்டம்.

பணிநிலை வெற்றிடம்
எமது நிறுவனத்துக்கு அலுவலக உதவியாளர் பணிக்கான நேர்முகத் தேர்வு இன்றும், நாளையும் எமது காரியாலயத்தில் நடைபெறவுள்ளது.
தகுதியுடையோர் சுயவிவரக்கோவையுடன் நேரில் சமுகமளிக்கவும்.
Best Print
359, Kasthuriyar Road, Jaffna.
(அ/9443)(10.6)

புதிய பாடத்திட்டத்திற்கு அமைவானது
பங்குடமை
A/L 2014 Batch
NEC ஆனைப்பந்தி Sat. Sun 6-7 A.M
புதிய பொருளியல் கல்லூரி (பெருமாள் கோயில் அருகில்) Sat, Sun 12-1 P.M
இரு இடங்களிலும் ஆரம்பம்:- 18.05.2013 சனி (நாளை)
கணக்கீடு உங்கள் ஆசிரியர்
தனிப்பாட அனுமதி உண்டு

Computer Service
கணினி பழுதடைந்து விட்டதா?
கணினி ஒன்று வாங்க ஆசைப்படுகிறீர்களா?
உங்கள் கணினிக்கு Soft ware போடவேண்டுமா? கவலையை விடுங்கள்
உடன் அழையுங்கள் வீட்டிற்கே வந்து செய்து கொடுக்கப்படும்.
* அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் 2000 ரூபா பெறுமதியான Antivirus இலவசம்.
ஜீவா: 077 597 0366
075 842 7595
(38556)(6.11)

அனைத்து கணனிக் கற்கை நெறிகளுக்குமான
புதிய பிரிவுகள் ஆரம்பம்
18.05.2013
20.05.2013 காலை 10.00மணி
மேலதிக விபரங்களுக்கு: 021 4922 741
IIS
INSTITUTE OF INFORMATICS STUDIES
இல 100, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே. 021 222 2831

இந்திய சாஸ்திரியார் வருகை
யாழ்ப்பாணப் புண்ணிய பூமிக்கு மீண்டும் வருகை தந்துள்ளார்
ஓம் சக்தி அருள் வாக்கு பெற்ற பரம்பரை ஜோதிடர்
S.N. குமாரசாமி
கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத்தடை, கல்வித்தடையா, குழந்தை பாக்கியம் மற்றும் புதிய தொழில் தொடங்க வேண்டுமா? தொழில் முன்னேற்றம் இல்லையா, குடும்பப் பிரச்சினையா?வெளிநாடு செல்லத் தடையா?, மனஉளைச்சலா ?
எந்தப்பிரச்சினைக்கும் நேரில் சந்திக்கவும்
(காலை 9 மணி முதல் மாலை 5 மணிவரை)
பீப்பிள்ஸ் இன் (PEOPLE INN)
இல.112/1, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
(பிள்ளையார் ஹோட்டல் முன்பாக)
T.P: 072 6816681, 0726816691

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலையும் வடிவமைப்பும்
3ஆம் வருட மாணவர்களின்
காண்பியற் கலைக் காட்சி

கலைக்கூடம்,
(கலைப்பீட புதிய கட்டடத் தொகுதி- யாழ். பல்கலைக்கழகம்)
காலை 10.00 மணி தொடக்கம் மாலை 4.00 மணி வரை, பிரவேசம் இலவசம்
16, 17, 18 . 05/2013.
3ஆம் வருட நுண்கலைத்துறை மாணவர்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 17.05.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.